




# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:238 | 14-03-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

14.03.2026 மாசி 30
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.23

திதி:
இன்று காலை 7.22 வரை தசமி பின்பு ஏகாதசி.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 2.17 வரை பூராடம் பின்பு உத்திராடம்.

யோகம் :
இன்று காலை 9.55 வரை வரீயன் பின்பு பரீகம்.

கரணம்
இன்று காலை 7.22 வரை பத்திரை பின்பு இரவு 7.52 வரை பவம் பின்பு பாலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று அதிகாலை 2.17 வரை ரோகிணி பின்பு மிருகசீரிடம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30.

இராகு காலம்
காலை 9.00 – 10.30.

எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00.

குளிகை
காலை 6.00 – 7.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# இளைஞர்களே தாய்த்தமிழைக் காக்க உழைப்பை மட்டும் கொடுங்கள் போதும்; உயிரை அல்ல! - முதலமைச்சர்

**சென்னை, மார்ச் 14:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

தாய்த்தமிழைக் காக்க எந்தத் தியாகத்துக்கும் ஆயத்தமாக இருக்கும் இளைஞர்களே... உழைப்பை மட்டும் கொடுங்கள் போதும்; உயிரை அல்ல!

இந்தித் திணிப்புக்கு எதிராக மே 17 இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தில், யாரும் எதிர்பாராத நிலையில் உணர்ச்சிப் பெருக்கால் ரெயில் முன் பாய்ந்து, பலத்த காயங்களுடன் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சகோதரர் சிவா திலீபனையும், உடனிருக்கும் மே17 இயக்க ஒருங்கிணைப்பாளர் சகோதரர் திருமுருகன் காந்தியையும் சந்தித்து ஆறுதல் கூறினேன்.



அப்போது, தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் சகோதரர் சிவா திலீபன் நலம்பெற வேண்டும் என்ற எண்ணமும், "பிள்ளைகளைப்பலிகொடுக்கவா இயக்கம் நடத்துகிறோம்" என்று மொழிப்போரின்போதுபேரறிஞர் அண்ணா சொன்னதும் ஒருசேர என்னுள் எழுந்தது. இருந்து போராட வேண்டும்; அதன் பயனை நாம் இருந்து காண வேண்டும்!தமிழ்நாட்டைச் சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை அரசியல் களத்தில் ஒற்றுமையுடன் முறியடிப்போம். உணர்ச்சிகள் நம் அறிவாற்றலை ஆட்கொள்ள விடாமல், சிந்தித்துச் செயல்படுவோம்! எனவே, நமது போராட்ட நோக்கம் சரியானதாக இருந்தாலும், உணர்ச்சிவயப்பட்டு இதுபோன்ற செயல்களை யாரும் செய்யக் கூடாது என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். சகோதரர் சிவா திலீபன் நலம் பெற்றுத் திரும்ப அனைத்துச் சிறப்பு கவனிப்புகளையும் செய்ய மருத்துவர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க அதிபருக்கு கமல்ஹாசன் விடுத்த பகிரங்க எச்சரிக்கை

**சென்னை, மார்ச் 14:**



இந்தியாவின் விவகாரங்களில் வெளிநாடுகளின் தலையீடுகளைக் கடுமையாகச் சாடும் வகையில், மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் முன்னணி நடிகருமான கமல்ஹாசன், அமெரிக்க அதிபருக்கு கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபரின் சமூக வலைத்தளக் கணக்கைக் குறிப்பிட்டுப் பதிவிட்டுள்ள அவர், "சுதந்திரமானதும்இறையாண்மையுள்ளதுமான ஒரு தேசத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள். கடல் கடந்து தூர தேசங்களில் இருந்து வரும் அந்நிய நாடுகளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் நிலையில் நாங்கள் இனியுமில்லை" என அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அமெரிக்க அதிபரே, உங்களால் முடிந்தவரை உங்கள் நாட்டு விவகாரங்களை, உங்கள் வேலையை மட்டும் பார்த்துக் கொண்டு போங்கள்" (Mind your own business) என மிகவும் கடுமையான தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இறைமையுள்ள இரு தேசங்களுக்கு இடையிலான பரஸ்பர மரியாதையே உலக அமைதிக்கான ஒரேயொரு அடிப்படை எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர், அமெரிக்க தேசத்திற்கும் மக்களுக்கும் அமைதியும் சுபீட்சமும் கிட்ட வாழ்த்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# காவல் துறையின் மெத்தனம் ஏற்புடையது அல்ல: தூத்துக்குடி மாணவி கொலை வழக்கில் ஐகோர்ட் கண்டனம்

**மதுரை, மார்ச் 14:**

தென் மாவட்டங்களில் நடைபெறும் குற்றச் சம்பவங்கள் வருத்தம் அளிப்பதாக உள்ளது என உயர் நீதிமன்ற நீதிபதிகள் வேதனை தெரிவித்தனர்.

தூத்துக்குடியைச் சேர்ந்த வழக்கறிஞர் மாரீஸ்வரி, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: விளாத்திகுளம் குளத்தூர் பகுதியில் மார்ச் 10-ம் தேதி மாலை இயற்கை உபாதை கழிக்க சென்ற 12-ம் வகுப்பு மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

மாணவி காணாமல் போனது தொடர்பாக புகார் அளிக்கப்பட்டபோது பெண் காவல் ஆய்வாளர் உரிய நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளார். மாணவியின் பெற்றோரை காவல் ஆய்வாளர் மோசமாக பேசியுள்ளார். சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கடந்தும் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

புகார் அளித்த உடனே போலீஸார் நடவடிக்கை எடுத்திருந்தால் மாணவி காப்பாற்றப்பட்டிருக்கலாம்.



போலீஸாரின் தாமதம் காரணமாக மாணவியின் உயிர் பறிபோயுள்ளது. தற்போது போலீஸார் தங்களின் மெத்தன போக்கை சமாளிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் இந்த வழக்கை உள்ளூர் போலீஸார் விசாரித்தால் நியாயம் கிடைக்காது. எனவே, மாணவியின் குடும்பத்துக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்கவும், வழக்கு விசாரணையை சிபிஐ-க்கு மாற்றியும் உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வு இன்று விசாரித்தது. அரசுத் தரப்பில், 'விசாரணை சரியான பாதையில் செல்கிறது. குற்றவாளிகளை பிடிக்க 10 தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. குற்றவாளிகளை கைது செய்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விசாரணையை வேறு அமைப்புக்கு மாற்றுவதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. பதில் மனு தாக்கல் செய்ய கால அவகாசம் வேண்டும்' எனக் கூறப்பட்டது.

பின்னர் நீதிபதிகள், 'தென் மாவட்டங்களில் கடந்த ஒரு மாதத்தில் நடைபெறும் இதுபோன்ற குற்ற நிகழ்வுகள் நீதிமன்றத்துக்கும் வருத்தம் அளிக்கின்றன. அதே நேரத்தில் குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும் என அழுத்தம் கொடுக்கும்போது சரியான குற்றவாளிகளை கைது செய்யவோ, விசாரணையை சரியாக நடத்தவோ முடியாத நிலையை உருவாக்கும். வழக்கில் அறிவியல்பூர்வமான முறையில் சான்றுகளை சேகரிக்க வேண்டும். இதுபோன்ற விஷயங்களில் முறையாக விசாரணை நடத்த அவகாசம் வழங்காமல் அழுத்தம் தருவது விசாரணை சரியான பாதையில் செல்வதற்கு இடையூறு ஏற்படுத்தும். வழக்கு விசாரணை குறிப்புகளை போலீஸார் தாக்கல் செய்ய வேண்டும்" என்றனர்.

மனுதாரர் தரப்பில், "மாணவியின் பெற்றோர் புகார் அளித்த உடனே போலீஸார் நடவடிக்கை எடுக்கவில்லை" எனக் கூறப்பட்டது.

அதற்கு நீதிபதிகள், "போலீஸார் இதுபோன்ற புகார்களை மெத்தனமாக கையாளுவது ஏற்கத்தக்கது அல்ல" என்றனர். பின்னர் விசாரணையை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# மாதவிடாய் விடுப்பு அளித்தால் பெண்களை வேலைக்கு அமர்த்த மாட்டார்கள்: உச்சநீதிமன்றம்

**புதுடில்லி, மார்ச் 14:**

பணிபுரியும் பெண்களுக்கு நிறுவனங்களில் மாதவிடாய் காலத்தில் ஊதியத்துடன் கூடிய கட்டாய விடுப்பு அளிக்க மாநிலங்களுக்கு சட்டம் இயற்ற உத்தரவிட வேண்டும் எனக் கோரி உச்சநீதிமன்றத்தில் ஷைலேந்திர மணி திரிபாதி என்பவர் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு நேற்று (வெள்ளிக்கிழமை) தலைமை நீதிபதி சூர்ய காந்த் அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போதுவிசாரணையின்போது நீதிபதிகள், "பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் ஊதியத்துடன் கட்டாய விடுப்பு என்று சட்டம் கொண்டுவந்தால் அது பெண்களின் வாழ்க்கையைப் பாதிக்கும். ஊதியத்துடன் விடுப்பு என்றால் நிறுவன உரிமையாளர்கள், பெண்களை வேலைக்கு அமர்த்த மாட்டார்கள். பெண்களின் வாய்ப்புகள் பறிபோகும்.

ஆனால், அனைத்து நிறுவனங்களுக்கும் கட்டாயமாக்கினால் அது பணியிடங்களில் பெண்களின் பங்கைக் குறைக்கும். அரசியலமைப்புரீதியாக பெண்களுக்கு உரிமைகள் உள்ளன. ஆனால், சந்தை நிலவரத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதுவரை இதுதொடர்பாக எந்த பெண்ணும் நீதிமன்றத்தை அணுகவில்லை" என்று கூறி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# பொருளாதார, போர் நெருக்கடிகளை சமாளிக்க ரூ.1 லட்சம் கோடி மதிப்பில் புநிதி தொகுப்பு

**புதுடெல்லி, மார்ச் 14:**

ஈரான் - அமெரிக்கா போரால் இந்தியாவில் சமையல் கியாஸ் சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வணிக சிலிண்டர்கள் விநியோகம் பாதிக்கப்பட்டு இருப்பதால் ஓட்டல்களில் நிலைமையை சமாளிக்க முடியாமல் திணறி வருகின்றன. நாட்டில் நிலவும் சமையல் கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் அமளியில் ஈடுபட்டு வருகின்றன.

நேற்று காலை மக்களவை கூடியதும் இதே விவகாரத்தை முன்வைத்து எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. கேள்வி நேரத்தில் அவையில் இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என்று சபாநாயகர் கோரிக்கை விடுத்தார். எனினும், எதிர்க்கட்சி எம்பிக்கள் தொடர்ந்து கோஷங்கள் எழுப்பினர். இதையடுத்து அவையை பிற்பகல் 2 மணி வரை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

இந்த நிலையில், உலகளாவிய பொருளாதார மற்றும் போர் நெருக்கடிகளை சமாளிக்க, ரூ.1 லட்சம் கோடி மதிப்பில் *(Economic Stabilisation Fund)* என்ற புதிய நிதியை உருவாக்க உள்ளதாக நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் மக்களவையில் அறிவித்துள்ளார். சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வால் பொருளாதாரம் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தவும் இந்த நிதி பயன்படுத்தப்படும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# திமுக கூட்டணியில் கொமதேகவுக்கு 2 தொகுதிகள் ஒதுக்கீடு: உதய சூரியன் சின்னத்தில் போட்டி

**சென்னை, மார்ச் 14:**

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சிக்கு (கொமதேக) இரண்டு தொகுதிகள் ஒதுக்கீடு செய்து ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு கூட்டணி கட்சிகளுடனான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இந்நிலையில், திமுக கூட்டணியில் கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



இது தொடர்பாக திமுக தரப்பில் வெளியான அறிக்கையில், "நடைபெற உள்ள 2026 சட்டமன்றப் பொதுத்தேர்தலில், முதல்வர் ஸ்டாலினும், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரனும் இன்று (13-03-2026) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியனர்.

அதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி, தமிழ்நாட்டில் 2 (இரண்டு) சட்டமன்றத் தொகுதிகளில், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது" இவ்வாறு அதில் கூறப்படுகிறது.

திமுகவுடன் தொகுதிப் பங்கீடு முடிவடைந்த பின்பு கொமதேக பொதுச்செயலாளர் கொங்கு ஈஸ்வரன் செய்தியாளர்களுக்கு அளித்தப் பேட்டியில், "கூட்டணியின் நலன் கருதியும், நல்லதொரு ஆட்சி தமிழகத்தில் அமைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்தது. என்டிஏ கூட்டணி கட்சிகள் ஓரிடத்தில் கூட எடப்பாடி பழனிசாமியின் ஆட்சி சிறப்பாக இருந்தது எனக் கூறவில்லை" என்று தெரிவித்தார்.







## திருக்குறள் குறள்-558

**இன்மையின் இன்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்**



முறை செய்யாத அரசனுடைய கொடுங்கோல் ஆட்சியின் கீழ் இருக்கப் பெற்றால், பொருள் இல்லாத வறுமை நிலையைவிடச் செல்வநிலை துன்பமானதாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



ஆழமான அன்பை
விட சரியான புரிதல்
தான்...
எல்லா
உறவுகளையும்
நட்புகளையும்
நம்முடன் நீண்ட காலம்
வாழ வைக்கும்

**உஷா முத்துராமன்**

## போளூர் பேருந்து நிலையம் எதிரில் மனிதநேய மக்கள் கட்சி சார்பில் ரமலான் நோன்பு கஞ்சி விநியோகம்



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் பேருந்து நிலையம் காமராஜர் சிலை அருகில் நேற்று மனிதநேய மக்கள் கட்சி மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் புனித இஸ்லாமிய மாத நோன்பு கஞ்சி அனைத்து பொது மக்களுக்கும் வழங்கப்பட்டது. பெரும்பாலான மக்கள் நோன்பு கஞ்சியை விரும்பி பெற்றுக் கொண்டார்கள். நிகழ்ச்சியில் நகரத் தலைவர் மதீனா ஸ்டீல் அஷ்ரப் அவர்கள் முன்னிலையில் திருவண்ணாமலை மாவட்ட வழக்கறிஞர் அணி அஸ்கர் பாஷா, போளூர் நகர செயலாளர் சாதிக் பாஷா மற்றும் மொசைக்கீர் மற்றும் உமர் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

## 2026 பொது தேர்தலை முன்னிட்டு அடிப்படை வசதிகளை குறித்து ஆய்வு



திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் கரியமங்கலம் ஊராட்சிக்கு உட்பட்ட கோணாக்குட்டை பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய அடிப்படை வசதிகளை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## 2026 பொதுத் தேர்தலில் பணியாற்றுவது குறித்து ஆலோசனை கூட்டம்



**திருவண்ணாமலை மார்ச் 14:**
மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளர் உயர்திரு எ. வ. வேலு அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுடன் வரும் சட்டமன்றத் தேர்தலின் பணியாற்றுவது தொடர்பாக ஆலோசனை வழங்கி உரையாற்றினார். நிகழ்ச்சியில் உயர்திரு நாடாளுமன்ற உறுப்பினர் C. N அண்ணாதுரை அவர்கள், மாவட்டம், மாநகரம், ஒன்றிய பேரூர், இளைஞர் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## எல்ஐசி உதவியுடன் காது கேளாத குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்க முடிகிறது

### சிஎம்சி இயக்குனர் டாக்டர் விக்ரம் மேத்யூஸ் தகவல்!



**வேலூர் மார்ச் 14:**
LIC கோல்டன் ஜூபிலி அறக்கட்டளை, சிஎம்சி வேலூருடன் இணைந்து, காது கேளாத குழந்தைகளின் வாழ்வை மாற்றும் கோக்லியர் உள்வைப்பு (cochlear implant) அறுவை சிகிச்சைகளை ஆதரித்து வருகிறது. எல்ஐசி கோல்டன் ஜூபிலி அறக்கட்டளை, காது கேளாத குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கையை மாற்றியமைத்து, இலவச காது கேளாதோர்கான உள்வைப்புகளை implants வழங்குவதன் மூலம், அவர்களுக்கு காது கேட்கவும், பேசவும் வாய்ப்பளித்துள்ளது. சென்னை தெற்கு மண்டல அலுவலகத்தின் இந்திய எல்ஐசியின் மண்டல மேலாளர் கே. முரளிதர், கோக்லியர் உள்வைப்பு அறுவை சிகிச்சை திட்டத்திற்கான பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார். பிறப்பிலிருந்தே காது கேளாமையுடன் இருக்கும் குழந்தைகள் பேச இயலாதவர்களாகின்றனர். மேலும் அவர்கள் பெரும்பாலும் காது கேளாதவர்கள் என்று முத்திரையிடப்படுகிறார்கள்.

லேசான குறைபாடு முதல் மிதமான காது கேளாமை உள்ளவர்களுக்கு காது கேளாதோர்க்கு உதவும் அதே வேளையில், ஆழ்ந்த காது கேளாமை உள்ள குழந்தைகளுக்கு கோக்லியர் உள்வைப்பு போன்ற மேம்பட்ட மறுவாழ்வு சாதனங்கள் தேவைப்படுகின்றன. ஒரு கோக்லியர் உள்வைப்பு கருவி என்பது உள் காதுகளின் சேதமடைந்த பகுதிகளைத் தவிர்த்து, இந்த குழந்தைகளுக்கு ஒலி உணர்வை வழங்க ஒரு மின்னணு மருத்துவ சாதனமாகும்.

குழந்தைகள் கேட்கத் தொடங்கியதும், அவர்கள் படிப்படியாக தீவிர சிகிச்சையின் உதவியுடன் பேசத் தொடங்குகிறார்கள். இந்த தலையீடு அவர்களின் முழு வாழ்க்கையையும் மாற்றும், இதனால் அவர்கள் வழக்கமான பள்ளிகளில் ஒருங்கிணைக்கவும் சமுதாயத்தில் செயல்பாட்டு உறுப்பினர்களாகவும் மாற முடியும். வேலூர் சிஎம்சியில் உள்ள ஓட்டோலரிங்காலஜி துறை, தகுதியுள்ள 17 குழந்தைகளுக்கு கோக்லியர் இம்பிளான்டேஷன் அறுவை சிகிச்சைகளைச் செய்து, அவர்களின் வாழ்க்கையை மாற்றும் வாய்ப்பை வழங்கியுள்ளது. இம்பிளான்ட், அறுவை சிகிச்சை மற்றும் சிகிச்சையின் செலவை ஈடுகட்டிய இந்திய எல்ஐசியின் தாராள ஆதரவுடன், இந்தக் குழந்தைகள் இந்த அதிநவீன தொழில்நுட்பத்தை அணுக முடிந்தது.

வேலூர் சிஎம்சி இயக்குனர் டாக்டர் விக்ரம் மேத்யூஸ் இதைப்பற்றி கூறுகையில், "இந்திய எல்ஐசியின் தாராளமான ஆதரவிற்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இது இந்த வாழ்க்கையை மாற்றும் சிகிச்சையை மானிய விலையில் வழங்க எங்களுக்கு உதவுகிறது. மேலும் இது பல குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நம்பிக்கையை அளிக்கிறது. ஆரம்பகால அடையாளம் மற்றும் சரியான நேரத்தில் மறுவாழ்வு அளிப்பதன் மூலம், இந்தக் குழந்தைகள் இயல்பான வாழ்க்கையில் ஈடும் வாய்ப்பை எதிர்நோக்கலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.


## ஒடுகத்தூரில் புதிய பேருந்து நிலைய திறப்பு விழா!



**வேலூர், மார்ச் 14:**
திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு. க. ஸ்டாலின் வாழ்த்துக்களுடன், வேலூர் தெற்கு மாவட்டம், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி ஒடுகத்தூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலைய திறப்பு விழா நடந்தது. விழாவில் வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி. நந்தகுமார் ,அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்து ,புதிய பேருந்து வழித்தடத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, பேரூராட்சி செயலாளர் ஆர். பெருமாள் ராஜா, பேரூராட்சி தலைவர், துணை தலைவர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பிரகாஷ், பொது குழு உறுப்பினர் மணிமாறன், உள்ளாட்சி பிரதிநிதிகள் ,கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## 19 ஆம் நாள் மண்டல பூஜையில் தங்க கவசத்தில் நம் வாசவி அம்மன்









தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் 19-ஆம் நாளில் மண்டல பூஜையில் நம் வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் சுக்கிரவாரம் நன் நாளில் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரத்துடன், தங்க கவசத்துடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி,பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகாதீபாரதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. உபயதாரர் மோகன் குமார் பிரியா குடும்பத்தினர் (கனடா ) அக்கா குடும்பத்தினர்( கிருத்திகா சபரிநாத் ) தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## கலைஞர் நூற்றாண்டு மலர் அங்காடி, நவீன எரிவாயு தகன மேடை, நியாய விலை கடை, பேரூராட்சி வாகனக்கிடங்கு திறப்பு விழா







திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி பகுதியில் கட்டி முடிக்கப்பட்ட மலர் அங்காடி, பகுதிநேர கலைஞர் நூற்றாண்டு மலர் அங்காடி, நவீன எரிவாயு தகனமேடை, பகுதிநேர நியாய விலை கடை, பேரூராட்சி வாகனக்கிடங்கு ஆகியவற்றை மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் திறந்து வைத்தார். கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் திரு ஏ.எஸ். ஆறுமுகம் அவர்கள் கீழ்பென்னாத்தூர் நகர செயலாளர் திரு சி. கே. அன்பு அவர்கள்,திரு. சரவணன் அவர்கள் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் திறப்பு விழாவில் அனைவரும் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## தங்க பல்லக்கில் ஸ்ரீ பெருமாள்



ஸ்ரீ வித்யா இராஜகோபால ஸ்வாமி திருக்கோயில், இராஜ மன்னார்குடி. பங்குனி ப்ரும்மோத்ஸவ ஆறாம் திருநாள் காலை தங்க பல்லக்கில் ஸ்ரீ பெருமாள் சிக்குதாடை இராஜ அலங்காரம் புறப்பாடு, யானை வாகன மண்டபம் செல்லுதல்.

## ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீரங்க மாசி மாதம் ஊஞ்சல் சேவை



ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீரங்க மாசி மாதம் வெள்ளிக்கிழமை ஊஞ்சல் சேவை.

## காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் ஸர்வ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!



**வேலூர்,மார்ச் 14:**
வேலூர் மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான்பட்டறையில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார்.

இந்த ஸ்ரீராகவேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை, ஸ்ரீசத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது.

இதனை ஸ்ரீ க. மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. வியாழக் கிழமையை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது. இதைத் தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது.

பக்தர்கள் தரிசனம் செய்தனர். இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர். இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது.

பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.

## கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு: எம்எல்ஏ பங்கேற்பு



**வந்தவாசி, மார்ச் 14:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சத்யா நகர் தனியார் திருமண மண்டபத்தில் சமூக நலன் மகளிர் உரிமைத் துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக வந்தவாசி எம்எல்ஏ எஸ். அம்பேத்குமார் பங்கேற்று, சீர்வரிசை பொருட்களை வழங்கினார். குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் கண்ணகி, அபிராமி, ஒன்றிய செயலாளர் இளங்கோவன், டிடி ராதா, சுந்தரேசன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

**பா.சீனிவாசன், வந்தவாசி.**



# தேர்தல் கொண்டாட்டம் 2026



## இவர்கள் கூறுவதென்ன?

### கட்சிப் பெயரை அறிவித்தார் சசிகலா!




ஜெயலலிதாவின் தோழி சசிகலா, புதிய கட்சியைத் தொடங்குவதாக ராமநாதபுரத்தில் நடந்த மாநாட்டில் பிப். 24-ஆம் தேதி அறிவித்த நிலையில், நேற்று கட்சியின் பெயரை அறிவித்துள்ளார். சென்னை போயஸ் தோட்டத்தில் தன்னுடைய ஆதரவாளர்களுடன் செய்தியாளர்களை சந்தித்த சசிகலா, ஜெயலலிதா மறைவுக்குப் பின் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில், அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் பெயரில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் போட்டியிடுவோம் என்றும் சசிகலா அறிவித்தார். மேலும், இந்தக் கட்சியின் சின்னத்தையும் அவர் அறிவித்துள்ளார். தென்னந்தோப்புதான், அபுமமுக கட்சியின் சின்னம். இதன் மூலம் நான் தனி மரமாக வரவில்லை, தோப்பாகத்தான் வந்துள்ளேன், நான் என்றைக்குமே மக்களுடன்தான் இருப்பேன் என்பதற்கே இந்த சின்னம் சாட்சி. ஒருமித்த கருத்துகள் கொண்ட கட்சிகளுடன் கூட்டணி வைத்து தேர்தலில் போட்டியிடுவேன். எடப்பாடி பழனிசாமி சாதித்தாரா இல்லையா என்பது தேர்தல் முடிவுகள் வந்த பிறகு தெரிந்துவிடும் என்றும் சசிகலா கூறினார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா, பிப். 24-ஆம் தேதி புதிய கட்சியைத் தொடங்குவதாக ராமநாதபுரத்தில் நடந்த மாநாட்டில் அறிவித்த நிலையில், நேற்று கட்சியின் பெயரை அறிவித்துள்ளார். அவரது கட்சியின் பெயரில் ஜெயலலிதா பெயர் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், புரட்சித் தலைவர் பெயர் இடம்பெற்றுள்ளது.

### வசனம் எல்லாம் மேடையில் மட்டும்தான் பேச முடியும்: வடிவேலு பரபரப்பு பேச்சு

சென்னை கொளத்தூரில் முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக நடிகர் வடிவேலு கலந்து கொண்டார்.

இதில் பேசிய வடிவேலு, “முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் தொகுதியில் நான் பேச வந்திருப்பது ரொம்ப பெருமையாக உள்ளது. அவருக்கு 73 வயது ஆகிறது என சொன்னாலும், அவரின் செயல்பாடு 37 வயதானவர் போல தான் தெரிகிறது. அவரைப் போல ஒரு தலைவர், முதல்-அமைச்சர் தமிழ்நாட்டுக்கு கிடைப்பது ரொம்ப கஷ்டம். மு.க. ஸ்டாலின் ஒரு சம்பவத்தை திடீரென்று செய்துவிட்டார்.

ரூ.5 ஆயிரம் ரூபாயை அனைவரின் அக்கவுண்டிலும் தமிழ்நாடு அரசு வரவு வைத்தது. அதிகாலையில் இந்த தொகை வந்த நிலையில், திமுகவை அழிக்க வேண்டும் என சொன்னவர்கள் கூட அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார்கள். இதைவிட நிறைய விஷயங்களை ஸ்டாலின் செய்யப் போகிறார். அவர் சாதாரண ஆள் என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பேச வேண்டிய வசனங்கள் எல்லாம் மேடையில் மட்டும்தான் பேச முடியும். ஆனால் செயல்பாடுகள் இருக்கும் ஒரே கட்சி திமுக தான். திமுக மட்டும் ஆட்சியில் இல்லாத மாதிரி யோசித்து பாருங்கள். தமிழ்நாடே அழிந்துவிடும். இந்தக் கட்சியை விட்டால் வேறு கட்சியே இல்லை. வரும் சட்டமன்ற தேர்தலில் 200 இடங்களுக்கு மேலாக நாம் ஜெயிப்போம்” இவ்வாறு அவர் பேசினார்.

### “மோடியையும் பழனிசாமியையும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள்” - அமைச்சர் எஸ்.ரகுபதி

பிரதமர் மோடி பொய்ப் பிரச்சாரங்களின் பிதாமகர். விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன் என்று கூறிவிட்டு, கருப்புச் சட்டங்கள் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தைச் சிதைத்தவர் மோடி. போராடியவர்கள் மீது தடியடி நடத்தினார்கள். லக்கிம்பூரில் விவசாயிகள் மீது காரை ஏற்றிப் படுகொலை செய்தார்கள்.

வேளாண் சட்டங்களை ஆதரித்த பழனிசாமி, விவசாயிகளின் துரோகி. திமுக ஆட்சியில் வேளாண்மைக்கு என தனி பட்ஜெட் மூலம் 5 ஆண்டுகளில் ரூ.1.94 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.2,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2 லட்சம் புதிய இலவச மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதிமுக ஆட்சியில் 1.36 சதவீதமாக இருந்த வேளாண் வளர்ச்சி, தற்போது 5.66 சதவீதமாக உயர்ந்துள்ளது. அமெரிக்க விவசாயப் பொருட்களுக்கு வரிச்சலுகை அளித்து இந்திய விவசாயத்தைச் சவக்குழியில் தள்ள பிரதமர் முயல்கிறார். போதைப் பொருள் தடுக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. தமிழக அரசு குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. விவசாயிகளின் எதிரி மோடியையும் அவருக்குத் துணை போகும் பழனிசாமியையும் மக்கள் மன்னிக்க மாட்டார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சிட்டிங் எம்எல்ஏ-க்களில் 12 பேருக்கு சீட் இல்லை: அலறும் காங்கிரஸ்

காங்கிரஸ் - திமுக தொகுதிப் பங்கீடு நீண்ட இழுபறிக்குப் பிறகு இறுதியான நிலையில், அடுத்ததாக காங்கிரஸின் சிட்டிங் எம்எல்ஏ-க்கள் 12 பேருக்கு மீண்டும் சீட் கொடுக்கக் கூடாது எனவும் அந்தத் தொகுதிகளில் சிலவற்றை தங்களுக்கு விட்டுத்தர வேண்டும் எனவும் திமுக தரப்பிலிருந்து அழுத்தம் தரப்படுவதாகச் சொல்லப் படுவதால் மீண்டும் காங்கிரஸ் வட்டாரம் கொதிநிலைக்கு மாறி வருகிறது.

காங்கிரஸில் தற்போது எம்எல்ஏ-க்களாக இருக்கும் 17 பேரும் மீண்டும் தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று காத்திருக்கிறார்கள். இந்த நிலையில் தான், அவர்களில் 12 பேருக்கு மீண்டும் சீட் கிடைப்பதில் திமுக செக் வைப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுகுறித்து அறிவாலய வட்டாரத்தில் இருந்து நம்மிடம் பேசியவர்கள் “திமுக மற்றும் கூட்டணிக் கட்சி எம்எல்ஏ-க்களின் செயல்பாடுகள்




குறித்து ‘பென்’ நிறுவனம், முதல்வர் மற்றும் உதயநிதியின் பிரத்யேக வியூகக் குழுக்கள், உளவுத் துறை என மூன்று தரப்பிலிருந்தும் எடுக்கப்பட்ட சர்வேயின் படி காங்கிரஸ் எம்எல்ஏ-க்களில் சிலர் மீது திருப்தியான தகவல் இல்லை.

வேளச்சேரி - அசன் மௌலானா, சிவகாசி - அசோகன், வைகுண்டம் - ஊர்வசி அமிர்தராஜ் தொகுதிகளில் கடும் அதிருப்தி நிலவுகிறது. அதனால் இந்தத் தொகுதிகளை இம்முறை திமுக-வே எடுத்துக் கொள்வது என முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இதேபோல், தொடர்ச்சியாக காங்கிரஸ் கட்சிக்கு விட்டுத்தரப்படும் காரைக்குடி தொகுதியிலும் இம்முறை திமுக போட்டியிட வேண்டும் என அங்குள்ள நிர்வாகிகள் பிடிவாதமாக இருக்கிறார்கள். ஆனால், ப.சிதம்பரத்தின் சொந்தத் தொகுதி காரைக்குடி. அவரது ஆதரவாளரான மாங்குடி தான் இப்போது அங்கு எம்எல்ஏ-வாக இருக்கிறார். காரைக்குடி திமுக-வினர் என்னதான் மன்றாடினாலும் சிதம்பரத்தின் விருப்பத்துக்கு மாறாக அங்கே திமுக தலைமை எந்த முடிவையும் எடுக்காது.

குளச்சல் தொகுதியில் தொடர்ச்சியாக பிரின்ஸுக்கே வாய்ப்பளிக்கப் படுவதால் காங்கிரஸ், திமுக என இரு தரப்பிலுமே அதிருப்தி நிலவுகிறது. எனவே, அவரைத்தவிர்த்து இன்னொருவரை அங்கே வேட்பாளராக நிறுத்த காங்கிரஸை வலியுறுத்தும் முடிவில் இருக்கிறது திமுக. சோளிங்கர் எம்எல்ஏ-வான முனிரத்தினமும், விருத்தாசலம் எம்எல்ஏ-வான ராதாகிருஷ்ணனும் கே.எஸ். அழகிரியின் ஆதரவாளர்கள் என்பதால் செல்வப்பெருந்தகை தரப்பே இவர்களுக்கு எதிராக நிற்கிறது. அதனால் இந்தத் தொகுதிகளையும் தங்களுக்கோ அல்லது தேமுதிக உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளுக்கோ ஒதுக்கும் முடிவில் தான் திமுக தலைமை இருக்கிறது.

இதேபோல் பொன்னேரி துரை சந்திரசேகர், விளவங்கோடு தாரகை கத்பர்ட்டுக்கு எதிராகவும் காங்கிரஸுக்குள்ளேயே புகைச்சல் இருக்கிறது. இவர்களையும் மாற்றி விடும்படி காங்கிரஸுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு முறையாக காங்கிரஸ் வசமுள்ள நீலகிரி தொகுதியிலும் இம்முறை திமுக போட்டியிட வேண்டும் என அங்குள்ள நிர்வாகிகள் விரும்புகிறார்கள். பெரும்புதூரில் செல்வப்பெருந்தகைக்கு எதிராகவும் அதிருப்தி நிலவுகிறது. அவருக்கு மீண்டும் சீட் கொடுக்கக் கூடாது என திமுக நிர்வாகிகள் முதல்வரிடம் நேரடியாகவே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவரும் இம்முறை அங்கு போட்டியிடும் மனநிலையில் இல்லை. கிள்ளியூர் ராஜேஷ்குமார் திமுக-வை சங்கடப்படுத்தும் விதமாகப் பேசிவருவதால், அவரையும் மாற்றச் சொல்லும் முடிவில் இருக்கிறது எங்கள் தலைமை” என்றனர்.

இதுகுறித்து திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியிடம் கேட்டதற்கு, “நாங்கள் எந்த சர்வேயும் எடுக்கவில்லை. காங்கிரஸில் யாருக்கு சீட் கொடுக்க வேண்டும் என்பதை அந்தக் கட்சித் தலைமை தான் முடிவு செய்யும்” என்றார்.

## அதிமுகவில் இணைந்தார் காளியம்மாள்!

நாம் தமிழர் கட்சியில் இருந்து கடந்தாண்டு விலகிய காளியம்மால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் வெள்ளிக்கிழமை இணைந்தார்.

நாம் தமிழர் கட்சியின் பெண்கள் பாசறை மாநில ஒருங்கிணைப்பாளராக இருந்த காளியம்மாள், கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமானுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அக்கட்சியில் இருந்து கடந்தாண்டு விலகுவதாக அறிவித்தார்.

இந்த நிலையில், சென்னையில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை இன்று காலை நேரில் சந்தித்த காளியம்மாள், அதிமுகவில் இணைந்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த காளியம்மாள் பேசியதாவது:

”சாதாரண குடும்பத்தில் இருந்து அதிமுக தலைமை பொறுப்புக்கு வந்தவர் எடப்பாடி பழனிசாமி.

தமிழனின் தலைமை கீழ் செயல்படவுள்ளேன். சட்டம் ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பு என மக்கள் ஒவ்வொரு நாளும் பிரச்னையை சந்தித்து வருகிறார்கள். இந்த தேர்தல் மாற்றத்தை கொடுக்கும்.

வருகின்ற சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவது தலைமை முடிவு செய்யும். அதிமுகவின் 2010-ஆம் ஆண்டு மாவட்டப் பொறுப்பில் இருந்துள்ளேன். தற்போது கட்சி தலைமை முடிவு செய்து பொறுப்பு வழங்குவார்கள்” எனத் தெரிவித்தார்.

நாம் தமிழர் கட்சி சார்பில் 2019 மக்களவைத் தேர்தலில் சென்னை வடக்கு தொகுதியிலும், 2024 மக்களவைத் தேர்தலில் மயிலாடுதுறை தொகுதியிலும் போட்டியிட்டுள்ளார்.

## மாநில அந்துஸ்து தராவிட்டால் கூட்டணி இல்லை! பாஜகவுக்கு என்.ஆர். காங்கிரஸ் அழுத்தம்?

புதுச்சேரிக்கு மாநில அந்துஸ்து வழங்கினால் மட்டுமே கூட்டணி குறித்து பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று என்.ஆர். காங்கிரஸ் முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த மாதம் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகளுக்கு இடையே கூட்டணிப் பேச்சுவார்த்தை கிட்டத்தட்ட நிறைவடைந்திருக்கும் நிலையில், புதுவையில் இறுதி செய்யப்படாமல் இருக்கின்றன.

புதுவையில் என்.ஆர். காங்கிரஸ் மற்றும் பாஜகவின் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி செய்து வருகின்றது. கடந்த சட்டப்பேரவைத் தேர்தல் கூட்டணிப் பேச்சுவார்த்தையின் போது, புதுவைக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்ற பிரதான கோரிக்கையை முன்வைத்தே என்.ஆர். காங்கிரஸ்



தே.ஜ. கூட்டணியில் இணைந்தது.

இந்த நிலையில், கடந்த நான்கரை ஆண்டுகளுக்கு மேலாக மத்தியில் பாஜக ஆட்சி செய்தபோதிலும் புதுவைக்கு மாநில அந்தஸ்து வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவி வருகின்றது.

இதுவரை புதுவை அரசு சாாபில் 13 முறை தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த மாத தொடக்கத்தில் புதுச்சேரியில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்துகொண்ட பிரதமர் நரேந்திர மோடியிடம் மாநில அந்தஸ்து கோரி மீண்டும் முதல்வர் ரங்கசாமி கோரிக்கை வைத்தார்.

இந்த நிலையில், புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்கினால் மட்டுமே கூட்டணி குறித்த பேச்சுவார்த்தையை பாஜகவுடன் தொடங்க வேண்டும் என்று என்.ஆர். காங்கிரஸ் முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதல்வர் ரங்கசாமி தலைமையில் வியாழக்கிழமை மாலை கூடிய என்.ஆர். காங்கிரஸ் உயர்நிலைக் குழு நள்ளிரவு 2.30 மணி வரை ஆலோசனை நடத்தியுள்ளது. மாநில அந்தஸ்து, பாஜகவுடனான தொகுதிப் பங்கீடு உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய அமைச்சரும் புதுச்சேரி தேர்தல் பொறுப்பாளருமான மன்சுக் மாண்டவியா, புதுவைக்கு வரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அன்புமணிக்கு எதிராக ராமதாஸ் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு இடைக்காலத் தடை



சென்னை: பாமகவின் பெயர், கொடி, சின்னத்தை பயன்படுத்த அன்புமணிக்கு தடை விதிக்கக் கோரியும், பாமக-வின் தலைவராக தன்னை அங்கீகரிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரியும் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் ராமதாஸ் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி அன்புமணி தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வரவுள்ளது. இந்நிலையில், ராமதாஸ் தொடர்ந்துள்ள வழக்கில் பாமகவின் பொதுச் செயலாளரான தன்னையும் எதிர்மனுதாரராக இணைக்கக் கோரி வடிவேல் ராவணன் தாக்கல் செய்த மனுவை உரிமையியல் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்க மறுப்பு தெரிவித்தது. இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வடிவேல் ராவணன் மனு தாக்கல் செய்திருந்தார். அதில், பாமகவின் பொதுச் செயலாளரான தன்னை இந்த வழக்கில் சேர்க்காமல் உரிமையியல் நீதிமன்றம் விசாரணை மேற்கொள்வது என்பது சரியான நடைமுறை அல்ல. எனவே, உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் என கோரியிருந்தார். இந்த மனு மீதான விசாரணை நீதிபதி டி.வி.தமிழ்ச்செல்வி முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் கே.பாலு ஆஜராகி வாதிட்டார். அதையடுத்து நீதிபதி, பாமக பெயர், கொடி, சின்னம் தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வரும் வழக்கு விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்தும், இந்த மனுவுக்கு ராமதாஸ் உள்ளிட்டோர் பதிலளிக்க உத்தரவிட்டும் விசாரணையை ஏப்.10-ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளார்.

## மார்க்சிஸ்ட் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் பிடிவாதம்: தேமுதிக தொகுதிகளை குறைக்க திமுக பேச்சு

தமிழக சட்டப்பேரவை தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், தொகுதிப் பங்கீட்டில் ஏற்பட்டுள்ள இழுபறியால் திமுக தலைமை கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. சிபிஎம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளை சமாளிக்க, தேமுதிகவுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளைக் குறைக்க திமுக பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வெளியாகியிருக்கும் தகவல் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து பேசும் அறிவாலய வட்டாரங்கள், “ஐயூஎம்எல், மமக, காங்கிரஸ் மற்றும் மதிமுக ஆகிய கட்சிகளுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இருப்பினும், இடதுசாரி கட்சிகள் மற்றும் விசிக உடனான பேச்சுவார்த்தையில் இன்னும் சுமுக முடிவு எட்டப்படவில்லை. இதில் இந்திய கம்யூனிஸ்ட் மூன்று முறை பேச்சுவார்த்தை நடத்தியும் உடன்பாடு இல்லை. மார்க்சிஸ்ட், விசிகவுடன் இரண்டு கட்டப் பேச்சுவார்த்தைகள் முடிந்தும் முன்னேற்றம் இல்லை.

கடந்த தேர்தலின் போது மதிமுக, சிபிஐ, சிபிஎம் மற்றும் விசிக ஆகிய கட்சிகளுக்கு தலா 6 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் இந்த முறை, புதிய கட்சிகளின் வருகையைக் காரணம் காட்டி திமுக தொகுதிகளைக் குறைத்து வருகிறது. “புதிதாகக் கூட்டணிக்குக் கட்சிகள் வந்துள்ளதால், பழைய கூட்டணிக் கட்சிகளுக்கான இடங்களைக்



குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் மதிமுகவுக்கு 4 இடங்கள் வழங்கப்பட்டன. உங்களுக்கும் அதே 4 இடங்கள்தான் தர முடியும்” என திமுக கறாராகத் தெரிவித்துள்ளது.

திமுகவின் இந்த முடிவுக்கு கம்யூனிஸ்ட் மற்றும் விசிக தரப்பில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. “கொள்கை ரீதியாக ஒன்றிணைந்த எங்களுக்குக் குறைவான இடங்களைக் கொடுத்துவிட்டு, தேமுதிகவுக்கு 10 தொகுதிகள் மற்றும் மாநிலங்களவை சீட் வழங்குவது எந்த விதத்தில் நியாயம்?” என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்தே, தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதாவை திமுக தரப்பில் தொடர்பு கொண்டு பேசினர். அப்போது, “தொடக்கத்தில் காங்கிரஸ் கூட்டணியை விட்டு வெளியேறும் சூழல் இருந்ததால் உங்களுக்கு 10 இடங்கள் தருவதாகக் கூறினோம். ஆனால், இப்போது காங்கிரஸ் நீடிப்பதோடு கூடுதல் இடங்களும் கேட்கிறார்கள். ஏற்கெனவே உங்களுக்கு மாநிலங்களவை சீட் வழங்கப்பட்டுவிட்டது. எனவே, சட்டப்பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையைச் சற்று குறைத்துக் கொள்ளுங்கள்” என திமுக கோரிக்கை வைத்துள்ளது. இதற்கு பிரேமலதா தரப்பு ‘ஆலோசித்துச் சொல்வதாக’ இழுபறி நிலையில் பதிலளித்துள்ளது. தேமுதிகவின் தொகுதிகள் குறைந்தால், அது தங்களுக்குச் சாதகமாகும் என கம்யூனிஸ்ட் கட்சிகள் நம்புகின்றன. இதையடுத்து அவர்கள் நாளை (14-ம் தேதி ) தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தைக்கு செல்ல திட்டம் வைத்திருக்கிறார்கள். இதற்கிடையே, 10 இடங்களை எதிர்பார்த்த விசிக, சமரசமாக 8 இடங்களுக்கு இறங்கி வந்தது. ஆனால் திமுக 5 இடங்கள்தான் என கையை விரித்திருப்பது திருமாவளவன் தரப்பை ஏக வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது” என்றனர்.

## ஆலங்குடி கோயிலில் 1,008 சங்காபிஷேகம்

**ஆலங்குடி, மார்ச் 14:**

வலங்கைமான் அருகேயுள்ள ஆலங்குடி ஆபத்சகாயேஸ்வரர் குருபரிகார கோயிலில், உலக நன்மை வேண்டி குருபகவானுக்கு 1,008 சங்காபிஷேகம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதையொட்டி, சிறப்பு ஹோமம், தொடர்ந்து அபிஷேகம், அலங்காரம், பூர்ணாஹுதி பின்னர் குருபகவானுக்கு 1,008 சங்காபிஷேம் நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். குருபகவான் தங்ககவச அலங்காரத்தில் அருள்பாலித்தார். ஏற்பாடுகளை கோயில் நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

## திருவானைக்காவல் கோயிலில் மார்ச் 20-இல் பங்குனி தேரோட்டம்

**திருவானைக்காவல், மார்ச் 14:**

திருவானைக்காவலில் உள்ள சம்புகேசுவரர் உடனுறை அகிலாண்டேஸ்வரி கோயிலில் மார்ச் 20-இல் பங்குனித் தேரோட்டம் நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு, வியாழக்கிழமை காலை சுவாமி-அம்மன் தேர்களில் முகூர்த்தக்கால் நடப்பட்டது.

பல்வேறு சிறப்புடைய இக்கோயிலில் பங்குனி பெருவிழா பிப்ரவரி 24-ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 5-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்த விழாவின் ஒருபகுதியாக, மார்ச் 20-இல் பங்குனித் தேரோட்டம் நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு, வியாழக்கிழமை காலை 8.55 மணிக்கு மேல் 9.45 மணிக்குள் மேஷ லக்னத்தில் சுவாமி, அம்மன் தேர்களில் முகூர்த்தக்கால் நடப்பட்டது.

முன்னதாக, முகூர்த்தக்காலுக்கு விநாயகர் சந்நிதியில் வேத மந்திரங்கள் முழங்க பூஜைகள் செய்து புனிதநீர் தெளிக்கப்பட்டு, முகூர்த்தக்கால் நுனியில் மாவிலை, மாலைகள் கட்டப்பட்டு, சந்தனம் பூசப்பட்டது. அதன் பின்னர் கோயில் உதவி ஆணையர் ம. லெட்சுமணன் மற்றும் கோயில் பணியாளர்கள் தேரில் முகூர்த்தக் காலை நட்டனர். இதைத் தொடர்ந்து இரண்டு தேர்களிலும் கட்டைகள் பதிக்கும் பணி தொடங்கியது. மார்ச் 15-இல் எட்டுத்திக்கு கொடியேற்றம்: தேர் திருவிழாவின் முதல் நாளான மார்ச் 15-ஆம் தேதி எட்டுத்திக்கு கொடியேற்றம் நடைபெறுகிறது. இதில், கோயிலின் மூன்றாம் பிரகாரத்தை சுற்றியுள்ள எட்டுத் திசைகளை நோக்கி அமைந்துள்ள கொடி மரத்தில் கொடியேற்றம் நடைபெறும்.

இதைத் தொடர்ந்து வரும் நாள்களில் சுவாமியும், அம்மனும் வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருளி நான்காம் பிரகாரத்தை வலம் வந்து பக்தர்களுக்கு அருள்புரிவர். விழாவின் முக்கிய நிகழ்வான பங்குனி தேரோட்டம் மார்ச் 20-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதில் சுவாமியும், அம்மனும் தனித்தனியாக பெரிய தேரில் எழுந்தருளி தேரோட்டம் கண்டருளுகின்றனர். விழா ஏற்பாடுகளை கோயில் உதவி ஆணையர் ம. லெட்சுமணன் மற்றும் கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

## பண்ணாரி அம்மன் கோயில் உண்டியல் காணிக்கை ரூ.72.97 லட்சம்

**சேலம், மார்ச் 14:**



பண்ணாரி அம்மன் கோயிலில் உண்டியல் காணிக்கையாக ரூ.72 லட்சத்து 92 ஆயிரத்து 59 பெறப்பட்டுள்ளது.

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள அடாந்த வனப் பகுதியில் பிரசித்தி பெற்ற பண்ணாரி மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தக் கோயிலுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், கேரளம், காநாடகம், ஆந்திரம் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

இந்தக் கோயிலின் பிப்ரவரி மாதம் வசூலான உண்டியல் காணிக்கை எண்ணும் பணி கோயில் துணை ஆணையர் நா. நந்தகுமார், பரம்பரை அறங்காவலர் குழுத் தலைவர் வீ.புருஷோத்தமன் முன்னிலையில் வியாழக்கிழமை நடைபெற்றது. காணிக்கை எண்ணும் பணியில் கோயில் பணியாளர்கள், வங்கிப் பணியாளர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபட்டனர். இதில் உண்டியல் காணிக்கையாக ரூ.72 லட்சத்து 92 ஆயிரத்து 59, 202 கிராம் தங்கம், 370 கிராம் வெள்ளியும் பெறப்பட்டுள்ளதாக கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## மாதாந்திர பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோயிலில் நடை திறப்பு

**குமுளி, மார்ச் 14:**



சபரிமலை கோயிலில் மாதாந்திர பூஜைக்காக இன்று மாலை நடை திறக்கப்பட உள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் ஒவ்வொரு மலையாள மாதத்தின் தொடக்கத்திலும் 5 நாட்கள் வழிபாடு நடைபெறுவது வழக்கம். இதன் படி மீனம் மாத (பங்குனி) பூஜைக்காக நாளை மாலை 5 மணிக்கு கருவறை நடை திறக்கப்பட உள்ளது.

தந்திரி கண்டரரு மகேஷ் மோகனரு தலைமையில் மேல் சாந்தி பிரசாத் நம்பூதிரி நடையை திறப்பார். அன்று சிறப்பு பூஜைகள் எதுவும் நடைபெறாது.

மார்ச் 15 அதிகாலை முதல் 19-ம் தேதி வரை கணபதி ஹோமம், நிர்மால்ய பூஜை, படிபூஜை உள்ளிட்ட பல்வேறு வழிபாடுகள் நடைபெறும்.

பின்பு 19-ம் தேதி இரவு 10 மணிக்கு நடை சாத்தப்படும். ஆன்லைன் முன்பதிவு மூலமே பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவர்.

எனவே பக்தர்கள் தங்களுக்கான தரிசன தேதியை முன்பதிவு செய்து சபரிமலைக்கு வர வேண்டும் என்று தேவசம்போர்டு தெரிவித்துள்ளது.

## திருச்செந்தூர் கோயிலுக்கு மீண்டும் சுற்றுப்பேருந்துகள் இயக்கம்

**திருச்செந்தூர், மார்ச் 14:**



சுமார் ஓராண்டுக்குப் பிறகு திருச்செந்தூா சுப்பிரமணிய சுவாமி கோயில் நாழிக்கிணறு பேருந்து நிலையம் வரை சுற்றுப்பேருந்துகள் மீண்டும் இயக்கப்பட்டன.

கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் கோயில் வளாகத்தில் ரூ. 300 கோடி செலவில் பெருந்திட்ட வளாகப்பணிகள் தொடங்கியதால் நாழிக்கிணறு பேருந்து நிலையமே நெருக்கடியாக இருந்தது. இதனால் நாழிக்கிணறு நுழைவாயிலை தாண்டி அங்குள்ள விடுதிகளில் முன்பதிவு செய்த பக்தர்களின் வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டன.

பக்தர்களின் வசதிக்காக அரசுப் போக்குவரத்து கழகம் சார்பில் கடந்த 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் பகத்சிங் பேருந்து நிலையத்திலிருந்து நாழிக்கிணறு பேருந்து நிலையம் வரை இயக்கப்பட்ட சுற்றுப்பேருந்துகள், குடமுழுக்கு, பெருந்திட்ட வளாகப்பணிகள் காரணமாக கடந்த 2025 ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதம் முதல் தேரடி வரை இயக்கப்பட்டன.

திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு விழா 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் தேதி நடைபெற்று முடிந்தது. இந்நிலையில் பெருந்திட்ட வளாகப்பணிகளில் விடுதிகள், சஷ்டி மண்டபங்கள் மற்றும் பிரம்மாண்ட நுழைவாயில் போன்ற பணிகள் நிறைவடைந்ததையடுத்து, கடந்த பிப். 26 ஆம் தேதி முதல்வா் மு.க. ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார். இதையடுத்து சுமார் ஓராண்டுக்குப் பிறகு மீண்டும் நாழிக்கிணறு பேருந்து நிலைய நுழைவாயில் வரை சுற்றுப்பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இப்பேருந்துகளுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு கிடைத்துள்ளது. நாள்தோறும் அதிகாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரை 3 சுற்றுப்பேருந்துகள் சுழற்சி முறையில் இயக்கப்பட்டு வருகிறது.

## சமயபுரம் மாரியம்மன் கோயில் உண்டியல் காணிக்கை ரூ. 1.25 கோடி

சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில் உண்டியல் காணிக்கைகள் மூலம் ரூ. 1,25, 58,563 ரொக்கம் வியாழக்கிழமை கிடைக்கப் பெற்றது.

இக்கோயிலில், அறங்காவலர் குழுத் தலைவர் வி.எஸ்.பி. இளங்கோவன் தலைமையில் கோயில் இணை ஆணையர் எம். சூரியநாராயணன், அறங்காவலர்கள் சுகந்தி இராஜசேகரன், பெ. பிச்சை மணி, சே.லெட்சுமணன் ஆகியோர் முன்னிலையில் கோயில் பணியாளர்கள், தன்னார்வலர்கள், கல்லூரி மாணவிகள் உண்டியல் காணிக்கைகள் எண்ணும் பணியில் ஈடுபட்டனர்.

இதன் நிறைவில், முதன்மை திருக்கோயிலில் ரூ. 1,25, 58,563 ரொக்கம், 1 கிலோ 006கிராம் தங்கம், 2 கிலோ 217கிராம் வெள்ளி, வெளிநாட்டு பணத்தாள்கள் 131, வெளிநாட்டு நாணயங்கள் 862 கிடைக்கப் பெற்றது.

இக்கோயிலில் கடந்த 26-ஆம் தேதியன்று உண்டியல் காணிக்கைகள் எண்ணப்பட்டன.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

## அரிசியா? சப்பாத்தியா? உடல் எடை குறைய எது சிறந்தது?

வெகு நாட்களாகவே இந்த சர்ச்சை நம்மில் இருக்கிறது. நிறைய பேரின் கணிப்பு அரிசி சாப்பிட்டால் எடை மிக அதிகமாகும் என்பதே. ஆய்வின்படி, இரண்டிலும் கிட்டதட்ட சம அளவில்தான் கார்போஹைட்ரேட்ஸ், புரோட்டீன்ஸ் மற்றும் கொழுப்பு சத்துக்கள் இருக்கின்றன. இரண்டிற்கும் அத்தனை வித்தியாசம் இல்லை. உடல் எடையை குறைக்க முயற்சிக்கும் போது எல்லோரும் உண்ணுகிற உணவை மனதில் எண்ணி உண்கிறார்கள். ஆனால் உண்ணும் அளவைப் பற்றி சிந்தப்பதில்லை. இவர்களாகவே மனதில் நினைத்துக் கொண்டு ஒரு முடிவுக்கு வருகிறார்கள். உண்மையில் எடையை குறைக்க வேண்டும் என்றால், அதற்கு முக்கியமான காரணங்களை அறிந்து கொண்டு அதற்கு ஏற்றாற்போல் உண்ண வேண்டும். முதலில் நாம் எந்த வேலையை செய்கிறோம், எத்தனை மணி நேரம் செய்கிறோம் என்பது மிக முக்கியமான ஒன்று. அதற்கு தகுந்தாற் போல் உண்ண வேண்டும். உட்கார்ந்து கொண்டே வேலை செய்பவர்கள் சிறிது குறைவாக சாப்பிட வேண்டும். சாதமோ அல்லது சப்பாத்தியோ அல்லது பிரியாணியோ எது வேண்டுமானாலும் இருக்கட்டும், அளவோடு சாப்பிடுங்கள். சப்பாத்தி சாப்பிட்டால் உடம்பிற்கு நல்லது என்று எக்கசக்கமாக சாப்பிட்டால் எடை எப்படி குறையும்?

வட மாநிலங்களில் இருப்பவர்களில் முக்கால்வாசி பேர் சப்பாத்தியைத்தான் உண்கிறார்கள். ஆனால் அங்கு இருக்கும் எல்லா நபர்களும் ஒல்லியாக இருக்கிறார்களா? இல்லையே, அங்கேயும் சில பேர் மிகவும் பெருத்தவர்களாக இருக்கிறார்கள், காரணம் மூன்று வேளையும் சப்பாத்தியை சாப்பிட்டாலும் அதிகமான நெய்யை தடவி உண்கிறார்கள். ஆகவே சப்பாத்தி சாப்பிட்டால் எடை குறையும் என்ற கணிப்பு முற்றிலும் தவறு.

இரண்டாவதாக பகல் தூக்கம். நன்றாக வயிறு நிறைய சாப்பிட்டால், எதுவாக இருந்தாலும் சரி, மதிய வேளையில் தூக்கம் வந்து விடும். “உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டல்லவா?” என்பதற்கு ஏற்றாற்போல் சில பேர் மதியம் சாப்பிட்டு விட்டு உறங்கி விடுவார்கள். அதுவும் ஆழ்ந்த தூக்கம். நீங்கள் எதை சாப்பிட்டாலும், பகல் நேரத்தில் தூங்கினால் கண்டிப்பாக எடை குறையாது மாறாக மிக அதிகமாகும். மதிய வேளையில் சாப்பிட்ட பின் சிறிது நேரத்திற்கு ஓய்வு எடுப்பது மிக அவசியம். ஆனால் அரை மணி நேரத்திற்கு மட்டுமே எடுக்க வேண்டும்.

அந்த காலத்தில் நம் முன்னோர்கள் அரிசியைத்தான் அதிகமாக உண்டார்கள், அவர்கள் ஆரோக்கியமாக வாழலையா? ஆகவே எடை விஷயத்தில் சப்பாத்தி அல்லது சாதம் எதுவாக இருந்தாலும் அளவு தான் முக்கிய பங்கை வகிக்கிறது. ஆகவே சரியான நேரத்தில் சரியான அளவில் உண்டு சரியான உறக்கத்தை மேற் கொண்டால் உடலின் எடையை கட்டுபடுத்தலாம்.

## 2 மி.மீ கண்ணாடி துண்டில் 5000 ஹெச்டி படங்கள்... 10,000 ஆண்டுகள் அழியாத கண்ணாடி சிப்!

மைக்ரோசாப்ட் நிறுவனம் ‘புராஜெக்ட் சிலிக்கா’ (PROJECT SILICA) என்ற திட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தரவுகளைப் பாதுகாக்கும் கண்ணாடியாலான சேமிப்பு சாதனத்தை உருவாக்கியுள்ளது.

கம்ப்யூட்டரில் உள்ள ஹார்ட் டிஸ்க்குகள் அல்லது பென் டிரைவ்கள் அதிகபட்சம் 10 முதல் 20 ஆண்டுகள் வரை மட்டுமே உழைக்கும். ஆனால், மனிதகுலத்தின் வரலாற்றையே 10,000 ஆண்டுகளுக்கு பத்திரமாக சேமித்து வைக்கும் விசித்திரமான கண்ணாடித் துண்டை மைக்ரோசாப்ட் உருவாக்கியுள்ளது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? இது ஏதோ சயின்ஸ் பிக்சன் படம் அல்ல; மைக்ரோசாப்டின் ‘புராஜெக்ட் சிலிக்கா’ (PROJECT SILICA) மூலம் நிஜமாகியுள்ளது.



வெறும் 2 மில்லிமீட்டர் தடிமன் கொண்ட சிறிய சதுர வடிவ கண்ணாடித் துண்டு (BOROSILICA GLASS). இதில் மைக்ரோசாப்ட் சுமார் 4.8 டெராபைட் (4.8 TB) தரவுகளைச் சேமித்துள்ளது. சுமார் 20 லட்சம் புத்தகங்கள் அல்லது 5,000 அல்ட்ரா-ஹெச்டி திரைப்படங்களை இந்த ஒரு சிறிய கண்ணாடித் துண்டில் அடக்கிவிடலாம். சாதாரண ஸ்டோரேஜ் சாதனங்கள் வெப்பத்திலோ அல்லது தண்ணீரிலோ பட்டால் அழிந்துவிடும். ஆனால், இந்தச் சிலிக்கா கண்ணாடி ‘சூப்பர்மேன்’ போன்றது. தீயில் போட்டாலும், தண்ணீரில் நனைத்தாலும், மைக்ரோவேவ் கதிர்வீச்சு தாக்கினாலும் இதில் உள்ள தகவல் 1% கூடச் சிதையாது. இதில் லேசர் மூலம் தகவல்கள் ‘செதுக்கப்படுவதால்’, அவற்றை யாராலும் அழிக்கவே முடியாது. எதிர்கால மனிதகுலத்திற்காக நாம் விட்டுச் செல்லும் அழியாத சொத்து.

‘ஃபெம்டோசெகண்ட்’ (FEMTOSECOND) எனப்படும் மின்னல் வேக லேசர் மூலம் கண்ணாடியின் உள்ளே ‘வோக்சல்ஸ்’ (VOXELS - 3D பிக்சல்கள்) வடிவில் தகவல்கள் செதுக்கப்படுகின்றன. ஒரு அதிவேக மைக்ரோஸ்கோப் இந்தக் கண்ணாடியைச் ஸ்கேன் செய்யும். அதில் உள்ள 3D வடிவங்களை செயற்கை நுண்ணறிவு (AI) மீண்டும் தகவல்களாக மாற்றிக் கொடுக்கும். இந்த ஆராய்ச்சியின் பின்னணியில் ஒரு சுவாரசியமான கதை உண்டு. ஆஸ்திரேலிய மற்றும் இங்கிலாந்து விஞ்ஞானிகள் ஏற்கனவே ஐசக் அசிமோவின் புகழ்பெற்ற ‘பவுண்டேஷன்’ நாவல்களைக் கண்ணாடியில் செதுக்கி விண்வெளிக்கு அனுப்பியிருந்தனர். அதன் வெற்றியைத் தொடர்ந்தே, மைக்ரோசாப்ட் இதனை பிரம்மாண்டமான ‘ஆவணக் காப்பகத் தொழில்நுட்பமாக’ (ARCHIVAL STORAGE TECHNOLOGY) மாற்றியது. பராமரிப்பு செலவே இல்லாத, சுற்றுச்சூழலுக்கு உகந்த இந்த ‘சிலிக்கா’ கண்ணாடி சிப், மனிதகுலத்தின் ஒட்டுமொத்த அறிவையும் அடுத்த 10,000 ஆண்டுகளுக்குப் பத்திரமாகப் பாதுகாக்கும் ஒரு ‘காலப் பெட்டகமாக’ (TIME CAPSULE) அமையும் என்பதில் சந்தேகமில்லை.



# "யாரைத்தான் நம்புவதோ?"



அவன் வயது இளைஞர்கள் ஃபேஸ் புக், வாட்ஸ்-அப், ஷாப்பிங் மால், என்று திரிந்து கொண்டிருக்கும் நாகரீக நாளில், அரவிந்த் தன்னை ஒரு சமூக ஆர்வலனாக மாற்றிக் கொண்டு வாழ்ந்தான். ஊரின் குடிநீர் பிரச்சினையை தீர்க்க, தெரு விளக்குப் போட, சாலைகளைச் சீரமைக்க போராடினான்.

அதன் காரணமாய், மக்கள் மத்தியில் நல்ல பெயர் பெற்றவன். இன்னும் அதிக சேவை செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தோடு நகராட்சி தேர்தலில் போட்டியிட முடிவு செய்தான்.

அவனை எதிர்த்து நின்றவன் பழைய அரசியல் நரி... ரகுநாதன்!. பண பலமும், ஆள் பலமும் கொண்டவன். "அவனை ஜெயிக்க முடியாது," என்று பலர் சொன்னார்கள். அரவிந்த் பயப்படவில்லை. நம்பிக்கையோடு இருந்தான். அதற்கு முக்கிய காரணம் அவனுடன் இருக்கும் கார்த்திக். பள்ளி நாட்களிலிருந்து நண்பன். பிரச்சாரத்துக்கு ஓடினான். கூட்டங்கள் ஏற்பாடு செய்தான். பேனர்கள் ஒட்டினான். தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்தது. ரகுநாதன் கூட்டங்களில் அரவிந்தை தாக்கிப் பேசினார். "அனுபவமில்லாத இளைஞன்," என்று விமர்சித்தார்.

வாக்குப்பதிவுக்கு மூன்று நாட்கள் முன், ஒரு வீடியோ வைரலானது. அரவிந்த் கட்டுக் கட்டாய் பணம் வாங்குவது போல், ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது போல் போலியான காட்சி. ஊர் முழுக்க பரபரப்பு. "பொய் வீடியோ!" என்று அரவிந்த் கத்தினான். யாரும் நம்பவில்லை. கூட இருந்தவர்களே சந்தேகத்துடன் பார்த்தார்கள். அந்த இரவு, அரவிந்த் மொபைலுக்கு புது நம்பரிலிருந்து மெசேஜ்.

"உன் வீடியோ எப்படி வந்தது என்று தெரிஞ்சுக்கணுமா?... உன்னோட டேட்டாவெல்லாம் யாரிடம் இருந்திச்சு நினைச்சுப் பாரு..." அவன் மண்டைக்குள் மின்னல். அவனுடைய பிரச்சார அலுவலக லேப்டாப்பை தினமும் கையாள்பவன், வீடியோ எடிட்டிங் தெரிந்தவன், அவனோட எல்லா மீட்டிங்க்களுக்கும் உடன் இருந்தவன், யார்?... யார்? கார்த்திக்.

அடுத்த நாள், கார்த்திக் காணாமல் போனான். ரகுநாதனின் காரில் செல்வதாய் யாரோ சொன்னார்கள்.

தேர்தலில் அரவிந்த் தோற்றான்.

சில நாட்கள் கழித்து, கார்த்திக் நேரில் வந்தான். " அரவிந்த்... என்னை மன்னிச்சுடுடா... அவசரமாய்ப் பணம் தேவைப்பட்டது.... அவன் பெரிய ஆஃபர் குடுத்தான்....நான் சின்ன உதவிதான் செஞ்சேன்..." என்று தலைகுனிந்தான். அரவிந்த் சிரித்தான். கண்ணில் கோபம் இல்லை. "கார்த்திக்... என் எதிரே நின்றவன் என்னை வீழ்த்தலை..... என் அருகே நின்னவன்தான் வீழ்த்தியிருக்கான்," என்றான். கார்த்திக்கால் பேச முடியவில்லை. நா தழுதழுத்தது.



"கார்த்தி... உன்னால ஒரு நல்ல பாடம் கத்துக்கிட்டேன்... உனக்கெதிரே நிற்பவனை விட... உன்னருகில் நிற்பவன் மீது கவனமாயிரு" என்கிற பாடத்தைக் கற்றுக் கொண்டேன்... ரொம்ப நன்றிப்பா"

உடனே அந்த இடத்தை விட்டு அகன்றான் அரவிந்த்.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# காற்றில் வந்த சேதி

வாரத்தில் ஒரு நாள் தான் ஞாயிற்றுக்கிழமை வருகிறது, அன்று ஒரு நாளாவது அக்கடா வென கொஞ்ச நேரம் அதிகமாக தூங்கி ஏழாலாமென்று நினைத்தால்... அன்றைக்கு கூட என் அருமை மனைவி காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுப்பி விட்டு விடுகிறாள். "ஏம்மா இன்னைக்கு ஒரு நாளாவது ஒரு ஒன்பது மணி வரைக்கும் கொஞ்சம் தூங்கி எழுந்து கொள்கிறேனே"என்று என் மனைவி, முகத்தை செல்லமாகவும் சினுங்களாகவும் பார்த்தேன். "வாரத்துல ஆறு நாளும் எதை செய்கிறோமோ அதை ஏழாவது நாளும் கண்டிப்பா செஞ்சு ஆகணும்... அப்பதான் ஹெல்த் கரெக்டா இருக்கும் எந்திரிங்க முதல்ல..."என்றபடி வலுக்கட்டாயமாக கட்டிலிருந்து என்னை கீழே இறங்கினாள். மார்கழி மாதத்தின் காலை பொழுது அது. சில்லென்ற பனிக்காற்றும் பனிமூட்டமும் மனதிற்கும் உடலுக்கும் இதமாய் இருந்தது... இந்தக் குளிரில் வாக்கிங் சென்று வருவது என்றால் சாதாரண விஷயம் இல்லை என்று எனக்கு மட்டும்தான் தெரியும். அவளுக்கு எங்கே எப்படி தெரியப்போகிறது.. ஆனாலும் மார்கழி மாதத்தில் காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து வாக்கிங் சென்று வந்தால் அது உடலுக்கு எத்தனை அபரிமிதமான நன்மைகளை செய்யும் என்றும் நான் படித்து தெரிந்து கொண்டிருக்கிறேன்.

பனிக்காற்றில் ஈரம் மெல்ல என் முகத்தை பதம்பார்க்க அந்தக் குளிரை பொருட்படுத்தாமல் நடை மேடைகளில் மீது நடக்க ஆரம்பித்தேன் . பேரன்பின் உவப்போடு என்னை ஆரத்தழுவியது சில்லென்ற காற்று. அன்றாடம் அந்த நேரத்தில் என்னை சந்திக்கின்ற காற்று பலவித கதைகள் பேசும் ஆனால் இன்று காற்றின் முகம் ஏதோ கொஞ்சம் வாட்டமாக இரு ந்தது. நான்காற்றிடம்கேட்டேன்.



"ஏன் என்னாயிற்று காற்றே முகம் வாட்டமாய் இருக்கிறது என்ன சேதி" என்று எனது கன்னங்களை செல்லமாய் தடவி விட்டு நழுவிக்கொண்டு போக எத்தனித்தது காற்று "நீமட்டும் எப்படி அத்தனைப்பேரையும் ஆரவாரம் இல்லாமல் அன்பை காட்டி அணைத்துக்கொள்கிறாய் என்றேன் "நான் கோவப்படும்போது புயலாகவும்,என்னைமறந்த நிலையில் தென்றலாகவும், சுறுசுறுப்பான தறுனங்களில் காற்றாகியும் வந்து போவேன், காதல் கசந்துருதும் வேலைகளிலும் இடங்களிலும் தென்றலாய் வந்து தீண்டிச் செல்வேன்... எனக்கென்று சாதியென்றோ மதமென்றோ ஒருபோதும் கிடையாது, எந்த காரணத்திற்க்காகவும் யாரையும் எப்போதும் பிரித்துவைத்து பார்க்கத்தெரியாது. மரம்,செடி ,கொடி,புல்,பூண்டு,புழு ,பூச்சி, மனிதன்,மிருகம் என்கிற பாகுபாடும் எனக்குக்கிடையாது. இப்படி எல்லாவற்றையும் பாரபட்சமின்றி பார்ப்பதாலேயே எல்லாவற்றையும் அனைத்துக்கொள்ள என்னால் முடிகிறது" என்றகாற்று என்மீதொரு சினேகப்பார்வையை வீசிவிட்டு நகர்ந்து சென்றது. காற்றின் இத்தகைய பதில் எனக்கு திருப்தியளிக்கவில்லை பின்னோடிச்சென்று காற்றை இடைமறித்தேன், சற்றே புன்னகையோடு "மறுபடியும் உனக்கென்ன பிரச்சனை" என்றது காற்று. "நீ சொல்றதெல்லாம் சரியென்றே வைத்துக்கொள்வோம், பிறகேன் சிலசமயங்களில் மூச்சித்திணறலை ஏற்ப்படுத்துகிறாய்" என்றேன் நான். "ஆறறிவுஉள்ள மனுசனா யோசிங்க சார்" என்றகாற்றுதொடர்ந்து பேசலானது "ஒருஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு,மாட்டுவண்டியில போன காலத்தில,நோய்நொடியில்லா வாழ்க்கை வாழ்ந்தீங்க.... பிறகு மிதிவண்டின்னு ஒன்ன கண்டுபிடிச்சு,கொஞ்சம் வேகமா பயணப்படனுன்னு நெனச்சீங்க, அப்பக்கூட பரவாயில்லை. கையும் காலும் பலமாகி வலுவா வாழ்ந்தீங்க.. அதோட விடுவீங்கன்னு பாத்தா ...விட்டீங்களா..? மோட்டார் வாகனம்னு ஒன்னகண்டு பிடிச்சு, ரொம்ப வேகமா... பயணபடனுன்னு சொல்லி ஏதேதோ எண்ணைகளை எல்லாம்- ஊற்றி....ஓட்டினிங்க, என்னடா இதுன்னு கேட்டா.? பெட்ரோல் டீசல் என்று பெருமை பீத்துனீங்க....." என்று வேகமாக பேசிக்கொண்டிருந்த காற்று தன்னை ஆசுவாச படுத்திக்கொண்டு மீண்டும் பேசத்தொடங்கியது. "என்னை நான் சுத்தப்படுத்திக்கொள்ள எனக்கென்றிருந்த காடு மேடு மரங்களையெல்லாம் வெட்டி வீணாக்கி ,விளை நிலங்களையெல்லாம் அழித்து அதன்மீது மாடமாளிகைகளை உருவாக்கி ,எனக்கென்றிருந்த சுகங்களை, சுகாதாரங்களை, அழித்து விட்டதன் விளைவு ,ரொம்பசுத்தமாக சுற்றித்திரிந்த என்னை மாசுபடுத்தி மயக்கம் பட வைச்சிட்டீங்க, இதையும் என்னடான்னு கேட்டா...? அறிவியல், உலகவளர்ச்சி, உலகமே ஓடிட்டிருக்கு நாங்களும் ஓடித்தானே ஆகனும்னு கதை விடுறீங்க, அப்புறம் நானென்ன செய்யுறது,..? உங்களைப் போன்ற புகைகக்கிகளால நானும் மூச்சித்திணறி,உங்களையும் மூச்சித்திணறலுக்கு ஆளாக்க வேண்டியிருக்கு நான்என்ன செய்யுறது நீங்களே சொல்லுங்க..." என்றகாற்று,மூச்சிறைக்க என்முன் நின்றது. ஏதும் பேசவியலாத குற்றவாளியாக கூனிக்குருகி நின்றேன் நான். "ஆறறிவுள்ள மனுசனா நடந்துக்கோங்க நன்பா, பிறகு கேள்வி கேளுங்க.." என்றகாற்று மீண்டும்என்னைத்தழுவி நடையை கட்டியது. வீட்டிற்க்கு சென்றதும், ஒன்றுக்கு இரண்டாக வரண்டாவில் நின்று கொண்டிருக்கும் மோட்டார் வண்டிகளை விற்றுவிட்டு மீண்டும் மிதிவண்டிகளை வாங்கிவிடுவதென்று முடிவோடு வீட்டிற்க்குள் நுழைந்தேன்.

அத்தனை அதிகாலையில் என் வீட்டு வராண்டாவிற்குள் மேலும் ஒரு புது மோட்டார் பைக் மேற்பதை பார்த்து ஆச்சரியமாக இருந்தது எனக்கு , எப்போதோ திருமணத்தின்போது எனக்கு வரதட்சணையாக கொடுக்கிறேன் என்று சொன்ன பைக்கை இப்போதுதான் புதிதாக வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான் என்னுடைய மைத்துனன்... இருக்கிற வண்டிகளை விற்க வேண்டும் என்று நான் நினைக்க, இல்லாத வில்லங்கமாய் இன்னொரு வண்டி என்னுடைய வராண்டாவில்... குழப்பத்தோடு வீட்டிற்கு சென்று மின் விசிறியை சுழலவிட்டு சாய்நாற்க்காலியில் சாய்ந்தேன் மின்விசிறியிலிருந்து கசிந்தகாற்று என்னைப் பார்த்து ஏளனமாய் சிரித்தபடி ஆரத்தழுவிக்கொண்டிருந்தது... அவமானத்தில் எனக்குள் புழுக்கமாய் இருந்தது.



- முத்தையாமோகன்
கோயமுத்தூர்.

# ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்

அதிகாரம் 2



Banumathi Nachiyar



## குறள் 4

பிறப்பினாற் பெற்ற பயனாவ
வெல்லாம் துறப்பதாந் தூநெறிக்கட் சென்று

**விளக்கம்**

பிறப்பினால் பெற்ற பயனில் எல்லாம் ஒப்பற்றதானது, உயர்ந்த இலக்கை அடைய, எல்லா இன்பங்களையும் விட்டொழிக்க வேண்டும் என்பதாகும்.

இக்குறளில் உயர்ந்த இலக்கு என்பது இறைவனை அடையும் வழியாகும். வீடுபேற்றினைப் பெற்றிட, இறைவனை நோக்கிப் பயணப்பட வேண்டும். அதற்கு இவ்வுலகில் உள்ள எல்லா ஆசைகளையும் துறக்க வேண்டும். பிறவிகளிலேயே உயர்ந்த பிறவியாகிய மானிடப்பிறவியின் பயனாகப் பெற்ற இப்பிறவியிலேயே சங்கரனை அடைவது சீரிய நோக்கமாய் இருக்க வேண்டும் என்பது ஔவையார் கருத்து.

## குறள் 5

உடம்பினா லன்றி
யுணர்வானில்லை
யுடம்பினா லுன்னியதே
யாம்

**விளக்கம்**

உடம்பினாலன்றி உணர்ச்சி ஆவது இல்லை. உடம்பினால் உண்டாகுவதே அன்றி வேறொன்றினாலும் அன்று என்பது கருத்து.

உணர்ச்சி என்பது வெளிப்புறத் தூண்டலால் ஏற்படும் மனநிலை.



இதற்கு உடம்பே காரணம் என்கிறார் ஔவை. நாம் ஒன்பது முதல் 21 வகையான உணர்ச்சிகளைப் பெற்றிருக்கிறோம்.

நமக்குத் தேவையான உணர்ச்சிகளை அறிவுப்பூர்வமாகச் சிந்தனை செய்து நமக்கு வேண்டும் என ஏற்படும் திறனே உணர்வாகும்.

இந்த உணர்வுகள் தான் ஆன்மாவின் கருவி, உணர்வுகளே நம் ஆன்மாவின் அனுபவத்தையும் உருவாக்குகின்றன எனவே இதற்கெல்லாம் காரணமாக அமையும் நம் உடம்பின்றி மற்றும் உண்டோ என்று நம்மை ஆச்சரியப்பட வைக்கிறார் ஔவையார்.



(தொடரும்).

# காரடையான் நோன்பு மகிமைகள்



கணவன் ஆயுள் அதிகரிக்க மகத்தான விரதம் - சத்தியவானின் உயிரை சாவித்திரி எப்படி மீட்டார் என்பதுதான் விரதமகிமை.

சத்தியவானின் உயிரை எமனிடமிருந்து மீட்ட சாவித்திரியை நினைத்து பெண்கள் மேற்கொள்ளும் மிகவும் மகத்தான விரதம் தான் காரடையான் நோன்பு. திருமணமான பெண்கள் கணவனின் ஆயுள் அதிகரிக்க வேண்டும் என்றும், திருமணம் ஆகாத இளம் பெண்கள் நல்ல கணவன் அமைய வேண்டும் என சாவித்திரியை நினைத்து விரதமிருக்கின்றனர்.

காரடையான் நோன்பு சத்யவானின் உயிரை எமனிடம் இருந்து மீட்ட சாவித்திரியை நினைத்து அனுஷ்டிக்கப்படும் விரதமாகும் இந்த விரதம் தன் கணவன் தீர்க்காயுளுடன் இருக்க வேண்டும் என்பதற்காக திருமணமான பெண்கள் விரதம் இருப்பது வழக்கம்.
சத்தியவானை மீட்ட சாவித்திரியின் கதை.

மந்திரதேசத்தை ஆட்சி செய்தவர் மன்னர் அசுவபதி. இவரது மகள் சாவித்திரி மிகவும் சிறப்பாக நாட்டை ஆட்சி செய்த அஸ்வபதி தன் மகள் சாவித்திரிக்கு ஏற்ற மணமகனை தானே தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை வழங்கியிருந்தார். பருவ வயதை அடைந்த சாவித்திரி ஒருமுறை வனப்பகுதிக்குச் சென்றாள் அங்கு சத்தியவானைக் கண்டாள்.

சத்தியவானின் தந்தை சாளுவ தேசத்து மன்னன் துயமத்சேனன். இவர் மிகவும் சிறப்பாக ஆட்சி செய்தார் இருப்பினும் தன் வயது முதிர்வின் காரணமாக கண் பார்வை இழந்தார். அதைப் பயன்படுத்திக் கொண்ட எதிரிகள் அவரிடமிருந்து நாட்டை பறித்துக்கொண்டு சத்தியவான் மற்றும் அவரது பெற்றோரையும் காட்டிற்கு விரட்டிவிட்டனர்.
சத்தியவானுக்கு இழந்த நாட்டை மீட்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், பெற்றோரை விட்டு செல்ல மனம் இல்லாததால் பெற்றோருக்கு பணிவிடை செய்யும் பொருட்டு காட்டிலேயே வசித்து வந்தார்.

சத்தியவான் குறித்து அறிந்துகொண்ட சாவித்திரி அவளை மணக்க விரும்பினார் அதுகுறித்து தந்தைய அசுவபதியிடம் தெரிவித்தார். அசுபதியும் மகள் சாவித்திரியின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டு சத்தியவானுக்கு திருமணம் செய்து வைத்தார்.

அரண்மனையில் பல பணிப்பெண்களை தனக்கு உதவியாக வைத்து வாழ்ந்த சாவித்திரி திருமணமான பின், பெண் கணவனுடன் சேர்ந்து வாழ்வது தானே நியாயம் என்பதால் அவள் சத்தியவானுடன் காட்டில் வசிக்க தொடங்கினார்.

காட்டில் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டாலும் ,சத்தியவானுடன் மிகவும் மகிழ்ச்சியாகவே வாழ்ந்து வந்தாள். கணவனின் ஆயுள் காக்கும் பாக்கியத்திற்காக பல்வேறு விரதங்களைக் கடைப்பிடித்து வந்தார்

இருப்பினும் விதி யாரை விட்டது. ஒரு முறை சத்தியவான், சாவித்திரி இருவரும் காட்டிற்கு விறகுகளை சேகரித்து வர சென்றனர். நண்பகல் நேரம் என்பதால் வேலைக்கு நடுவே மிகவும் களைப்பாக இருப்பதால் சிறிது நேரம் மரத்தினடியில் அமர்ந்து ஓய்வு எடுத்தனர்.

சத்தியவானின் ஜாதகப்படி ஆயுள் குறைவு என்பதால், எமதர்மன் தன் வேலையை செய்ய வந்தார். சாவித்திரியின் மடியில் தலைவைத்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சத்தியவானின் உயிரை எமதர்மன் வந்து பறித்து சென்றார். சாவித்திரி தனது கற்பு திறத்தால் எமதர்மன் வருவதை அறிந்து கொண்டாள். சத்தியவானின் உடலை தரையில் கிடத்திவிட்டு எமதர்மனைப் பின் தொடர்ந்தாள்.

இதைக் கண்டு அதிர்ந்த எமன், திரும்பி போய்விடு என சாவித்திரியை எச்சரித்தார். ஆனால் அவர் எதிர்பாராத வகையில் எமனின் காலில் விழுந்தாள் சாவித்திரி. ஒரு பெண் தன் காலில் விழுந்ததும் பெண் என்ற அளவில் அவளுக்கு 'தீர்க்க சுமங்கலி பவ' என வாழ்த்திவிட்டார். எமன் வாழ்த்திய பிறகு தான் புரிந்தது, உயிரைப் பறித்துக் கொண்டு சத்தியவானின் மனைவி என்று.

உடனே சாவித்திரி நீங்கள் வாழ்த்தியது உண்மையானால் அதன் படி வாழ எனக்கு அருள் புரியுங்கள். தான் பதிவிரதை என்பது உண்மையானால் என் கணவனின் உயிரைத் திருப்பித் தாருங்கள் என்றார்.

சாவித்திரியின் புத்திசாலித்தனத்தை வியந்த எமதர்மன் ஒருவனின் இறப்புக்குப் பின் அவனுக்கு மீண்டும் வாழ்வு கிடையாது. அதனால் உனக்கு வேறு ஏதேனும் வரங்களைக் கேள் என்றார்.

சமயோசிதமாக யோசித்த சாவித்திரி, "என் மாமனார், மாமியாருக்கு மீண்டும் கண் பார்வை கிடைக்க வேண்டும். அவர்கள் இழந்த நாட்டை திரும்பப் பெற வேண்டும். என் தந்தைக்கு ஆண் வாரிசு இல்லை என்பதால் அவருக்கு ஆண் பிள்ளை பிறக்க வேண்டும். எனக்கு 100 குழந்தைகள் வேண்டும்" என வேண்டினாள்.
சற்றும் யோசிக்காத எமன் "நீ வேண்டிய வரங்களைத் தந்தோம்" என்றார்.

எமனின் வரத்தை பயன்படுத்திக் கொண்ட சாவித்திரி, "எனக்கு நூறு குழந்தைகள் பிறக்க வேண்டும் என்றால் என் கணவன் உயிருடன் இருக்க வேண்டும் அல்லவா. அதனால் என் கணவரின் உயிரைத் திருப்பிக் கொடுங்கள்" என்று யாசித்தாள்.

இதுவரை என்னை யாரும் பார்த்ததில்லை. உன் பதிவிரதை கற்பின் மகிமையால் என்னை நீ பார்த்தது மட்டுமின்றி, என்னுடன் வாதம் செய்து அதில் வெற்றியும் பெற்றுவிட்டாய். அதனால் நீ வேண்டிய வரங்கள் அனைத்தும் கிடைக்கட்டும் என்றார்.
மாசியும், பங்குனியும் சேரும் சமயத்தில் உன் கணவன் உயிர்பெறுவான் என்றார்.

இந்த உலகம் உள்ளளவும் உன்னை நினைத்து விரதமிருக்கும் பெண்களுக்கு உன்னைப் போல நீண்ட ஆயுள் கொண்ட கணவன் கிடைத்து, தம்பதியர் மனமொத்து நீடூழி வாழ்வார்கள் என்று அருள் புரிந்து அங்கிருந்து மறைந்தார்.

வரத்தைப் பெற்ற சாவித்திரி கணவனை காட்டில் விட்டுச் சென்ற இடத்திற்குத் திரும்பி வந்து தன் மடியில் கிடத்தினாள். சிறிது நேரத்தில் சத்தியவானின் உயிர் திரும்ப கிடைத்தது. தூக்கத்திலிருந்து கண் விழித்தது போல எழுந்த கணவனிடம் நடந்த விஷயத்தைக் கூறினாள்.

காரடையான் நோன்பு எப்போது?
தன் கணவனின் உயிரைப் பறித்துச் சென்ற எமனுடன் வாதாடி, கணவனின் உயிரை மீட்ட சாவித்திரியின் பதிவிரதத்தைப் போற்றும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் மாசி மற்றும் பங்குனி மாதம் சேரும் நன்னாளில் இந்த காரடையான் நோன்பை பெண்கள் அனுஷ்டித்து வருகின்றனர்.

இந்தாண்டு 2026 மார்ச் 14ம் தேதி (சனிக்கிழமை) இந்த விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பதால் சத்தியவானைப் போல நீடூழி வாழ்ந்து, தன் கணவனுடன் நீண்ட மாங்கல்ய பாக்கியத்தை அருள வேண்டும் என பெண்கள் விரதத்தைக் கடைப்பிடிக்கின்றனர்.
அம்பாளே சொன்ன பெண்களுக்கான ப்ரத்யேக விரதமிது.
சங்கல்பம்
மம தீர்க்க சௌமாங்கல்ய அவாப்த்யர்த்தம்
மம பர்துச்ச அன்யோன்ய ப்ரீதி அபி வ்ருத்தியர்த்தம்
அவியோகார்த்தம்
ஸ்ரீ காமாக்ஷி பூஜாம் கரிஷ்யே
சரடு மாற்றும்போது

தோரம் க்ருஹ்ணாமி
ஸுபகே ஸஹாரித்ரம்
தராம்யஹம்
பர்து: ஆயுஸ் ஸித்த்யர்தம்
ஸுப்ரீதா பவ ஸர்வதா
த்யானம்
ஏகாம்பர நாத தயிதாம்
காமாக்ஷிம்
புவனேஸ்வரீம் த்யாயாமி
ஹ்ருதயே தேவீம்
வாஞ்சி தார்த்த ப்ரதாயினீம்
நைவேத்யம்*
உருகாத வெண்ணையும்
ஓரடையும் நான் தருவேன்
ஒருக்காலும் என் கணவர்
என்னை பிரியாதிருக்க
வரமருள்வாய்



ரமா குருமூர்த்தி
எழுத்தாளர்/அஸ்ட்ராலஜர்
மடிப்பாக்கம்

தினம் ஒரு தலைவர்கள்

# காகா காலேல்கர் வரலாறு

1985 ஆம் ஆண்டு இந்தியாவின் தபால் தலையில் கலேல்கர்.
நாடாளுமன்ற உறுப்பினர், ராஜ்யசபா பதவியில்
3 ஏப்ரல் 1952 2 ஏப்ரல் 1964
தனிப்பட்ட விவரங்கள்
பிறந்தது தத்தாத்ரேய பாலகிருஷ்ண காலேல்கர்
1 டிசம்பர் 1885
சதாரா , மகாராஷ்டிரா
இறந்தார் 21 ஆகஸ்ட் 1981 (வயது 95) புது தில்லி
தேசியம் இந்தியன்
அல்மா மேட்டர் பெர்குசன் கல்லூரி தொழில்
சமூக சீர்திருத்தவாதி, செயற்பாட்டாளர்
தொழில் எழுத்தாளர்
காகா காலேல்கர் என்று பிரபலமாக அறியப்படும் தத்தாத்ரேய பாலகிருஷ்ணா காலேல்கர் (டிசம்பர் 1, 1885 - ஆகஸ்ட் 21, 1981) ஒரு இந்திய சுதந்திர ஆர்வலர், சமூக சீர்திருத்தவாதி, பத்திரிகையாளர் மற்றும் மகாத்மா காந்தியின் தத்துவம் மற்றும் முறைகளின் சிறந்த பின்பற்றுபவர் ஆவார் .

வாழ்க்கை வரலாறு
கலேல்கர் 1885 டிசம்பர் 1 ஆம் தேதி சதாராவில் பிறந்தார். மகாராஷ்டிராவின் சாவந்த்வாடிக்கு அருகிலுள்ள அவரது குடும்பத்தின் மூதாதையர் கிராமமான கலேலியில் இருந்து அவருக்கு காலேல்கர் என்ற குடும்பப்பெயர் வழங்கப்பட்டது.
அவர் 1903 இல் மெட்ரிகுலேஷன் படித்து 1907 இல் புனேவில் உள்ள பெர்குசன் கல்லூரியில் தத்துவத்தில் இளங்கலை பட்டம் பெற்றார் . அவர் எல்.எல்.பி முதலாமாண்டு தேர்வில் தேர்ச்சி பெற்று 1908 இல் பெல்காமில் உள்ள கணேஷ் வித்யாலயாவில் சேர்ந்தார். ராஷ்ட்ரமத் என்ற தேசியவாத மராத்தி நாளிதழின் ஆசிரியர் குழுவில் சிறிது காலம் பணியாற்றினார், பின்னர் 1910 இல் பரோடாவில் உள்ள கங்காநாத் வித்யாலயாவில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1912 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் அரசாங்கம் அதன் தேசியவாத உணர்வு காரணமாக அந்தப் பள்ளியை வலுக்கட்டாயமாக மூடியது. அவர் கால்நடையாக இமயமலைக்குச் சென்றார், பின்னர் 1913 இல் பர்மா ( மியான்மர் ) விஜயத்தில் ஆச்சார்யா கிருபளானியுடன் சேர்ந்தார். அவர் முதன்முதலில் மகாத்மா காந்தியை 1915 இல் சந்தித்தார்.

காந்தியின் தாக்கத்தால், அவர் சபர்மதி ஆசிரமத்தில் உறுப்பினரானார் . சபர்மதி ஆசிரமத்தின் ராஷ்ட்ரிய ஷாலாவில் கற்பித்தார். சிறிது காலம், ஆசிரம வளாகத்திலிருந்து நடத்தப்பட்ட சர்வோதயா பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதற்காக அவர் பல முறை சிறையில் அடைக்கப்பட்டார் . காந்தியின் ஊக்கத்துடன், அகமதாபாத்தில் குஜராத் வித்யாபீடத்தை நிறுவுவதில் தீவிரப் பங்காற்றினார் , மேலும் 1928 முதல் 1935 வரை அதன் துணைவேந்தராகப் பணியாற்றினார். 1939 இல் குஜராத் வித்யாபீடத்திலிருந்து ஓய்வு பெற்றார். மகாத்மா காந்தி அவரை சவாய் குஜராத்தி என்று அழைத்தார் , இது ஒரு குஜராத்தியை விட கால் பங்கு அதிகம்.



1935 ஆம் ஆண்டில், கலேல்கர் , இந்தி - இந்துஸ்தானி மொழியை இந்தியாவின் தேசிய மொழியாகப் பிரபலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ராஷ்டபாஷா சமிதி என்ற குழுவின் உறுப்பினரானார் . 1948 முதல் தனது மரணம் வரை காந்தி ஸ்மாரக் நிதியில் அவர் தீவிரமாக இருந்தார்.

அவர் 1952 முதல் 1964 வரை ராஜ்யசபா உறுப்பினராக நியமிக்கப்பட்டார் , பின்னர் 1953 இல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் 1959 இல் குஜராத்தி சாகித்ய பரிஷத்திற்கு தலைமை தாங்கினார். 1967 இல் காந்தி வித்யாபீடத்தை, வேட்சியை நிறுவி அதன் துணைவேந்தராகப் பணியாற்றினார்.
தெளிவுபடுத்தல் தேவை ]
அவர் ஆகஸ்ட் 21, 1981 அன்று இறந்தார்.
தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள்
காலேல்கர் குஜராத்தி , மராத்தி மற்றும் இந்தி மொழிகளில் ஏராளமான பயணக் குறிப்புகள் உட்பட பல புத்தகங்களை எழுதினார் . காலேல்கரின் புத்தகங்களின் ஒரு பகுதி பட்டியல் பின்வருமாறு:
காந்திய சிந்தனையின் சாராம்சம் (ஆங்கிலம்)
இன்ஸ்பிரேஷன் (ஆங்கிலம்) இல் சுயவிவரங்கள்
பாபுவின் தவறான பார்வைகள் (ஆங்கிலம்)
மகாத்மா காந்தியின் சுதேசி நற்செய்தி (ஆங்கிலம்)
மகாத்மா காந்தி கா சுதேசி தர்மம் (இந்தி)
ராஷ்ட்ரிய ஷிக்ஷா கா ஆதர்ஷா (இந்தி)
ஸ்மரண் யாத்திரை (மராத்தி)
உத்தரேகாடில் பிந்தி (மராத்தி) (ஆங்கிலத்தில் ஈவ் பிஹேண்ட் தி பார்ஸ் என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது )
ஹிந்தல்க்யாச்சா பிரசாத் (மராத்தி)
லோக்-மாதா (மராத்தி)
லதாஞ்சே தந்தவ் (மராத்தி)
இமயமலைப் பிரவாஸ் (மராத்தி)
இமயமலை பிரவாஸ் (குஜராத்தி)
ஜீவன்-வியாவஸ்தா (குஜராத்தி)
பூர்வா ஆப்பிரிக்கமேன் (குஜராத்தி)
ஜீவவனோ ஆனந்த் (குஜராத்தி)
ஜீவதா தேவாரோ (குஜராத்தி)
மாரா சன்ஸ்மாரானோ (குஜராத்தி)
உகமானோ தேஷ் (குஜராத்தி)
ஓட்டெராட்டி திவாரோ (குஜராத்தி) (ஆங்கிலத்தில் என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது )
பிரம்மதேசனோ பிரவாஸ் (குஜராத்தி)
ரகத்வானோ ஆனந்த் (குஜராத்தி)
பல பகுதி காக்கா காலேல்கர் கிரந்தவாலி
பகுதி 5: ஆத்மசரித்ரா
பகுதி 6: சரித்திர கீர்த்தனை
பகுதி 7: கீதா தரிசனம்
பகுதி 8: தர்மம்
பகுதி 9: சாகித்ய
பகுதி 10: நாட்குறிப்பு
பகுதி 11: பத்ரா
சஹிஜன் கா பெட்
அங்கீகாரம்
குஜராத்தி மொழியில் எழுதிய "ஜீவன்-வியாவஸ்தா" என்ற கட்டுரைத் தொகுப்பிற்காக 1965 ஆம் ஆண்டு காலேல்கருக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது. அவரது இலக்கிய சாதனைகளுக்காக 1971 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி பெல்லோஷிப் விருது வழங்கப்பட்டது .

1964 ஆம் ஆண்டு இந்திய அரசு அவருக்கு பத்ம விபூஷண் ( பாரத ரத்னாவுக்குப் பிறகு இந்தியாவின் இரண்டாவது மிக உயர்ந்த குடிமகன் விருது ) வழங்கியது. 1985 ஆம் ஆண்டு அவரது நினைவாக ஒரு நினைவு முத்திரையையும் வெளியிட்டது.

# சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

இந்திய சினிமாவின் முன்னணி நடிகையான ராஷ்மிகா மந்தனா, சமீபத்தில் தனது காதலர் நடிகர் விஜய் தேவரகொண்டாவை திருமணம் செய்து கொண்டார். திருமணத்துக்கு பின்னர் இந்தியா முழுவதும் சென்று ரசிகர்களை சந்திக்க உள்ளனர்.

இதற்கிடையில் ராஷ்மிகா மந்தனாவின் தாயார் சுமன் மந்தனா சுமார் 8 வருடங்களுக்கு முன்பு பேசியதாக ஒரு ஆடியோ சமூக வலைதளத்தில் வெளியானது. அதில், ராஷ்மிகா மற்றும் நடிகர் ரக்ஷித் ஷெட்டியின் நிச்சயதார்த்தத்தின் போது ஏற்பட்ட சில சிக்கல்கள் குறித்து அவரது தாயார் பேசுவதாகக் கூறப்படுகிறது.

இது திரையுலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், "அந்த ஆடியோ பதிவை 24 மணி நேரத்திற்குள் சம்பந்தப்பட்டவர்கள் நீக்க வேண்டும். இல்லையேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என ராஷ்மிகா மந்தனா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், "கடந்த 8 ஆண்டுகளாக எனக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் விஷம பிரசாரங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனது பேச்சுகள் சூழலுக்குப் புறம்பாக மாற்றப்படுவதையும் நான் சொல்லாத விஷயங்கள் தவறான கதைகளாக ஜோடிக்கப்படுவதையும் நான் பார்த்திருக்கிறேன். பொது வாழ்க்கையில் வரும் விமர்சனங்களை நான் ஏற்றுக்கொண்டேன்.



ஆனால் சமீபத்தில் நடந்த இந்த அத்துமீறலை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே 24 மணி நேரத்திற்குள் சம்பந்தப்பட்டவர்கள் அந்த ஆடியோ பதிவை நீக்க வேண்டும். இல்லையென்றால் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளட்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.



இதயத்தை திருடாதே சீரியலில் கதாநாயகியாக நடித்து ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் நடிகை ஹிமா பிந்து. இதன்பின் தொடர்ந்து சின்னத்திரை மற்றும் வெள்ளித்திரையில் கவனம் செலுத்தி வருகிறார். காஞ்சனா 4 படத்தில் இவர் நடித்து வருவதாக தகவல் தெரிவிக்கின்றனர்.

இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கும் நடிகை ஹிமா பிந்து, தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை அவ்வப்போது பதிவிடுவார். அந்த வகையில் தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை தற்போது பதிவு செய்துள்ளார். ரசிகர்கள் மத்தியில் இந்த புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

# இது 'லவ் ஜிகாத்' கிடையாது.. கணவர் பர்மான் கானுடன் வைரல் பெண் மோனலிசா பேட்டி



2025 ஜனவரியில் உத்தரப் பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா நடைபெற்றது. இங்கு பாசிமணி, வளையல் விற்றுக் கொண்டிருந்த இளம்பெண் மோனலிசா போஸ்லே தனது இயற்கையான மாநிறத்துக்கான வைரலானார்.

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரின் எளிய குடும்பத்தை சேர்ந்த மோனாசிலாவுக்கு அதன் பின் படங்களில் நடிக்கும் வாய்ப்பும் தேடி வந்தது.

அவர் தொடர்ந்து மலையாள படம் ஒன்றிலும் நடித்து வருகிறார். இந்நிலையில் கேரளாவின் அருமனூர் கோவிலில் நேற்று மோனலிசா தனது காதலர் பர்மான் கானை திருமணம் செய்து கொண்டார்.

இவர்களது திருமணம் இந்து சடங்குகளின்படி நடைபெற்றது. திருமணத்தில் கேரள அமைச்சர் உட்பட முக்கியஸ்தர்கள் பங்கேற்றனர்.


இதற்கு முன்னர், தனது தந்தை தனது காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து தன்னை வேறொருவருடன் கட்டாய திருமணம் செய்து வைக்க முயல்வதாவும் தனக்கு பாதுகாப்பு கோரியும் கேரள போலீசில் அவர் புகார் அளித்திருந்தார்.

இந்நிலையில் திருமணத்தின் பின் இன்று கணவர் பர்மான் கானுடன் மோனலிசா செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய அவர், "நான் அனைத்து மதங்களையும் மதிக்கிறேன். எங்களது திருமணம் இந்து முறைப்படிதான் நடந்தது, இது லவ் ஜிஹாத் அல்ல" என்று மோனலிசா கூறினார்.

இருவருமே தங்களது மதங்களை மாற்றிக்கொள்ளவில்லை என்று அவரது கணவர் பர்மேன் கான் தெரிவித்தார்.

# மகனின் புகைப்படத்தை பகிர்ந்த ஜாய் கிரிசில்டா




கடந்த ஆண்டு பிரபல ஆடை வடிவமைப்பாளர் ஜாய் கிரிசில்டா, சமையல் கலைஞர் மற்றும் நடிகரான மாதம்பட்டி ரங்கராஜ், தன்னைத் திருமணம் செய்து ஏமாற்றியதாகவும், கர்ப்பமாக இருந்தபோது தன்னைக் கைவிட்டதாகவும் குற்றம் சாட்டினார். தொடக்கத்தில் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்த ரங்கராஜ், பின்னர் மாநில மகளிர் ஆணைய விசாரணையின்போது ஜாயை காதலித்ததை ஒப்புக் கொண்டதாகவும், ஆனால் அந்தக் குழந்தைக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என தெரிவித்ததாக தகவல் வெளியானது.

இந்த விவகாரத்தில் ஜாய் கிரிசில்டாவின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, சென்னை உயர் நீதிமன்றம் மாதம்பட்டி ரங்கராஜுக்கு டிஎன்ஏ பரிசோதனை செய்ய அண்மையில் உத்தரவிட்டது. இதனிடையே தனது மகன் தொடர்பான புகைப்படங்களை அடிக்கடி சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகிறார் ஜாய் கிரிசில்டா.


இந்நிலையில் இன்று மகன் ராகா ரங்கராஜின் முகத்தை காட்டியுள்ளார். இதுவரை முகத்தை மறைத்து பதிவிட்டு வந்த அவர், இன்று மகனின் முகத்தை முழுவதுமாக காண்பித்து சமூக வலைதளங்களில் புகைப்படங்களை பகிர்ந்துள்ளார். இதற்கு நெட்டிசன்கள் பலரும், இருவர் பிரச்சனையில் குழந்தையின் புகைப்படத்தை பயன்படுத்தாதீர் என கருத்து தெரிவித்து வருகின்றனர்.

ஜாய் தனது முதல் கணவரை ஜூலை 2024-ல் தான் விவாகரத்து செய்த நிலையில், டிசம்பர் 2023-ல் ரங்கராஜைத் திருமணம் செய்ததாகக் கூறுவது சட்டரீதியான கேள்விகளை எழுப்புவதாக நீதிமன்றம் குறிப்பிட்டதும், மாதம்பட்டி ரங்கராஜுக்கு ஏற்கனவே ஸ்ருதி என்ற மனைவியும், இரண்டு மகன்களும் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.



தென்னிந்திய சினிமாவில் பிரபலமான நடிகைகளில் ஒருவர் பிரணிதா சுபாஷ். இவர் தமிழில் வெளிவந்த சகுனி, மாஸு என்கிற மாசிலாமணி உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். கடந்த 2021ஆம் ஆண்டு நிதின் ராஜு என்பவரை திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு இரு பிள்ளைகள் உள்ளனர். திருமணத்திற்கு பின்னும் கூட தொடர்ந்து படங்களில் நடித்து வருகிறார். இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை பிரணிதா சுபாஷ், தற்போது தனது லேட்டஸ்ட் Stunning கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை அதில் பதிவு செய்துள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

# நடிகை ஸ்வேதா மேனன் மீதான வழக்கு ரத்து



மலையாள சினிமாவில் முன்னணி நடிகைகளில் ஒருவராக இருப்பவர் நடிகை ஸ்வேதா மேனன். கேரள மாநிலம் கோழிக் கோட்டில் பிறந்த இவர், "அனசுவரம்" என்ற மலையாள திரைப்படத்தின் மூலம் கடந்த 1991-ம் ஆண்டு திரையுலகில் அறிமுகமானார்.

மலையாள திரைப்படங்கள் மட்டுமின்றி, ஏராளமான இந்தி மொழி படங்களிலும், தமிழில் "சினேகிதியே", "நான் அவன் இல்லை-2" ஆகிய திரைப்படங்களிலும் நடித்துள்ளார். சிறந்த நடிகைக்கான கேரள மாநில அரசின் விருதை பெற்றுள்ளார்.

இந்தநிலையில் கடந்த ஆண்டு (2025) நடந்த மலையாள நடிகர்கள் சங்க தேர்தலில் போட்டியிட்டு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் மூலம் மலையாள நடிகர்கள் சங்க முதல் பெண் தலைவர் என்ற பெருமையையும் பெற்றார்.

இந்தநிலையில் நடிகை ஸ்வேதா மேனன் மீது கொச்சியை சேர்ந்த மார்ட்டின் என்பவர் எர்ணாகுளம் தலைமை குற்றவியல் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அவர் ஆபாச படங்களில் நடித்து பணம் சம்பாதித்ததாகவும், ஆகவே அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட வேண்டும் எனவும் தனது மனுவில் மார்ட்டின் தெரிவித்திருந்தார்.

மலையாள நடிகர்கள் சங்க தேர்தலில் நடிகை ஸ்வேதா மேனன் போட்டியிட்ட நேரத்தில் அவரின் மீது தொடரப்பட்ட இந்த வழக்கு மலையாள திரையுலகில் பரபரப்பை ஏற்படுத்தியது. நடிகைக்கு எதிரான அந்த மனுவை விசாரித்த எர்ணாகுளம் கோர்ட்டு, நடிகை ஸ்வேதா மேனன் மீது வழக்குப்பதிவு செய்ய போலீசாருக்கு உத்தரவிட்டது.

கோர்ட்டு உத்தரவின் பேரில் நடிகை ஸ்வேதா மேனன் மீது தகவல் தொழில் நுட்ப சட்டம் 67(ஏ) உள்பட 2 பிரிவுகளின் கீழ் கொச்சி மத்திய போலீசார் வழக்கு பதிந்தனர். இந்தநிலையில் தன் மீது பதியப்பட்ட வழக்கை ரத்து செய்யக்கோரி கேரள ஐகோர்ட்டில் நடிகை ஸ்வேதா மேனன் மனு தாக்கல் செய்தார்.

அந்த மனுவை விசாரித்த ஐகோர்ட்டு, ஸ்வேதா மேனனின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் கூறப்பட்ட புகாரின் மீது அவர் மீது பதியப்பட்ட வழக்கை ரத்து செய்ய உத்தரவிட்டது.


ஓம்
சிவமயம்
அருள்மிகு ஸ்ரீ விநாயகர் துணை
அருள்மிகு தெய்வகுளம் காளியம்மன் துணை
ஆலய தரிசனம் கோடி புண்ணியம்
கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
ஸ்ரீ விநாயகர் துதி
விநாயகனே வெவ்வினையை வேறுருக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து
ஸ்ரீ தெய்வகுளம் காளியம்மன் துதி
பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணிவஞ்சர்
உயிரவி உண்ணுமுயற்சண்டிகாளி ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே
ஓம்யாதேவி சர்வபூதேக்ஷு மாத்ரூபேண சம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநமஹா
இந்து சமய அறநிலையத்துறை
கோயமுத்தூர் மாவட்டம் ஆனைமலை வட்டம்
வேட்டைக்காரன்புதூர் கிராமம் சேத்துமடை
அருள்மிகு தெய்வகுளம் காளியம்மன் திருக்கோயில்
சபரிவார புனராவர்த்தன அஷ்டபந்தன
மஹா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்
விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 18 ம் நாள் (01.04.2026) புதன்கிழமை
காலை 6.00 மணிக்குமேல் 7.00 மணிக்குள்


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887


Vilambaram
GET...
SET.....
SHOOT
YOUR SALES
WITH SOCIAL
MEDIA
ASK US HOW ?
CONTACT US TODAY!
+91-7789941009
www.vilambaram.com


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


BUSINESS NEWS
DAILY ePAPER
DAILY ePAPER
SPORTS
TRAVEL
EBOOK LIBRARY
TECH TRENDS
START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009
HEALTH & FITNESS
ENTERTAINMENT
TECH NEWS
TECH TRENDS
FOOD RECIPES



Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
TV NEWS
PRESS
PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



## இறைவன் வாழும் இல்லம்

உலகம் என்னும் வட்டம்,
அது இறைவன் போட்ட
திட்டம், அதில் இனிதாய்
வாழும் நாட்டம், கொண்ட
உயிர்கள் மலரும் தோட்டம்,
இதில் மனிதன் மனதில்
மட்டும், கடவுள் கொள்கை
ஓட்டம், காட்சி என்றும்
ஒன்று, அதைக் கண்டிடும்
கண்கள் இரண்டு, அதைக்
கொண்டிடும் மனிதனின்
எண்ணம், அவை ஆயிரம்
ஆயிரம் கோணம்.
கோணங்கள் ஆயிரம்
மாறுபட்டாலும், கண்களின்
பார்வை வேறுபட்டாலும்,
காட்சியின் தன்மை மாறாது,



அதன்
மாட்சியின்
மேன்மை
தேயாது, இதை
உணர்ந்திடும்
உன்னத
உள்ளம், அது
இறைவன் வாழும் இல்லம்

**எஸ் சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை



## குச்சி ஐஸ்

பார்ப்பதற்கு நீ குச்சி ஐஸ்
சாப்பிடும் பாப்பா போலக்
காட்சியளித்தாலும்
பாவாடை சட்டையில்
நீ செம ஜில் தேவதை!
உன் சிரிப்பழகில் நான்
மயங்கும் ஒவ்வொரு
முறையும் உன் காதல்
என்னைச்சிலந்தி வலையாகப்
பின்னிக் கொள்கிறது!
உன் இரட்டை ஜடை
தரிசனம் என்னைத் தேனி
மாவட்ட மேகமலைக்கே
இலவசமாக அழைத்துச்
செல்கிறது! உன்
இரு கன்னங்களில்
உதகமண்டலத்தின் குட்டி
ஆப்பிள்களை நீ
வளரும் போதே
பி(இ)ணைத்துக்
கொண்டாயா?!
காதல் ஒரு வரமென்றால்
எனக்கு நீ கிடைத்தது
மற்றுமொரு வரம்!

**முத்து ஆனந்த்,** வேலூர்



## வேடதாரிகள்...

பங்குனி உச்சி வெயில்
ஏறிய காய்ந்த மண்டையோடு
வெறிப்பிடித்த நாய்களாக
வீதியில் அலைகிறார்கள்
வேட்பாளர்கள்..!
பணநாயகத்தை விட்டெறிந்து
ஜனநாயகத்தை காப்பாற்ற
துடிக்கிறார்களாம்
வேடதாரிகள்.

கட்சி கரை வேட்டியிலும்
ஊழல் சதை உடம்பிலும்
ஏற்றிக்கொண்ட
மமதையோடு கொழுப்பேறிய
பன்றிகள் சாக்கடை
அரசியலில் ஊறிக்கொள்ள
வாக்கு கேட்கிறது
வாக்காளர்களிடம்...!

பட்டியலுக்கு வந்த
வேட்பாளர்களுக்கும்
படைப்பாளிகளுக்கும்
என்றுமே எப்போதுமே
பதவியும் பரிசும்
முதலிடமும் முக்கியம்.

வெற்றி வெறிப்பிடித்து
எந்த கொள்கையும் இன்றி
வாக்கு பிச்சை கேட்கும்
இவர்கள்....... திறமை
எலியினை கொல்லும்
திருட்டுப்பூனைகள் தானோ?

இந்த ஜனநாயகத்தில்
குப்பைகள் கோபுரமாகும்
வாக்களிக்கும்
வாக்காளர்களின்
எச்சிலை புத்தியால்....!

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## வெளிச்சம் தரும் நேரம்

" கல்வி தான் முதல் சொத்து
கற்றால் எந்த இடமும் நம்
வாழும் இடமே ....."

தேர்வு காலம் நெருங்கி
விட்டது படிப்பில் கவனம்
வாழ்வில் சிகரம் ....."

கல்வி இல்லாதவன்
கண் இல்லாதவன்
கல்வியே பிரகாசமான
வாழ்வின் அருமருந்து ..."

விளையாட்டு கைபேசி
தொலைபேசி இவற்றிக்கு
கொஞ்சம் ஓய்வு ..."

மன உளைச்சல் அச்சம் பயம்
என்பதை விளக்கி
ஆழ்ந்த கவனம் ஈடுபாடு
வைத்து படித்திட உரிய
காலம் இது .... "

நல்லவர்கள் நட்பு
பெரியவர்கள் ஆசி
தெய்வத்தின் அனுக்கிரகம்
கல்வியை மேம்படுத்தும்..."

கலக்கம் இல்லாமல்
கடமை என நினைவாற்றலை
உயர்த்தி படித்தால் வெற்றி
மிக அருகில் ....."

தேர்வு நேரம் தேவை
இல்லாத செயல்களில்
ஈடுபடாமல்கவனம் சிதறாமல்
படி அகிலம் உனதே ..."

மாற்றம் வேண்டும்
ஏற்றம் வேண்டும்



சீற்றம்
வேண்டாம்
வாட்டம்
வேண்டாம்
நாளை நமதே
உயர்வும்
நமக்கே ...."

**ஆர். சீதாராமன்.** சீர்காழி



## ஹைக்கூ!

பசித்தாலும் புல் உண்ணாது
பசிக்காமல் மானை
உண்ணாது புலி !

உண்பது பச்சைப்புல் தருவது
வெள்ளைப்பால் பசு !

நன்றிக்கு இலக்கணம்
திருடனின் சிம்மசொப்பனம்
நாய் !

நிறம் கருமை
குரல் இனிமை குயில் !

மேகம் கண்டதும்
தேகம் சிலர்க்கும் மயில் !

சமாதானச் சின்னம்
சந்தோசப்படும் வானம் புறா !

இழுத்துச் சென்றது
பன்மடங்கு எடை எறும்பு !

தண்டவாளமின்றி
பயணமானது ரயில்
ரயில் பூச்சி !

கண்டதும் காணமல்
போனது கவலை
வண்ணத்துப்பூச்சி !

கற்பித்தது விடாமுயற்சி
எட்டுக்கால் பூச்சி !

**கவிஞர் இரா.இரவி!**

என்ன வளம் இல்லை நம் தமிழ் மொழியில் !
ஏன் ? கையை ஏந்த வேண்டும் பிற மொழியில்!

உலகின் முதல் மனிதன் பேசிய மொழி தமிழ் !
உலகம் முழுவதும் பரவியுள்ள மொழி தமிழ் !

உலகின் முதல்மொழி தமிழ்மொழி என்பதை
உரைத்தார் அன்றே பன்மொழி அறிஞர் பாவாணர் !

பன்னாட்டு ஆட்சிமொழியான மொழி தமிழ் !
பண்டைக் காலம் முதல் ஆளுமை மொழி தமிழ் !

இணையத்தில் வாகை சூடிய மொழி தமிழ் !
இதயத்தில் இடம் பிடித்த மொழி தமிழ் !

மூவேந்தர்கள் போற்றி வளர்த்த மொழி தமிழ் !
மூத்த புலவர்கள் கட்டிக் காத்த மொழி தமிழ் !

எழுத்து பேச்சு இரண்டிலும் வாழும் மொழி தமிழ் !
இணையில்லா திருக்குறளை ஈந்தமொழி தமிழ் !

மொழி அறியாதவர்களும் ரசிக்கும் மொழி தமிழ்
மொழியின் பால் ஈர்ப்பு சக்தி உள்ள மொழி தமிழ் !

செம்மொழி நம் மொழி உணர்வாய் தமிழா !
செம்மையைக் காத்திட முயல்வாய் தமிழா !

கலப்பு தாவரத்தில் நன்மை தரலாம் !
கலப்பு மொழிக்கு தீமையே தந்திடும் !

கலப்படம் உணவில் தண்டனைக்குரிய குற்றம் !
கலப்படம் மொழியில் புரிவதும் குற்றமே !

இலக்கண இலக்கியம் நிறைந்த மொழி தமிழ் !
எண்ணிலடங்கா சொற்கள் மிகுந்த மொழி தமிழ் !

இயல் இசை நாடகம் நிறைந்த மொழி தமிழ் !
இனிய முத்தமிழில் இனிய மொழி தமிழ் !

தமிங்கிலப் பேச்சிற்கு முடிவுரை எழுதுங்கள் !
தமிழை தமிழாகவேப் பேசிட முயலுங்கள் !

ஆயிரம் மொழிகள் உலகில் இருந்தாலும்
அழகு தமிழுக்கு எந்த மொழியும் ஈடாகாது !



தமிழன் பெருமையை நெஞ்சில் நிறுத்து !
தமிழோடு பிற மொழி கலப்பதை நிறுத்து !

இல்லாதவன் பிச்சை எடுத்தல் நியாயம் !
இருப்பவன் பிச்சை எடுத்தல் அநியாயம் !

என்ன வளம் இல்லை நம் தமிழ் மொழியில் !
ஏன் ? கையை ஏந்த வேண்டும் பிற மொழியில்!

**கவிஞர் இரா .இரவி**




## நூல் விமர்சனம்

கவியமுதம் !
நூல் ஆசிரியர் கவிஞர்
இரா .இரவி !
விமர்சனம் ; மூத்த
பத்திரிகையாளர் ப .திருமலை
thirugeetha@gmail.com

வெளியீடு : வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை-17. பக்கங்கள் : 172, விலை : ரூ. 100/- பேச 044 24342810 . 24310769. மின் அஞ்சல் vanthipathippagam@gmail.com இணையம் www.vanathi.in வாசிப்போரை வசீகரிக்கும் கவியமுதம்

கவிஞர் இரா. இரவி அவர்கள் எழுதிய "கவியமுதம்" கவிதை நூலை வாசித்து முடித்தபோது சமூக யாத்திரை மேற்கொண்ட உணர்வு. நிகழ்கால நிஜங்களின் நிதர்சனத்தைக் காணமுடிந்தது.

நம்பிக்கைச் சிறகுகள், தமிழ் - தமிழர் நலம், சான்றோர் திறம், காதல் செவ்வி (ஒரு நத்தையால் மூன்றாண்டுகள் தூங்கமுடியும். என்னவளே நீ என்னோடு இருந்தால் என்னாலும் முடியும்), பெண்ணின் பெருமை, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, நாளும் நகரமும், சமூகச் சித்திரிப்பு (வால்மார்ட் என்ற பெயரில் விரைவில் வால்முளைக்காத குரங்கு வர உள்ளது) உணர்ச்சி ஊர்வலம் (படிவங்கள் நிறைவு செய்யும்போது பார்த்தால் நிரந்தரமுகவரி கேள்விக்கு நெஞ்சு வலிக்கும்) என்ற தலைப்புகளின் கீழ் தோழர் இரா. இரவி வடித்திருக்கும் கவிதைகள் வாசித்தவுடன் மனதை வருடவும் செய்கிறது. நெகிழவும் வைக்கிறது. நம்பிக்கையையும் தருகிறது. காதல் உணர்வை சுவாசிக்கவும் வைக்கிறது,

கவிதையென்பது ஒலிநயம் அமைந்த சொற்களின் கட்டுக்கோப்பு. அஃது இன்பத்தை உண்மையுடன் இணைப்பது, அறிவுக்குத் துணையாக கற்பனையைக் கொண்டிருப்பது என்பது ஜான்ஸன் என்பாரின் கூற்று. "இசை தழுவிய எண்ணமே கவிதை".என்று கார்லைல் என்பார் வரையறுக்கின்றார். "மனிதச் சொற்களால் அடைய முடிந்த மகிழ்வூட்டவல்லதும் செம்மை நிறைந்த கூற்றே கவிதையாகும்" இது மாத்யூ அர்னால்டு கவிதைக்குக் கூறும் இலக்கணம். இவையனைத்தும் தோழர் இரா. இரவி அவர்களின் கவிதைகளில் காணமுடிகிறது.

ஹைகூ திலகமாக திகழும் இவர் இன்றைக்கு நீண்ட கவிதைகள் மூலம் சமூகத்தைப் பார்த்திருக்கிறார். ஹைகூ எப்படி இருக்க வேண்டும்? ஹைகூவை தமிழுக்கு முதலில் அறிமுகம் செய்தவர் மகாகவி பாரதி. அவர் அக்டோபர் 18, 1916 சுதேசமித்திரன் நாளிதழில் 'ஜப்பானியக் கவிதை' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில், "சமீபத்திலே மார்டன் ரிவ்யூ என்ற கல்கத்தா பத்திரிகையில் உயோநே நோகுச்சி என்ற ஜப்பானியப் புலவர் ஒரு லிகிதம் எழுதியிருக்கிறார். அவர் அதிலே சொல்வது என்னவென்றால், இங்கிலாந்து, அமெரிக்கா என்ற தேசங்களிலுள்ள இங்கிலீஷ் கவிதையைக் காட்டிலும் ஜப்பானியக்கவிதை சிறந்தது. காரணமென்ன?"

"ஜப்பானிய கவிதையில் வேண்டாத சொல் ஒன்று கூடச் சேர்ப்பது கிடையாது. கூடை கூடையாகப் பாட்டெழுதி அச்சிட வேண்டும் என்ற ஒரே ஆவலுடன், எப்போதும் துடித்துக் கொண்டிருப்பவன் புலவனாக மாட்டான். கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன் அவனே கவி. புலவனுக்குப் பணம் ஒரு பொருளன்று. வானத்து மீன், தனிமை, மோனம், மலர்களின் பேச்சு, இவற்றிலே ஈடுபட்டுப்போய், இயற்கையுடன் ஒன்றாகி வாழ்பவனே கவி." என்கிறார். தோழர் இரா. இரவி அவர்கள் இயற்கையுடனும் சமூகத்துடனும் ஒன்றிய கவி. அதனால்தான் அவரிடமிருந்து வந்திருக்கிறது கவியமுதம்.

வாசிக்கவும், சமூகத்தின் முகத்தை அறியவும் உதவும் கண்ணாடி இந்த கவிதை நூல். வாசிக்க வாய்ப்பளித்த கவிஞர் இரவி அவர்களுக்கு வாழ்த்துகள். வாசியுங்கள் நீங்களும் உணர்வீர்கள்.



## விறகு அடுப்புப் பாடுது!

கியாஸ்க்கொருக் காலம்
வந்தால்.. விறகுக்கொரு
காலம் வரும் தெரிஞ்சுக்கோ!

கரியடுப்பு.. விறகடுப்பு..
காலம் அது திரும்புது..!
புரிஞ்சுக்கோ!
கியாஸ் விலை ஏறியதால்..
விறகு அடுப்புப் பாடுது.!
காதில் வாங்கிக்கோ!

ஓட்டலிலே சாப்பாட்டு
விலைகளோ.. ஏறுது..
ஏறுது.. வீட்டுச்
சாப்பாட்டுக்கு.. இங்கே
மவுசு கூடுது.. கூடுது..

ஆவியிலே வெந்ததெல்லாம்..
விறகு அடுப்பில் வேகுது!
கோவிலிலே அன்னதானம்
கொஞ்சம் கொஞ்சமாகத்
தானே குறையுது.!

சாலையெல்லாம்
வாகனங்கள் வரிசையிலே
நிற்குது! காலை முதல்
இரவுவரை.. தட்டுப்பாடு
நிகழுது!

ஈரானு.. அமரிக்கா
சண்டை தினம் நடக்குது..
எண்ணையில்லா நாடுகளின்
மண்டையிங்கு காயுது!

கியாஸ் அடுப்பு அணையுது..
விறகு அடுப்பு எரியுது.. ஏன்
இந்த போர் வெறியோ?
ஏழைசனம் பதறுது.

காப்பி.. தோசை..
இட்டலிக்கும் விலைகளிங்கு
ஏறுது..! ஆறு அறிவு மனித
இனம்.. மிருகங்களாய்
மாறுது.. வளைகுடா
நாடுகளில் எண்ணைக்
கிணரு எரியுது.. வாழ்க்கை
யெனும் அடுப்படியில்..
விறகுடனே.. வயிறும்
சேர்ந்து எரியுது.!

**வே.கல்யாண்குமார்.**

## குணநலன் போற்று.!

பொறக்கும் போது இருந்த
குணம் போகும் வரைக்கும்
இருக்கணும்! பூமியிலேப்
பொறந்தப் பின்னே..
குணத்தைத் தானே
சேர்க்கணும்!

நல்லகுணம் இருப்பவனை
உலகம் புல்லாய் மதிக்குது!
நாடகமே உலகம் இதை
நம்பக்கூட மறுக்குது.!
குள்ளமனம் கோட்டையிலே
கொடிகள் போலப்
பறக்குது! உள்ளதை
நான் சொல்லப்போனா..
வில்லனாகப் பார்க்குது!

தெருவோரம் நல்லகுணம்
தலைகுனிந்து நடக்குது!
தேரு போன்ற காரில் ஏறி..
கள்ளத்தனம் பறக்குது!
வருமானம் ஒன்றைத்தானே
வாழ்க்கையென்று
நினைக்குது!
அடமானம் வைத்து அன்பை..
கடன்காரனாக்குது!

தூய குணம் பாதையோரம்
குப்பையாகக் கிடக்குது!
துஷ்டகுணம் சபைகளேறி
கொக்கரித்துக் கூவுது!
மாயத்திலே.. மந்திரத்தால்
மனம் மயக்கிக் கிடக்குது!
மனிதகுணம் ஒன்றினாலே..
மற்றதெல்லாம் நடக்குது!

**வே.கல்யாண்குமார்**

உதயமாகும் விதி
இதயமாகும் மதி

கிடைத்ததெல்லாம்
பிடித்துவிடாது,பிடித்ததெல்லாம்
கிடைத்துவிடாது,
நினைத்ததெல்லாம்
நடந்துவிடாது, நடப்பதை
மனமும் நினைத்துவிடாது,
விதைத்ததும் முளைப்பது
விதியானால், முளைத்ததை
வளர்ப்பது மதியாகும்,
கிடைத்ததைப் பெறுவது
விதியானால், பெற்றதைக்
காப்பது மதியாகும்,
நினைத்தது பொய்த்தது
விதியானால், விதித்ததை
நினைப்பதுமதியாகும்.
வாழ்க்கை என்பது



விதியானால்,
வாழ்வினை
ஏற்பது
மதியாகும்,
உதயமாவது
விதியானால்
அதில்,
இதயமாவது மதியாகும்

**எஸ். தயாளன்**
காட்பாடி சேவூர்.



## சிக்கனமே சிறகுகள்

பணத்தைச்சேமிக்கும்
மானுடமே வாகனங்களின்
இரத்தத்தை வீணாக்காதே!
சிலிண்டரில் அடைப்பட்டு
கிடக்கும் அடுப்புகளின்
ஆத்மாவை காப்பாற்றும்
நேரம் இது!

அலட்சியத்தின்
அவதார புருஷர்களே!
அடுப்பினைப்பற்ற
வைத்த பின்பே
பாத்திரங்களைத்
தேடுகிறீர்கள்
தொலைக்காட்சி
தொடர்களது
நினைவிலே
திறந்திருக்கும்
சிலிண்டரை மறந்து
போனீர்கள்!

வாகனங்கள் மணிக்கு
எவ்வளவு வேகம் செல்லும்
என்பதில் உள்ள ஆவலில்
எரிபொருள் செலவாகும்
விவேகம்
மறந்தீர்கள்!

சிக்கனத்தால் சிறகு
கட்டிக்கொள்ளா விட்டால்
விறகுக்கட்டைகளைத்
தேடி நாம் பழையகற்காலம்
செல்ல நேரிடும்!

எதிர்காலத்தில்
கரன்சியைக் கொடுத்து
கெரசின் வாங்க முடியுமா?
வாகனம் வாங்கலாம்
டீசலை வாங்க முடியுமா?

அடுப்பினை வாங்கலாம்
சிலிண்டரை வாங்க முடியுமா?



என்ற
சந்தேகக்கணைகளில்
பணம் பத்தும் செய்யும்
என்ற பழமொழியே
பொய் மொழியாகிவிடும்!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்



## தங்க மங்கை


தொட்டதையெல்லாம்
பொன்னாக்கும் வித்தை
தெரிந்த அற்புதத் தங்க
மங்கை நீ!
என் காதல் உன்னிடமிருந்து
பிறந்ததன் இன்பத்தை
வெறும் வார்த்தைகளால்
சொல்லி விட முடியுமா
என்ன?! இலக்கியத்தைத்
தன்னுள் முழுவதாய்ப் பரப்பி
வெளியிடும் தமிழ்நாடு இ
செய்தித்தாளைப் போல்
உன் இதயம் முழுவதும்
எனக்கான காதலை
நிரப்பி வைத்திருப்பவள் நீ!
உன் வெண்ணிற துப்பட்டா
முழுவதும் கவிதை எழுத
ஆசை வந்தாலும்
அந்த நேரத்தில் அழகழகான
முத்தங்களிடுவது தானே
அன்பான காதலின் நியாயம்!
உனக்கெனவே இருக்கும்
நான் உனக்காகவே வாழ்வதை
விட வேறு சொர்க்கம்
எனக்குக் கிடைத்து விடுமா
என்ன? வழங்கவும் பெறவும்
விரும்புகிறேன் அன்பை
மட்டுமல்ல அந்த அழகே
அழகான



காதல்
முத்தங்
களையும்
தான்!

**முத்து**
**ஆனந்த்**
வேலூர்



## கள்ளிப்பால் வேண்டும்

கருவறையில் இடம் தந்து
ஈரைந்து மாதம் தாங்கி
பத்தியம் இருந்து
வயிற்றுப் பிள்ளைக்குப்
பாதகமின்றி உறங்கி
தன் சுகம் மறந்து
பிள்ளை நலம் பேணும்
தாய்மையைப்
போற்றாதவர்க்குக்
கள்ளிப்பால் வேண்டும்

தன் தேவை துறந்து
பிள்ளைகள் வாழ்வைத்
தனதாக்கி வாழும்
பெற்றோரைச் சுயநலமாய்ப்
புறக்கணிக்கும் பொறுப்பற்ற
பிள்ளைகளுக்குக் கள்ளிப்பால்
வேண்டும்

தன் சுகம் தேடி
ஆசைக்குப் பொருள்
நாடி ஆதரவில்லாது
பிள்ளைகளைத்
தவிக்க விடும்
பெற்றோர்களுக்கு
கள்ளிப்பால் வேண்டும்

சமுதாய சீர்கேட்டைச்
சலனமின்றிச் செய்து
நல்லோர் வாழ்வை
ரணமாக்கும்
நயவஞ்சகருக்குக்
கள்ளிப்பால் வேண்டும்

நாடாளும் நல்லவரைத்
தவிர்த்து காசுக்கு
வாக்களித்து பேசும் சொல்லில்
மயங்கி தவறான வாக்கைத்
தளராது அளிப்போர்க்குக்
கள்ளிப்பால் வேண்டும்

தேசம் காக்கும்
பொறுப்பைத் துறந்து
நாசம் செய்து நாட்டைத் தரம்
இழக்கச் செய்யும்
அரசியல்வாதிகளுக்குக்
கள்ளிப்பால் வேண்டும்

வறுமையில் வாடி
வளர்ச்சிக்குத் தடையாகி
வளரும் தளிரை
வாட்டமுறச் செய்யும்
வஞ்சக மனிதருக்குக்
கள்ளிப்பால் வேண்டும்



வாழ்வின் விழுமங்கள்
மறந்து வலி தந்து
வழி தேடும்
யாவருக்குமாய்
கள்ளிப்பால் வேண்டும்

**தமிழ்நிலா**

---



## தமிழறிஞர் டாக்டர் மா.இராச மாணிக்கனார்!

நேரிசை வெண்பா!

வரலாற்று நூல்களை
வண்ணமாய்த் தந்தே

அருமைப்பணியை
அழகாய்ப்.. பெருமையுறச்

செய்தாரே சீருடன்
ராசமாணிக்கனார்

செய்தவத்தாரன்றோ சீர்!

நூலாசான் நேர்ந்த
தமிழாசான் நற்றமிழில்

கோலமுறு ஆய்வினைக்
கொண்டேநல்..ஆளுமை

கொண்டாரே
ராசமாணிக்கனார்
கொஞ்சுதமிழ்க்

கொண்டாரே உள்ளத்தில்
கூர்ந்து!

## மன்னுயிர்க்காக உழைப்பவரே...!

நேரிசை வெண்பா

பிறவுயிர்க்காய்ப்பாடுபடுவோர்
பீடுடை உயர்ந்தே
சிறப்புடையோர் என்க!
செழிப்பாய்..
அறநெறியைப் பின்பற்றி
ஆங்கே பெருமையாய்
வாழ்தலே நன்றாகும் பாரே
நனி!

மற்ற உயிரினம்
மாண்புடன் வாழவே உற்ற
துணைவராய் உன்னதமாய்ப்..
பற்றுடன் வாழ்தலே நன்றாம்
வளமான பாரையே சூழ்தலே
என்றும் நனி!

**முனைவர் இராம. வேதநாயகம்**
திருவண்ணாமலை.

---

## ஹைக்கூ

திரவத்தங்கம் திடத்தங்கம்
விலை உயர உயர
ஏழைகளுக்கு துன்பம் !

பிறக்கையில் முகம்
சுளித்தவர்கள் சாதித்தும்
அகம் குளிர்ந்தார்கள்
பெண் குழந்தை !

கூட்டணிவைத்து
கோடிகள்அடித்து
கடைசியாக அறிவித்தனர்
கசப்பான கூட்டணி !

கோயில் கருவறை
அனுமதி இல்லை
தமிழ் தமிழன் !

உயர் நீதி மன்றத்தில்
தொடரும் தீண்டாமை
தமிழ் மொழிக்கு !

உதட்டிலும் உள்ளத்திலும்
இல்லை தமிழ் தமிழன் ?

பாதுகாக்க முடியவில்லை
வேண்டவே வேண்டாம்
புதிய சிலை !

மரியாதைக்கு நிறுவியது
அவமதிக்க காரணியானது
சிலை !

சாலையில் படுத்திருந்தான்
சங்கடமின்றி குடிகாரன் !

குடியால் கோடிகள் அரசுக்கு
குடும்பம் தெருக்கோடிக்கு
திருந்தாத குடிமகன்கள் !
உதவுவதாக நினைத்து
துன்புறுத்துகின்றனர்
மாட்டுக்கு லாடம் !
(இரும்புக் காலணி)

இறந்த வீட்டில் எல்லோரும்
கேட்கும் கேள்வி
காப்பீடு எவ்வளவு ?

தவிர்க்கலாம் இட நெருக்கடி
புதைப்பதை விட
எரிப்பதே நலம் !

அளவான குடும்பம்
அளவற்ற இன்பம்
குடும்பக்கட்டுப்பாடு !

கருப்பணம் வெள்ளையானது
கோயில் கணக்கில்
உண்டியல் வசூல் !

கவனம் கவனம்
சாமியாரில் ஆசாமிகளில்
யாரும் இல்லை சாமி !

பறிக்கப் பறிக்கத்
துளிர்க்கும்
அட்சயப் பாத்திரம்
தேயிலைச்செடி !

**கவிஞர் இரா .இரவி**

---

## அச்சமின்றி வாழ்தல் அழகு!


அறுசீர் மண்டிலம்.

அச்சமின்றி வாழ்தல்
நன்று அஞ்சாமல் வாழ்தல்
நன்று இச்சையினை நீக்கல்
நன்று ஈகையினைக்
கொள்ளல் நன்று!
நச்சரிப்பு இன்றி வாழ்தல்
நாளும்தான் நன்று நன்று
உச்சத்தில் வாழ்ந்திட்டாலும்
உன்னதமாய் வாழ்தல் நன்று!

யாருக்கும் அஞ்ச வேண்டாம்
யாரிடமும் அச்சம் வேண்டாம்
சீருடன் வாழ்ந்திட்டாலே
செழிப்பன்றோ தானாய்
நிற்கும்!
ஊருடன் ஒத்துவாழ்ந்தால்
ஒழுங்கான வாழ்வே
காணும் பேருடனே புகழும்
கிட்டும் பீடில்லா அச்சம்
நீக்கு!

**முனைவர் இராம.வேதநாயகம்**

---



காயங்களை மருந்திட்டு...
ஆற்றிவிடலாம்...



தழும்புகளை
என்ன
செய்ய....

வருடிக்
கொடுத்துக்
கொண்டு
இருக்கின்றன...
உன் நினைவுகள்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

---



## மௌன மொழி காதல்

" உனக்காக தூது சென்று
திரும்பிய புறா

காதலனின் பரிசாக
கொடுத்த ரோஜாவை

பேசும் சித்திரமான
உன்னிடத்தில் மௌன
மொழியால் விளக்கிட ....

உன் இதழ் அசைவை
கண் சிமிட்டும் இமை
ரேகையை விரல்
ஜாலத்தை....

கண்டு மயங்கி தூதுப்
புறாவும் சொல்ல முடியாமல்
உன் நளினத்தில் தேக
மென்மையில் தூது
செய்தியை கூட மறந்து
நின்றது ..."

அழகின் அழகே வாய்
திறக்குமா என்று புறாவும்
ஏங்க காதல் ஓவியம் அழகு
சிலை மெய் சிலிர்த்தது ....."

உயிரோட்டம் உண்டு
என மௌனமாய்
வெளிப்படுத்திட சிலை
அலை நிஜம் என



காட்ட ஒரு
விரல்
அசைந்தது
மெதுவாக ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

---

## ஒரு நிமிஷம், ப்ளீஸ்...

ஆட்டைக் கடித்து
மாட்டைக் கடித்து
கடைசியில் மனுசனையே
கடித்த
கதையாகிப் போனதே
இதுநாள் வரை
நாமெல்லாம் வேடிக்கைப்
பார்த்த வளைகுடாப்
போர்...
பெட்ரோல், டீசல்,
பற்றாக்குறை கூடப்
பரவாயில்லை...
சமையல் காஸ்
சிலிண்டர் சப்ளை
இல்லை யென்றால்
என்னாவது?விறகடுப்புக்கு
மீண்டும் திரும்பும்
திறனுண்டா நமக்கு?
பகுத்தறியும் ஆறறிவு
இருந்தும் பக்குவம்
இல்லா பண்பாட்டு
சிதைவால் தானே
போர் என்னும் பொல்லா
அரக்கன் பூமியை
நாளும் துவம்சம்
பண்ணுகிறான்...
இனியாவது
வேடிக்கை பாராது
விழித்தெழுவோம்...
எந்த மூலையில்
போர் மூண்டாலும்
எழுச்சியோடு
கொதித்தெழுவோம்..
வெள்ளைக் கொடி ஏந்தி
உலக அமைதிக்கு
வெளிச்சம்பாய்ச்சுவோம்
எல்லாம் வல்ல
இறைவனிடம்
நித்தம் ஒரு நிமிடம்
தவறாமல் போரில்லா புது
உலகுக்காய்
நிறை உள்ளத்துடன்
பிரார்த்தனை
புரிவோம்...!



**நெல்லை குரலோன் பேரன்பு**
பொட்டல் புதூர்

---

## ஹைக்கூ !

சாண் பிள்ளையானாலும்
ஆண் பிள்ளை
ஆணாதிக்கம் விதைப்பு !

சிரித்தால் போச்சு
பெண் பிள்ளை
பெண்ணடிமை பாதிப்பு !

சாண் ஏற முழம் சறுக்கிறது
ஏழைகளின் வாழ்வு !

யாராவது குடித்தனர்
அன்று யாரவது
குடிப்பதில்லை இன்று !

சுற்றியது பம்பரம்
கயிறு இன்றி
சுழட்டினான் கையால் !

அவித்த நெல் முளைக்காது
அடங்காத மாணவன்
சிறக்க முடியாது !

உருவத்தில் சிறியது
உடல்நலத்திற்கு நல்லது
அருகம்புல் !

ஒரு முறை சொன்னாலும்
உயர் மதிப்பைக்
குறைக்கும் பொய் !

உருவம் பெரிதல்ல
சிங்கத்தைப் பார்த்து
பயந்தது யானை !

அறிந்து விடுகிறது
மழை வருவதை
தவளை !

சேற்றில் மலர்ந்தும்
ஒட்டவில்லை சேறு
தாமரை !

நாய்கள் நுழைந்தன
திறந்த வீட்டில்
பன்னாட்டு நிறுவனங்கள் !

பொதி சுமக்காது
துள்ளும் மாடு



அதிகம்
பேசும்
அரசியல்வாதி!

தான் பிடித்த
முயலுக்கு
மூன்றே கால்

அரசியல்வாதிகள் !

**கவிஞர் இரா .இரவி !**

---



## மண்பானைத் தண்ணீர்

பத்து ரூபாயிலோ
நூறு ரூபாயிலோ விதவிதமான
பழச்சாறு வாங்கி
அருந்தினாலும் கூட
உன் மு த் த ங் க ள் தா ன்
எனக்கு எப்பொழுதும்
மண்பானைத் தண்ணீர்!
மன அழுத்தமான
நேரங்களில் ஒரு
நேர்த்தியான கூடைப்பந்தாட்ட
வீராங்கனையாக
நீ என்னைக் கையாளுவது
சிறகுகள் இல்லாமலே(யே)
நான் பறக்கும் சுகம்!
நீ எனக்கெனவே அன்பைப்
பொழியும் இடியில்லாத
மின்னலில்லாத
மழை மோகினி!
நீ செய்யச் செய்ய
எல்லாப் பணிகளுமே
வெகு அழகாக மிக
நேர்த்தியாக நிறைவடைகிறது!
ஆகவே தான் உனக்கு
விண்ணப்பித்தேன்!
காதல் செய்தால் அழகாக
இருக்குமே என்று!

## கோன் ஐஸ்

குளிர் காலத்தில் உன்
மு த் த ங் க ள் பொறித்த
சூடான பாப்கார்ன் என்றால்
கோடைக்காலத்தில்
உன் அதர ஒத்திகைகள்
கோன் ஐஸ் மு த் த ங் க ள்!
உன் தோழிகளுக்கு நீ
தொட்டா சிணுங்கி என்றாலும்
நான் பட்டால் நீ எப்பொழுதும்
சிணுங்குவதேயில்லை!
நேசத் துரோகிகள்
என்னைச் சுற்றிலும்
படர்ந்திருக்க நீயோ என் காதல்
தேசத்தின் மகாராணி!
என் ஆட்டநாயகியாக
நீ இருப்பினும் என்னை
ஆளவந்தானாக்கி அழகு
பார்ப்பவள் நீ! எப்பொழுதும்
என் விருப்பமனு உன்
ஒருத்திக்காக மட்டுமே!
நாம் இருவர் மட்டுமே
வாக்களிக்கத்தான்
நம் கா த ல் மு ன் னே ற்றக்
க ழ க ம்!

## ஜில்.... ஜில்.... ஜிகர்தண்டா

சந்தனத்தால் உருவாக்கப்பட்ட
சிலை! நீ!
நீ புன்னகைத்தால் எனக்குப்
பொங்கல் திருவிழா!
நீ சிரித்தாலோ எனக்குத் தேர்த்
திருவிழா!
நான் எத்தனை பேரிடம்
பேசினாலும் உன்னைக்
கொஞ்சிக் குலவும் போது
மட்டும் தானே
இந்தக் காதல் மகிழ்ச்சியில்
குளித்தெழுகிறது!
கோடைக்காலம் முழுவதையும்
அப்படியே முழுவதுமாகக்
குளிர் காலமாக எனக்கு
மாற்றித் தரும் என்
இனிய *ஜில்.... ஜில்....
ஜிகர்தண்டா அழகி நீ!
நீ என் மாதரசி
மையலரசி எழிலரசி மட்டுமா?
எப்பொழுதும் என் காதலரசியும்
நீதானே!
என்னைத் தூற்றிப் பாடும்
பல நங்கையரிடையே
நீ மட்டுமே என்னைப் போற்றிப்
பாடும் மங்கை!
உன்னைக் காதலிக்கக்
காரணங்களே இல்லா
விட்டாலும் என் வாழ்நாளின்
இறுதி வரை உன்னை
நேசிப்பேன்!

## கப் ஐஸ்

உன் ஒவ்வொர் அழகிய
மு த் த த் தி லு ம் ஓர்
இனிப்பான *கப் ஐஸ்
உட்கார்ந்திருக்க எனக்கேதடி
கோடைக்காலம்!
பல மாம்ஸ் களிடமிருந்து
தப்பித்து என்னிடம் வந்த மீம்ஸ்
அழகி நீ! நீ மிக ட்ரெண்டியான
உடைகளில் வரும் போது
எனக்குத் தென்றலை
அறிமுகப்படுத்துகிறது
இந்தக் காதல்! என்னை வாழ
வைக்கும் வசீகரப் பட்சி
நீ என்று நினைத்து நான்
உன் லிப்லாக்குகளில்
சிக்குகையில் தான் தெரிகிறது!
தேவதைகளில் ராட்சசத்
தோல் போர்த்திய காத(கி)
லிகளும் உண்டென்று! நான்
கடுக்கன் அணிந்திருப்பவன்
தான் என்றாலும் உன்
இடுக்கண்களிலிருந்தும்
தப்பிக்கவும் தெரிந்தவன்!
காதல் பொய்யானவர்களை
வச்சி செய்யும்!
உண்மையானவர்களை
வச்சி வாழும்! வா........புரிய
வைக்கிறேன்!

## ஐஸ் மோர்

அலங்காரத்தை அழகாகச்
செய்திருந்தாலும்
அகங்காரத்தைக்
கிரீடமாக
அணிந்திருப்பவள் நீ!
திமிர் உனக்குக்
காதணிகள் என்றால்
கர்வம் உனக்கு
மூக்குத்தி! இவ்வளவு
ஏன்?!
கொழுப்பால் செய்த
ஒட்டியானம் தான் உனக்குப்
பிடிக்கும்! உன் கொலுசின்
மணிகள் கூடத்தெனாவட்டால்
செய்யப்பட்டிருக்குமோ
என்றோர் ஐயம் என் மனதில்
எப்பொழுதும் ஒட்டிக்
கொண்டிருக்கும்!
உன் வளையல்கள் கூட
ஆணவத்தால்
நெய்யப்பட்டிருக்கலாம்!
இதெல்லாம் இப்படியிருப்பினும்
எனக்கா(ன)க உன் அதரப்
பரிசுகள் அத்தனையும்
*ஐஸ் மோர் கலந்ததுதான்!
இது போதாதா?
நம் காதல் எப்பொழுதும்
சில்லென்றிருக்க!

## ஜவ்வரிசி ஐஸ்

உன்னை நாளெல்லாம்
பார்த்துக்கொண்டேயிருக்கலாம்
போல நீ அத்தனையோர்
அழகு! நீ
நேரில் வந்து விட்டா(லே)லோ
ஜவ்வரிசி ஐஸ் சாப்பிட்டது
போல ஜிவ்வென்று ஒரு
போதை! என்னுயிர் சிநேகிதி நீ
நீ எனக்குள் விதைத்த காதல்
நம்பிக்கை தான்
என் பார்வையை
ராஜபார்வையாக்கியது!
உன் விழிகளில் ஒளிரும்
அந்தக் காதலிலிருந்து
நான் எடுத்து எழுதும்
கவிதைகளின் எண்ணிக்கை
ஏராளம்! திருக்குறளில்
குறிப்பறிதல் போல
என் காதலறிவதில் நீ
என் அழகிய அமராவதி!
நீ பேசாமடந்தையாக இருக்கும்
போது(ம்)கூட காதலி(ல்)லே
கடமையாக இருப்பது
நான் அடைந்த அதிர்ஷ்டம்!

## சேமியா ஐஸ்

உனக்கென நான் எடுத்து
வரும் பூக்கள் கூட ஜொள்
வடிக்கிறது உன்னைப் பார்த்த
பின்! நீ எனக்காகச் சேர்த்து
வைத்திருக்கும் அன்பை
நினைத்த பிறகு *சேமியா
ஐஸைச் சப்புக் கொட்டி
ரசித்து ருசித்தாற்
போலிருந்தது எனக்கு!
பதினெட்டு முறை
படையெடுத்து வென்ற
கஜினி முகமதுவின் விடா
முயற்சி வீரம் என்றால்
கணக்கில்லாமல் உன்னைத்
தொடர்ந்து வென்ற எனக்கு
என்ன பட்டம் தருவாய் நீ!?
நமக்குள் கூட்டலும்



பெருக்கலும் இருக்கலாம்!
ஆனால் வகுத்தலும்
கழித்தலும்
வேண்டவே வேண்டாம்
என் பேரன்பே!

**முத்து ஆனந்த்**
வேலூர்

---



## நன்றாய் நின்ற மரம்

சிறுவயதில் நான்பார்க்க செழிப்புடனே நின்றமரம்
கறுநிழலை அடர்த்தியாகக் கால்பரப்பி நின்றமரம்
பெரும்பொழுதும் அதனடியில் பெருங்கூட்டம் இருந்தமரம்
வருவோர்க்கும் போவோர்க்கும் நிழலாக நின்றமரம் !

மாலையிலே சிறுவருடன் மகிழ்ந்துவிளை யாடுதற்கும்
ஓலைவேய்ந்த என்குடிசை ஒழுகிடவே ஒதுங்குதற்கும்
வாலையாட்டும் தெருநாய்கள் வந்துகாலைத் தூக்குதற்கும்
சாலையோரம் இடம்தந்து சத்திரமாய் நின்றமரம் !

குயில்கூவும் ஒருகிளையில் குருவிகூடு மறுகிளையில்
மயில்வந்து சிலநேரம் மகிழ்ந்திருக்கும் கீழ்க்கிளையில்
வெயில்சிறிதும் அறியாமல் வெவ்வேறு நிறப்புட்கள்
ஒயிலாக இணைகளுடன் ஒலியெழுப்பி நின்றமரம் !


ஊர்பெரியோர் சிற்றூரின் உயர்விற்காய் விவாதித்துச்
சீர்மையுடன் திட்டங்கள் செயல்வடிவம் பெற்றயிடம்
பேர்பெற்ற முதியோர்கள் பேரன்மார் பேத்தியுடன்
ஆர்வமுடன் கொஞ்சிதினம் அகம்மகிழ நின்றமரம் !

வயலுக்குச் செலும்பெண்கள் வாய்க்காலில் நீரெடுக்க
குடமோடு வரும்பெண்கள் குளத்தினிலே குளிப்பதற்கு
அயல்வீட்டுத் தோழியொடு அவசரமாய் வரும்பெண்கள்
துயரங்கள் பரிமாறத் துணையாக நின்றமரம் !

சிற்றூரின் வரலாற்றை சிறந்திருந்த பண்பாட்டைப்
பெற்றுநின்று சந்ததிக்கே பெருமையுடன் மொழிந்தமரம்
குற்றுயிராய்த் துடிதுடிக்கக் கூறுபோட்டு விற்றபோது
பெற்றவரை மறந்ததுபோல் பெயர்ந்தனரே மனத்தைவிற்றே !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

---



## கண்ணுக்கு கண்ணே

கண்ணே நீதானே என்
அகிலம் கனவிலும்
நினைவிலும் நீயே
இருப்பதால் நீயே என்
அகிலம் உன் விழிகள்
பார்ப்பதால் ஒவ்வொரு
விடியலும் மகிழ்ச்சியே
நீ பூக்கும் புன்னகை
மலர்ந்து மனம் வீசுதே
வீசும் தென்றலிலும்
உன்னுடைய பாசமே
உணர்கிறேன்
நடக்கும் ஒவ்வொரு
நாளும் உன் நினைவே
வருகிறது உன்னை
பார்க்க விழிகள்
கலங்குகிறதே உன்
விழிகள் நோக்கினால் என்
அகிலமே பரவசம் ஆகுதே
என் கண்ணுக்கு கண்ணே



நீ தானே
என் உலகம்
வாழ்நாள்
முழுவதும்
உன்
நினைவே
அதனால்
எனக்கு மகிழ்வே...


**உஷா முத்துராமன்**


கங்கோத்ரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots *Flats *House *Villa *Bungalows
*Farm Land *Ware Houses *Factory Sites *Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள்
தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfollo to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# பல்சுவை களஞ்சியம்






## ஆசியாவிலேயே மிகப் பெரிய விநாயகர்

ஆசியாவிலேயே மிகப் பெரிய கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த புலியகுளம் முந்தி விநாயகர் :


விநாயகருக்கு பல பெயர்கள் உண்டு. ‘விநாயகர்’ என்பது ‘மேலான தலைவர்’ என அர்த்தம் கொள்ளப்படும். ‘வி’ என்றால் மேலான என்றும் நாயகர் என்றால் தலைவர் என்றும், அதாவது தனக்கு மேலாக ஒருவர் இல்லாதவர் எனப் பொருள்படும். ‘விக்னேஸ்வரர்’ என்றால் ‘இடையூறுகளை நீக்குபவர்’ என்றும், ‘ஐங்கரன்’ என்றால் தும்பிக்கையுடன் சேர்த்து ஐந்து கரங்களை உடையவர் என்றும் அர்த்தம் கொள்ளப்படும்.‘கணபதி’ என்பது கணங்களுக்கு அதிபதி என்று பொருள்படும். இவ்வாறே அவரது சகல நாமங்களுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் அந்தந்தப் பெயர்களிலேயே அடங்கியுள்ளது.

இதுகுறித்து புலியகுளம் முந்தி விநாயகர் ஆலய நிர்வாகிகள், பூசாரிகள் கூறியதாவது : புலியகுளம் பகுதியை மையப்படுத்தி அமைந்துள்ள இந்தக் கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. கோயிலின் வளாகத்தில் அரச மரத்தடியில், ஆதி மூல விநாயகர் சிலை உள்ளது. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. அதைத் தொடர்ந்து, மக்கள் மனதில் என்றும் இருக்கும் வகையில் பெரிய விநாயகர் சிலை அமைக்க தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, ஒரே கல்லினால், பிரமாண்டமாக விநாயகர் சிலையை வடிவமைக்க முடிவு செய்யப்பட்டு, பிரத்யேகக் கல் தேர்வு செய்யப்பட்டது. அதில் பாதி பணிகள் முடிக்கப்பட்ட நிலையில், அந்தக் கல் புலியகுளத்துக்கு கொண்டு வரப்பட்டது. தற்போது கோயில் உள்ள இந்த இடத்தில் வைத்து, சிலையை முழுமையாக வடிவமைக்கும் பணிகள் கடந்த 1990-களின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டது. சில ஆண்டு பணிகளுக்கு பின்னர், 190 டன் எடை அளவில், 19 அடி உயரத்தில் பிரமாண்டமாக முந்தி விநாயகர் சிலை வடிவமைக்கப்பட்டது. கடந்த 1998-ம் ஆண்டு ஜனவரி 25-ம் தேதி இந்த சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த ஆலயம், கடந்த 98-ம் வருடம், ஜகத்குரு ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் தலைமையில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

ஆசியாவிலேயே, ஒரே கல்லால் செய்யப்பட்ட மிகப் பெரிய விநாயகர் சிலை என்ற பெருமையை புலியகுளம் முந்தி விநாயகர் கோயில் சிலை பெற்றுள்ளது.

முந்தி விநாயகர் சுமார் 19 அடி 10 அங்குல உயரமும் 11 அடி 10 அங்குல அகலமும், 8 அடி கனமும் கொண்டவராக, சுமார் 190 டன் எடை கொண்டவராகத் திகழ்கிறார்.



விநாயகரின் நெற்றி மட்டுமே இரண்டடி அகலம். துதிக்கை வலம் சுழிந்து காட்சி தருகிறார் பிள்ளையார். நான்கு திருக்கரங்கள். வலது முன் கரத்தில் தந்தமும் பின் கரத்தில் அங்குசமும்; இடது முன்கரத்தில் பலாப்பழமும் பின் கரத்தில் பாசக் கயிறும் கொண்டு காட்சி தருகிறார். தவிர, துதிக்கையில் மகாலட்சுமியின் அம்சமான அமிர்த கலசத்தைத் தாங்கியபடி, தாமரை பீடத்தில் அமர்ந்து அருள்பாலிக்கிறார் ஸ்ரீவிநாயகக் கடவுள். அவரின் கிரீடத்திலும் தாமரை மேல்நோக்கி விரிந்திருப்பது போன்ற வேலைப்பாடு மிக அழகு! வாசுகிப் பாம்பை, தன் வயிற்றில் கட்டிக் கொண்டிருப்பதால், நாக தோஷத்தை நீக்கி அருள்கிறார் ஸ்ரீகணபதி பெருமான். நாக தோஷம் உள்ளவர்கள், இங்கு வந்து ஸ்ரீவிநாயகரை வணங்கினால், தோஷம் நீங்கி, வளமுடன் வாழ்வார்கள் என்பது நம்பிக்கை” என்கிறார் கோயிலின் கார்த்திகேய குருக்கள்.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது’ என்ற வாக்குக்கு இணங்க, அம்பாள் பார்வதியும் பரமேஸ்வரனும் யானை உருக்கொண்டு ஸ்ரீவிநாயகப் பெருமானாகத் தோன்றியது போல் காட்சி அளிக்கிறார் கணபதி. அதாவது, அவரின் வலது பகுதி, ஆண்களைப் போலவும் இடது பக்கம் பெண்களின் வடிவிலும் அமைந்து உள்ளது.

தினமும் ஏராளமான மக்கள் வந்து, விநாயகரை தரிசனம் செய்து செல்கின்றனர்.

குறிப்பாக, விழா நாட்களில் கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகளவில் இருக்கும். விநாயகர் சதுர்த்தி தினத்தன்று, கோயிலுக்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வர். உள்ளூர் மட்டுமின்றி, வெளியூர்களில் இருந்தும் பக்தர்கள் வந்து தரிசனம் செய்து செல்வர். ஸ்ரீமுந்தி விநாயகரை வணங்கினால், அஷ்ட ஐஸ்வர்யங்களும் பெருகும். பதினாறு வகை பேறுகளும் பெற்று, பெருவாழ்வு வாழலாம் என்கின்றனர் பக்தர்கள்!

## என்னைப்பாடச் சொன்னால் என்ன பாடத் தோன்றும்?

நம் சமூகத்தில் உள்ள பல பேர்களிடம் ஒரு சினிமா பாட்டு பாடச் சொன்னால் அவர்கள் என்ன பாட்டு பாடுவார்கள் என்று ஒரு கற்பனை. இதோ கீழே.

**ENT டாக்டர் :** காதோடுதான் நான் பாடுவேன்.

**கண் டாக்டர் :** பார்வை ஒன்றே போதுமே. பல்லாயிரம் சொல் வேண்டுமோ.

**ஆர்தோ டாக்டர் :** ஆஹா மெல்ல நட மெல்ல நட மேனி என்னாகும் முல்லை மலர்ப் பாதம் நோகும்.

**இதய டாக்டர் :** என்னதான் ரகசியமோ இதயத்திலே.

**குழந்தை நல டாக்டர் :** இது குழந்தை பாடும் தாலாட்டு.

**மகப்பேறு டாக்டர் :** காது கொடுத்து கேட்டேன் ஆஹா குவா குவா சத்தம்.

**இஸ்ரோ விஞ்ஞானி :** நிலவே உன்னை அறிவேன் அங்கே நேரே ஓர் நாள் வருவேன்.

**தபால்காரர் :** அன்புள்ள மான்விழியே ஆசையில் ஓர் கடிதம்.

**பூக்கடைகாரர் :** ரோசாப்பூ சின்ன ரோசாப்பூ.

**தீயணைப்பு அதிகாரி :** அய்யோ பத்திக்கிச்சு பத்திக்கிச்சு.

**கூகுள் அலெக்சா :** உள்ளதைச் சொல்வேன் சொன்னதைச் செய்வேன் வேறொன்றும் தெரியாது.



**கரப்பான் பூச்சி :** இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம் இதுதான் எங்கள் உலகம்.

**விமான பைலட் :** பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்களே.

**ஓட்டல் உரிமையாளர்** கல்யாண சமையல் சாதம் காய்கறிகளும் பிரமாதம்.

**கணக்கு வாத்தியார் :** வரவு எட்டணா செலவு பத்தனா அதிகம் ரெண்டணா கடைசியில் துந்தனா.

**சோசியல் ஸ்டடிஸ் வாத்தியார் :** மதுரையில் பறந்த மீன் கொடியில் உன் கண்களைக் கண்டேனே.

**PT வாத்தியார் :** பறக்கும் பந்து பறக்கும் அதுபறந்தோடி வரும்போது.

**டிராயிங் மாஸ்டர் :** சித்திரம் பேசுதடி என் சிந்தை மயங்குதடி.

**ஏர்டெல் நெட்வர்க் :** நீ போகும் இடமெல்லாம் நானும் வருவேன் போ போ போ.

**சில்லரை வியாபாரி :** இந்த புன்னகை என்ன விலை?.

**AC மெகானிக் :** ஜில் என்று காற்று வந்ததோ

# மீம்ஸ்







# விடுகதை



| | |
|---|---|
| என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போறீங்க? | டாக்டர் தான் சுகர் இருக்கானா அடிக்கடி செக் பண்ண சொன்னாரு. |
| தானத்தில் பெரிய தானம் எது? | மைதானம். |
| ஏன்டா நாய் படம் வரைந்து விட்டு வாய் மட்டும வரையாமல் வச்சி இருக்க? | அது வாயில்லா பிராணி சார். |
| டாக்டர் இவ்வளவு மாத்திரையும் இரண்டு நாள்ல சாப்பிட்டு முடிக்கும் என்று சொன்னிங்களே ஏன்? | இரண்டு நாட்களுக்கு அப்புறம் எக்ஸ் ஸ்ப்ரே முடிந்துவிடும். |
| கும்பகர்ணன் மாத கணக்கில் தூங்கினான் அது என்ன காலம்? | கொசுவே இல்லாத காலம். |

# ஜோக்ஸ்



**ஆசிரியர் மாணவர் ஜோக்ஸ்**

பத்து நாளா கிளாஸுக்கு வரதில்லை?

ஒரே இடத்துக்கு அடிக்கடி போன மரியாதை இருக்காதுனு, எங்க அப்பா சொல்லி இருக்கார். அதான் சார் வரல!

**கடி ஜோக்ஸ்:**

டேய் ராமு! காலில் முள் குத்தியது இது என்ன காலம்?


கஷ்டகாலம், சார்.

வள்ளுவருக்கு அதிகாரம் செய்வது என்றால் ரொம்ப பிடிக்குமா சார்?

ஏன் அப்படி?

1330 குறலையும் 133 “அதிகாரமா” எழுதியிருக்காரே அதான் கேட்டான்.

உங்க ஆசிரியர் ஒரு மாதத்தில் சுமாராய் எத்தனை பாடங்கள் நடத்துவார்?



எல்லா பாடங்களையும் “சுமாராய்” தான் நடத்துவார்!

இந்தியாவில் எங்கெல்லாம் பெட்ரோல் கிடைக்கும்?

எல்லா பெட்ரோல் பங்கிலும் கிடைக்கும், சார்!


ஏன்டா பரிட்சை எழுத வந்துட்டு தூங்குற?

கேள்விக்கு பதில் தெரியலனா சும்மா “முழிச்சு”க்கிட்டு இருக்க கூடாதுன்னு எங்க அப்பா தான் சொன்னாங்க சார்.

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## கணைய பாதிப்பு ஏதனால்?



கணையம் என்பது மனித உடலில், வயிற்றுக்கு பின்னால் உள்ள ஒரு முக்கிய உறுப்பாகும்.

இது உணவு செரிமானம் மற்றும் ரத்த சர்க்கரையை கட்டுப்பாட்டில் வைக்க முக்கிய பங்கு வகிக்கிறது. செரிமான சுரப்பி மற்றும் உட்சுரப்பி என்று 2 விதமாக செயல்படும். செரிமான சுரப்பியாக செயல்படும் நிலையில், என்சைம்கள் என்ற நொதிகளை உற்பத்தி செய்து உணவை செரிக்க உதவுகிறது. உடலில் அமிலம், புரதம், கொழுப்பு ஆகியவற்றை உடைக்கவும், சிறுகுடலில் செரிமானத்தை மேம்படுத்தவும் செய்கிறது.

உட்சுரப்பி நிலையில் செயல்படும்போது, ரத்த சர்க்கரை அளவை ஒழுங்குபடுத்த இன்சுலின் மற்றும் குளூகோகான் என்ற ஹார்மோன்களை சுரக்கிறது. கணையத்தில் இருக்கும் பீட்டா செல்கள், கணையத்தின் லாங்கர்ஹான்ஸ் என்ற பகுதியில் இருக்கும் சிறப்பு நாளமில்லா செல்கள், ஹார்மோன்களை சுரந்து உடலில் சர்க்கரையின் சமநிலையை பேண உதவும் வகையில் இன்சுலினை வெளியிடுகின்றன.

அதிகமாக மது குடிப்பது, பித்தக்கற்கள், கணைய சாற்றுநீர் வெளியேறும் பாதை தடைபடுவது, அழற்சி ஏற்படுவது போன்றவற்றால் கணையம் வலுவிழக்கிறது. புற்றுநோய், இன்சுலின் உற்பத்தி குறைந்து ரத்த சர்க்கரை சமநிலை இழந்தாலும் கணையம் பாதிக்கப்படுகிறது. அதிக கொழுப்பு, கணையச் செல்களுக்கு நேரடி காயம், தொற்று போன்றவையும் கணைய செயல் இழப்புக்கு காரணமாக வாய்ப்பு உள்ளது.


## தேன் கெட்டுப்போவதில்லை... ஏன் தெரியுமா?



தேன் எத்தனை ஆண்டுகளானாலும் கெட்டுப்போகாது என்பார்கள். அது தூய்மையானதாகவும், முறையாக மூடி பாதுகாக்கப்பட்ட நிலையிலும் இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியமானது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் எகிப்திய கல்லறைகளுக்குள் ஆயிரம் ஆண்டுகளுக்கும் முந்தைய தேன் ஜாடிகளை கண்டுபிடித்தனர். அவை கெட்டுப்போகாமல் ருசிக்கக்கூடிய நிலையிலேயே இருந்தது. தேன் கெட்டுப்போகாமல் இருக்க என்ன காரணம் தெரியுமா?

தேனில் ஈரப்பதம் குறைவாகவே இருக்கும். அதாவது குறைந்த நீர் உள்ளடக்கத்தை கொண்டிருக்கும். அதனால் பாக்டீரியா, பூஞ்சை வளர அனுமதிக்காது. அத்துடன் தேன் இயற்கை அமிலத்தன்மையை கொண்டிருக்கும். அது நுண்ணுயிரிகளின் வளர்ச்சியை தடுத்துவிடும். தேனீக்கள், தேனில் என்சைம்களை சேர்க்கின்றன. அவை ஹைட்ரஜன் பெராக்சைடை உற்பத்தி செய்கின்றன. இது இயற்கை கிருமி நாசினியாகும். நுண்ணுயிர் வளர்ச்சியை மேலும் தடுத்துவிடும். இதுபோன்ற காரணங்கள் தேனை கெட்டுப்போகாமல் பாதுகாக்கின்றன.

## இதய ஆரோக்கியத்திற்கான சிறந்த பயிற்சிகள்



கரோனரி இதய நோய், செரிப்ரோவாஸ்குலர் நோய், புற தமனி நோய், வாத இதய நோய், பிறவி இதய நோய், ஆழமான நரம்பு ரத்த உறைவு மற்றும் நுரையீரல் தக்கையடைப்பு, மாரடைப்பு, பக்கவாதம் போன்ற இதய நோய்களை கட்டுப்படுத்த மற்றும் நிர்வகிக்க உடல் தகுதியுடன் இருப்பது முக்கியம்.

உடற்பயிற்சி இதய தசைகளை வலுப்படுத்த உதவுகிறது. பி.எம்.ஐ.யை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. அதிக கொழுப்பு, உயர் ரத்த சர்க்கரை மற்றும் உயர் ரத்த அழுத்தம் காரணமாக தமனி சேதமாவதின் அபாயத்தை குறைக்கிறது.

மாரடைப்பு ஏற்படுவதை தவிர்க்கிறது. வெவ்வேறு வகையான உடற்பயிற்சிகள் இருதய நோய்களில் வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

விறுவிறுப்பான நடைபயிற்சி, ஓட்டம், நீச்சல், சைக்கிள் ஓட்டுதல், டென்னிஸ் விளையாடுதல் மற்றும் கயிறு குதித்தல் போன்ற ஏரோபிக் பயிற்சிகள் சுழற்சியை மேம்படுத்துகின்றன. இதன் விளைவாக ரத்த அழுத்தம் மற்றும் இதய துடிப்பு குறைகிறது. இது இதய உந்துதலை மேம்படுத்துகிறது. நீரிழிவு கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

உடல் பருமன், அதிக வயிறு மற்றும் கொழுப்பு அதிகம் உள்ளவர்களுக்கு எதிர்ப்பு பயிற்சி உதவுகிறது. எதிர்ப்பு பயிற்சி கெட்டகொழுப்பை குறைக்கிறது. நல்ல கொழுப்பை மேம்படுத்துகிறது. கை எடைகள், டம்ப்பெல்ஸ் அல்லது பார்பெல்ஸ், வெயிட் மெசின்கள், புஷ்-அப்கள், குந்துகைகள் மற்றும் சின்-அப்கள் போன்ற இலவச எடைகளுடன் வேலை செய்வது எதிர்ப்பு பயிற்சிக்கான சிறந்த தேர்வாகும்.

நீட்சி, நெகிழ்வு மற்றும் சமநிலை நீட்டித்தல் போன்ற நெகிழ்வு தன்மை உடற்பயிற்சிகள் இருதய நோய் நிலைகளுக்கு நேரடியாக பங்களிக்காது. ஆனால் இது நெகிழ்வானதாகவும், மூட்டு வலி, தசைப்பிடிப்பு மற்றும் பிற தசை பிரச்சனைகளிலிருந்து விடுபடவும் உதவுகிறது.

## தோலுக்கு மினுமினுப்பை தரும் பீட்ரூட்



சைவ உணவுகளை எடுத்துக்கொள்வது உங்களது உடல் நலனுக்கு எந்தெந்த வகையிலெல்லாம் நல்லது என்பது குறித்து மருத்துவ மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் தரும் விளக்கம் இங்கே:

**நச்சுக்களை அகற்றுபவை:**

நார்சத்து மிகுந்த சுரைக்காய், பூசணி, பசலைக்கீரை மற்றும் முட்டைகோஸ் ஆகியவை சைவ உணவு வகைகளில் மிக முக்கியமானவை. உடலில் சேரும் நச்சுகளை அகற்றும் திறன் மேற்கூறிய காய்கறிகளுக்கு உண்டு. அதே சமயம் முட்டை, மீன் மற்றும் இறைச்சி போன்றவற்றில் புரதச்சத்து இருக்கும் அளவுக்கு நார்ச்சத்து இருப்பதில்லை.

**எலும்புகளை வலுவாக்குபவை:**

இறைச்சி உடலில் புரதத்தை அதிகமாக்கி, கொழுப்பை கூட்ட வழி வகுக்க கூடியது. மேலும் நமது சிறுநீரகத்திற்கு அதிக வேலைப்பளுவை ஏற்படுத்த செய்வதோடு, எலும்பிலுள்ள கால்சியத்தையும் உறிஞ்சி விடுகிறது. அதே சமயம் சைவ உணவில் இந்த பிரச்சனை இல்லை.

**கார்போஹைட்ரேட் பற்றாக்குறை:**

அசைவ உணவு அதிகம் எடுத்துக் கொள்பவர்களுக்கு கார்போ ஹைட்ரேட் பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்பும் அதிகம் உண்டு. இதனால் உடல் தனது இயக்கத்திற்கு தேவையான சக்தியை கார்போஹைட்ரேட்டில் இருந்து பெறுவதற்கு பதிலாக சேமித்து வைக்கப்பட்டுள்ள கொழுப்பிலிருந்து எடுத்துக்கொள்ளும் கீட்டோனியம் என்ற நிலை ஏற்படும். சைவ உணவுகள் மூலமாக கிடைக்கும் ஹார்போஹைட்ரேட் படிப்படியாக ஜீரணமாக உடலுக்கு தேவையான குளுகோஸ் சத்தை சீராக அளிக்கும். அதே சமயம் கொழுப்பும், புரதமும் அதிகம் நிறைந்த இறைச்சி உணவு ஜீரணமாகவே அதிக நேரம் எடுத்துக்கொள்ளும். சில சிமயங்களில் சிலருக்கு அது சிரமமாக கூட ஆகிவிடும்.

**ஆரோக்கியமான மேனி:**

பீட்ரூட், தக்காளி, பூசணி, பாகற்காய் போன்ற சைவ உணவுகள் ரத்தத்தை நன்கு சுத்திகரிப்பதோடு, தோலுக்கு மினு மினுப்பையும் கொடுக்கிறது. அத்துடன் கொய்யா, ஆப்பிள், பேரிக்காய் போன்ற பழங்களை உண்பதும் மேனிக்கு மினுமினுப்பை கூட்டும்.

## இளநீரை வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடாது- ஏன் தெரியுமா?



மனித குலத்துக்கு இயற்கை தந்த பொக்கிஷம் இளநீர். இது சுத்தமான சுவையான பானம் ஆகும். இளநீரில் செவ்விளநீர், பச்சை இளநீர், ரத்த சிவப்பில் உள்ள இளநீர் என பல்வேறு வகைகள் உள்ளன. இளநீரில் எல்லா வகையிலும் மருத்துவ குணங்கள் நிறைந்து உள்ளன.

அளவுக்கு அதிகமாக உள்ள வாதம், பித்தம், கபத்தை தீர்க்கும் மருந்து இளநீர். வெப்பத்தைத் தணிக்கும். உடலில் நீர்ச்சத்து குறையும் நிலையில் அதை சரி செய்யும்.

ஜீரண சக்தியை அதிகரிக்கும். சிறுநீரகத்தை சுத்திகரிக்கும். விந்துவை அதிகரிக்கும். மேக நோய்களை குணப்படுத்தும். ஜீரணக் கோளாறால் அவதிப்படும் குழந்தைகளுக்கு இளநீர் நல்ல மருந்து. உடலில் ஏற்படும் நீர் - உப்புப் பற்றாக்குறையை இளநீர் சரி செய்கிறது.

இளநீர் குடல் புழுக்களை அழிக்கிறது. இளநீரின் உப்புத்தன்மை, வழுவழுப்பு தன்மை காரணமாக காலரா நோயாளிகளுக்கு நல்ல சத்து. ஆற்றல் வாய்ந்த கரிமப் பொருள்கள் இளநீரில் உள்ளன. அவசர நிலையில் நோயாளிகளுக்கு இளநீரை நரம்பு மூலம் செலுத்தலாம். ரத்தத்தில் உள்ள பிளாஸ்மாவுக்கு சிறந்த மாற்று பொருளாக இளநீர் பயன்படுத்த ப்படுகிறது. ரத்தத்தில் கலந்துள்ள நச்சு பொருள்களை அகற்ற இளநீர் பயன்படுகிறது.

இளநீரில் அதிக அளவில் சத்துகள் உள்ளன. சர்க்கரை சத்துடன் தாது பொருள்களும் நிறைந்துள்ளன. பொட்டாஷியம், சோடியம், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, செம்பு, கந்தகம், குளோரைடு போன்ற தாதுக்கள் இளநீரில் உள்ளன. இளநீரில் உள்ள புரதச்சத்து, தாய்ப்பாலில் உள்ள புரதச்சத்துக்கு இணையானது. இளநீரை வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடாது. ஏனெனில் அதில் உள்ள அமிலத்தன்மை வயிற்றில் புண்ணை உருவாக்கும். ஏதாவது ஆகாரம் எடுத்த பின்னரே சாப்பிடவேண்டும்.

## டூத் பிரஷை மாதக்கணக்கில் உபயோகிப்பவரா நீங்கள்... இதை தெரிஞ்சிக்கோங்க




காலையில் எழுந்ததும் முதல் வேலையாக பல் துலக்கும் பழக்கத்தைத்தான் அனைவரும் பின்பற்றுவோம். வாய் சுகாதாரத்தை பராமரிப்பதற்கு பல் துலக்குவது அவசியமானது. ஆனால் பல் துலக்குவதில் காட்டும் ஆர்வத்தை பலரும் பிரஷ் விஷயத்தில் காண்பிப்பதில்லை. நிறைய பேர் பிரஷை மாதக்கணக்கில் உபயோகிப்பார்கள். அதில் இருக்கும் இழைகள் தேய்ந்து போகும் வரை உபயோகிப்பவர்களும் இருக்கிறார்கள்.

பல் மருத்துவர்களின் கருத்துப்படி, மூன்று முதல் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை பிரஷை கண்டிப்பாக மாற்றியாக வேண்டும். பிரஷை நீண்ட நாட்கள் பயன்படுத்தினால் அதிலிருக்கும் இழைகள் அதன் வடிவத்தை இழந்துவிடும். தேய்ந்தோ, உடைந்தோ போய்விடும். அதனை பயன்படுத்தினால் பற்களுக்கு இடையே இருக்கும் உணவுத்துகள்களை அகற்றும் செயல்திறன் குறைந்து போகும். ஈறுகளுக்கும் சேதம் ஏற்படுத்தும். ஏனென்றால் பிரெஷில் இருக்கும் இழைகள் நேராக, தொய்வடையாமல் இருந்தால்தான் பற்களுக்கு இடையேயும், ஈறு பகுதிகளிலும் சிறப்பாக செயல்படும். பழைய இழைகள் ஈறுகளை பாதுகாப்பதற்கு பதிலாக எரிச்சலடைய செய்யும்.

அத்துடன் பழைய இழைகளில் பாக்டீரியா, ஈஸ்ட் மற்றும் பூஞ்சை காளான்கள் படியக்கூடும். அவை வாய்வழி சுகாதாரத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும். பற்களில் கிருமிகள் பெருக காரணமாகி ஈறுகளை சிதைக்கக்கூடும். பிரஷ் இழைகள் தேய்ந்தாலோ, சேதம் அடைந்தாலோ 3 மாதங்கள் வரை காத்திருக்க வேண்டியதில்லை. உடனே மாற்றிவிடுவதுதான் பற்களுக்கு பாதுகாப்பானது.

குறிப்பாக குழந்தைகள் அதிக அழுத்தம் கொடுத்து பல் துலக்குவார்கள் என்பதால் அவர்களின் பிரஷ் இழைகள் வேகமாக தேய்ந்துவிடும். பிரஷ்களை மூடிய நிலையில் வைக்கக்கூடாது. ஏனெனில் ஈரப்பதம் பாக்டீரியா, வைரஸ் படிவதற்கு காரணமாகிவிடும். காற்றோட்ட சூழல்தான் சிறந்தது.



# உணவு பண்டங்களின் விலையை 30 சதவீதம் உயர்த்த முடிவு



தஞ்சாவூரில் உணவு பண்டங்களின் விலையை 30 சதவீதம் உயர்த்த முடிவு, வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 'பெருந்தலைவர் காமராஜர் புதிய பேருந்து நிலையம்




மயிலாடுதுறை மாவட்ட மக்களின் பல ஆண்டுகால கனவை நனவாக்கும் வகையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 'பெருந்தலைவர் காமராஜர் புதிய பேருந்து நிலையத்தை' தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காணொளி காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

# இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை



புதிய தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மொஜ்தபா காமேனியின் உயிருக்கு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளது சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சுழற்பந்து வீச்சாளர் அப்ரார் அகமதுவை சன்ரைசர்ஸ் லீட்ஸ் அணி வாங்கியு



'தி ஹண்ட்ரட்' தொடருக்கான ஏலத்தில் பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் அப்ரார் அகமதுவை சன்ரைசர்ஸ் லீட்ஸ் அணி வாங்கியுள்ளது, ஆனால் அதன்பிறகு சமூக வலைதளங்களில் இந்திய கிரிக்கெட் ரசிகர்களிடமிருந்து கடுமையான எதிர்வினைகள் எழுந்துள்ளன. ரசிகர்கள் அந்த அணியின் உரிமையாளர் காவ்யா மாறனை டிரோல் செய்து வருகின்றனர்.

# வேலூர் சதுப்பேரியில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் படகு குழாம் மற்றும் சுற்றுலா மையம் திறப்பு விழா!

**வேலூர், மார்ச் 14:**

திமுக தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வாழ்த்துக்களுடன், வேலூர் தெற்கு மாவட்டம், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, வேலூர் ஒன்றியம், சதுப்பேரி ஊராட்சியில் சுமார் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் படகு குழாம் மற்றும் சுற்றுலா மையம் திறப்பு விழா நடந்தது.

மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் தெற்கு மாவட்ட செயலாளர் மற்றும் அணைக்கட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ. பி. நந்தகுமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.



இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, ஒன்றிய குழு தலைவர் அமுதா ஞானசேகரன், மாநகராட்சி மேயர் சுஜாதா மற்றும் பல்வேறு அரசு துறை அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.

# அறிவு சார் வழித்தடம் குறித்து தவறான வதந்தி



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அறிவு சார் வழித்தடம் குறித்து தவறான வதந்தி பரப்பப்படுகிறது - பொது மக்களையும், விவசாயிகளையும் பாதிக்கின்ற எந்த ஒரு திட்டத்தையும் அரசு செயல்படுத்தாது என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உறுதியளித்துள்ளார்.

# சர்வ அலங்காரத்தில் ஸ்ரீ சுந்தரி அம்மன் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்



**வேலூர், மார்ச்14:**

வேலூர் மாவட்டம் ,காட்பாடி சித்தூர் - கடலூர் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது கிராம தேவதை சுந்தரி அம்மன். இந்த கோயிலில் வெள்ளிக்கிழமை தோறும் சர்வ அலங்காரத்தில் சுந்தரி அம்மன் பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். அதேபோன்று 13ஆம் தேதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேகம் நடந்தது. இதை தொடர்ந்து சர்வ அலங்காரத்தில் ஸ்ரீ சுந்தரி அம்மன் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று ஸ்ரீசுந்தரி அம்மனை தரிசித்தனர். இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பெருமாள் திருக்கோயில் துவானோவம் நாள்.



திருநின்றவூர் ஸ்ரீ மாத்சவித்ரி நாயேக சமேத ஸ்ரீ பக்தவத்ஸல பெருமாள் திருக்கோயில் துவானோவம் நாள்.

# அரசு நலத்திட்ட உதவி



28,639 பயனாளிகளுக்கு 254.59 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

# இணைப்பு சாலை அமைக்கும் பணி



சிதம்பரம் நகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க ரூ.28.90 கோடி மதிப்பில் இணைப்பு சாலை அமைக்கும் பணியை மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்.




2026 சட்டப்பேரவை தேர்தல் களம் தமிழகத்தில் படு தீவிரம் அடைந்துள்ளது. விரைவில் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக ஏப்ரல் 2 ஆம் வாரத்தில் தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளதாக ஒருபுறம் தகவல்கள் வெளியாகி வருகிறது. இதனால் அரசியல் கட்சிகள் கூட்டணிப் பேச்சுவார்த்தையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

# 1000 அடி தேங்காய் நார் விரிக்கப்பட்டு சிறப்பு ஏற்பாடு



மேலூர் அருகே அழகர்கோயில் ஸ்ரீகள்ளழகர் கோயிலில் வெயில் காலத்தில் பக்தர்கள் சிரமமின்றி தரிசனம் செய்ய கோயில் நிர்வாகம் சார்பில் 1000 அடி தேங்காய் நார் விரிக்கப்பட்டு சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு



திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் சார்பில் வந்தவாசி மற்றும் தெள்ளார் பகுதிகளை சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.



பெண் பணியாளர்களுக்கு மாதவிலக்கு விடுப்பு வழங்கும் கொள்கையை தேசிய அளவில் உருவாக்க கோரி, மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், பெண்களை பணி அமர்த்து வதில் சிக்கல்களை உருவாக்க கூடும் என்று கூறி, உச்ச நீதிமன்றம், மனுவை நிராகரித்தது.

# 95 நாடுகளில் பெட்ரோல் விலை உயர்வு



மேற்காசிய போர்ப் பதற்றத்தால் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது இதனால், 95 நாடுகளில் பெட்ரோல் விலை உயர்ந்துள்ளது.

# அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம்



அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா உருவம் பொறிக்கப்பட்ட கட்சிக் கொடியை வி.கே.சசிகலா அறிமுகப்படுத்திய நிலையில், இன்று தன்னுடைய புதிய கட்சியின் பெயரையும் அறிவித்துள்ளார். 'அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம்' என தன் கட்சியின் பெயரை அறிவித்ததுடன், 4 தென்னை மரங்கள் அடங்கிய தென்னந்தோப்பு சின்னத்தையும் தேர்வு செய்துள்ளார்.

# தலைவர்கள் கண்டனம்



தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவதால், முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி, தவெக தலைவர் விஜய், பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். தூத்துக்குடி மற்றும் மதுராந்தகம் பகுதிகளில் நடந்த சம்பவங்கள் அரசியல் விவாதமாக மாறியுள்ளன. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு குறித்து அரசியல் தலைவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.



# வரி அறிக்கை சமர்ப்பித்தல் குறித்தான பயிற்சி




சென்னையில் 3 நாட்களுக்கு, ஜிஎஸ்டி இ-வே பில்லிங் மற்றும் வருமான வரி அறிக்கை சமர்ப்பித்தல் குறித்தான பயிற்சியை தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் நடத்தவுள்ளது.




# மயிலை மயூரவல்லி தயார்

மயிலை மயூரவல்லி தயார் வெள்ளிக்கிழமை சேவை.

# சுற்றுலா: கோடை விடுமுறையில் மலைவாசஸ்தலங்களுள் ஒன்றுக்குச் செல்லலாமே!







மிக ரம்மியமான மலை வாசஸ்தலங்கள் தமிழ்நாட்டின் தனித்துவமான வசீகரம் . கோடை விடுமுறை நெருங்கி வருவதாலும், வெப்பம் அதிகமாகி வருவதாலும், இதமான வானிலை, இயற்கைப் பசுமை, தூய மற்றும் புதிய மலைக் காற்று மற்றும் ஏராளமான இயற்கை அழகு ஆகியவற்றைக் கொண்ட இந்த மயக்கும் மலைவாசஸ்தலங்கள் கோடை வெயிலில் இருந்து விடுபட்டு, புத்துணர்ச்சியூட்டும் விடுமுறைக்கு சரியான தேர்வாக அமைகின்றன. இயற்கை அன்னையின் அரவணைப்பில் ஒரு மறக்கமுடியாத விடுமுறையைக் கழிப்பதற்கும், ஓய்வெடுக்கவும், தமிழ்நாட்டின் பல அழகான மலைவாசஸ்தலங்களுள் ஒன்றைத் தேர்ந்தெடுப்போமா?

1. 1.வால்பாறை

தமிழ்நாட்டின் மிகவும் அமைதியான மற்றும் கண்கவர் மலைவாசஸ்தலமான வால்பாறை, பசுமைமாறா காடுகளால் சூழப்பட்டது அதன் அழகிய தேநீர் மற்றும் காபி தோட்டங்கள், ஓய்வெடுக்கும் குளிர்ந்த காலநிலை, மாசுபடாத காற்று மற்றும் முடிவில்லாத மலையேற்றங்கள், காட்டுப் பாதைகள் ஆகியவற்றால் பார்வையாளர்களை மகிழ்விக்கிறது.

2. 2.கொல்லிமலை

அழகிய கொல்லிமலை அதன் இயற்கை அழகுடன், இதுவரை சுற்றுலா பயணிகளால் கைப்பற்றப்படாத, ஆராயப்படாத, கறைபடாத மற்றும் மாசுபடாத மலைவாசஸ்தலமாகும். உள்ளூர்வாசிகளுக்கு மத்தியில் தமிழ்நாட்டின் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையானது "மரண மலை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

3. 3.கொடைக்கானல்

கொடைக்கானல் முழுமையான புத்துணர்ச்சியூட்டும் ஒரு அற்புதமான இடமாகும். கோடைவெப்பத்தைத் தணிக்க கண்டிப்பாக பார்க்க வேண்டிய மலைவாசஸ்தலம். இந்த அழகிய மலைவாசஸ்தலம் பச்சை நிற சரிவுகளின் வசீகரிக்கும் கம்பளம், மூடுபனி மலை உச்சிகள், மாய பள்ளத்தாக்குகள் மற்றும் உருளும் மேய்ச்சல் நிலங்கள் நிறைந்த அழகிய நிலப்பரப்பால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

4. 4.பொள்ளாச்சி டாப் ஸ்லிப்

தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருக்கும் பொள்ளாச்சியில் உள்ள டாப் ஸ்லிப் தமிழ்நாட்டின் மற்றொரு அழகிய மலைவாசஸ்தலமாகும். இது மயக்கும் இயற்கை அழகு மற்றும் ஓய்வெடுக்க அமைதியான சூழலை வழங்குகிறது. அற்புதமான வனவிலங்குகள் நிறைந்த பசுமையான மழைக்காடுகள், மலைகள் வழியாக சலசலக்கும் நதி நீரோடைகள் மற்றும் அழகிய பள்ளத்தாக்குகள் கொண்ட இந்த இடம் மிகவும் வளமானது. இந்த இடத்தின் அமைதி நம்மை வருடி மகிழ்விக்கும்.

5. 5.ஊட்டி

நீலகிரியில் உள்ள ஊட்டி தமிழ்நாட்டின் மனதைக் கவரும் மலைவாசஸ்தலங்களில் ஒன்றாகும் , இது கண்களுக்கு கவர்ச்சியானது, மனதிற்கு புத்துணர்ச்சி மற்றும் ஆன்மாவிற்கு ஊக்கமளிக்கிறது. பசுமையான பள்ளத்தாக்குகள், உயரமான மலைகள், அழகான தேயிலை தோட்டங்கள், பரந்த நிலப்பரப்புகள் மற்றும் அழகிய இடங்கள் ஆகியவற்றின் அற்புதமான இருப்பிடம் ஊட்டி. குறிப்பாக கோடைக்காலத்தில் சுத்த, ஆனந்தமாக இருக்கும். இயற்கையின் கலப்படமற்ற அழகைநீங்கள் அனுபவிக்கக்கூடிய தூய்மையான மற்றும் மிகவும் அழகிய மலைவாசஸ்தலங்களில் இதுவும் ஒன்றாகும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### நிலக்கரி நிறுவனத்தில் 667 மைனிங் காலியிடங்கள்

மத்திய அரசின் கீழ் செயல்படும் மகாநதி நிலக்கரி நிறுவனத்தில் (எம்.சி.எப்.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஜூனியர் ஓவர்மேன் 192, மைனிங் 448, சர்வேயர் 24 உட்பட மொத்தம் 667 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பிளஸ் 2 / டிப்ளமோ வயது: 18-30 (6.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு, விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1180. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 6.4.2026 விவரங்களுக்கு: mahanadicoal.in

### சிறுதொழில் நிறுவனத்தில் உதவியாளர் வாய்ப்பு



தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தில் (டான்சி) காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அலுவலக உதவியாளர் 7, டிரைவர் 4 என மொத்தம் 11 இடங்கள் உள்ளன. கல்வித்தகுதி: எட்டாம் வகுப்பு, டிரைவிங் லைசென்ஸ்

வயது: 18-34 (31.3.2026ன் படி) தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். Tamil Nadu Small Industries Corporation Limited (TANSI), No. 28, Thiru Vi Ka Industrial Estate, Guindy, Chennai - 600 032. கடைசிநாள்: 31.3.2026

விவரங்களுக்கு: tansi.tn.gov.in

## 250 சிறப்பு மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணை

**சென்னை, மார்ச் 14:**

*மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக 250 சிறப்பு மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்.*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ துறையில் 182 சிறப்பு மருத்துவர்களும், கதிரியக்கவியல் துறையில் 37 சிறப்பு மருத்துவர்களும், தடயவியல் மருத்துவத் துறையில் 24 சிறப்பு மருத்துவர்களும், முதியோர் மருத்துவத் துறையில் 6 சிறப்பு மருத்துவர்களும், இருதய அறுவை சிகிச்சை துறையில் 1 சிறப்பு மருத்துவரும், என மொத்தம் 250 சிறப்பு மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.*

*இவ்வரசு பொறுப்பேற்ற இந்த ஐந்து ஆண்டு காலத்தில் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 4,977 உதவி மருத்துவர்கள், 27 மாற்றுத்திறனாளி செவிலியர்கள், 1,011 மருந்தாளுநர்கள் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர், சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவ உதவியாளர்கள், உள்ளிட்ட இதர மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் என மொத்தம் 12,177 பணியாளர்கள்தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.*

*இந்த நிகழ்ச்சியில், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ப. செந்தில்குமார், மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத் தலைவர் உமா மகேஸ்வரி, நோய் தடுப்பு இயக்குநர் அ.சோமசுந்தரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

## கியாஸ் தட்டுப்பாடு எதிரொலி: ஓட்டல்கள் மூடல் 'இன்டக்சன்' அடுப்பு கிடைக்காததால் டீக்கடைகளும் பாதிப்பு

**சென்னை, மார்ச் 14:**




ஈரான் இஸ்ரேல் அமெரிக்கா போர் எதிரொலி சமையல் 'கியாஸ்' தட்டுப்பாடு காரணமாக சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களில் பல ஓட்டல் மூடப்பட்டு வருகின்றன. கியாசுக்கு பதிலாக மாற்று ஏற்பாடான 'இன்டக்சன்' அடுப்பும் கிடைக்காததால் டீக்கடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது வணிக நிறுவனங்களுக்கு கியாஸ் சிலிண்டர் வினியோகம் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக ஓட்டல்கள், உணவகங்கள், தங்கும் விடுதிகளில் உணவு தயாரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஓட்டல், உணவகங்கள் ஒவ்வொன்றாக மூடப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே சிறு ஓட்டல்கள் மூடப்பட்டுவிட்டன. சற்று பெரிய ஓட்டல்களில் கூடுதல் எண்ணிக்கையில் கியாஸ் சிலிண்டர்கள் இருத்ததால் ஓரளவுக்கு நிலைமையை சமாளித்து வருகின்றனர். 2-வது நாளாக நேற்றும் பல ஓட்டல்கள், டீக்கடைகள், துரித உணவகங்களும் மூடப்பட்டன.

கியாஸ் சிலிண்டர் கிடைக்காததல் டீக் கடைகள் உள்ளிட்ட ஒருசில சிறிய உணவகங்கள் 'இன்டக்சன்' அடுப்பைப் (மின்சார அடுப்பு) பயன்படுத்தத் தொடங்கினர். அதிக அளவில் 'இன்டக்சன்' அடுப்புகள் விற்பனை ஆனதால் தற்போது 'இன்டக்சன்' அடுப்பு கிடைப்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 'இன்டக்சன்' அடுப்பு கிடைக்காததால் பலர் அதிக விலை கொடுத்து அதனைவாங்கிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. சில டீக்கடைகள் முன்பதிவு செய்து 'இன்டக்சன்' அடுப்புகளை வாங்கி செல்கின்றனர்.

## குற்ற வழக்கு அரசு உதவி வழக்குரைஞர் 45 பேருக்கு பணி நியமன ஆணை: முதலமைச்சர் ஸ்டாலின் வழங்கினார்



**சென்னை, மார்ச் 14:**

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக குற்ற வழக்குத் தொடர்வுத் துறையில் அரசு உதவி வழக்குரைஞர் நிலை-2 பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 45 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.*

*குற்ற வழக்குத் தொடர்வுத் துறையில் உள்ள அரசு உதவி வழக்குரைஞர்நிலை-2 வழக்குரைஞர்கள், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் பெருநகர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை நடத்துவர். அத்துடன் அவர்கள் மாற்றுப் பணியில் பல்வேறு அரசுத் துறைகளில் சட்ட ஆலோசகர்களாக பணிபுரிவர்.*

*இந்நிகழ்ச்சியில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், குற்ற வழக்குத் தொடர்வுத் துறை இயக்குநர் ஜி. கிருஷ்ணராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

## சென்னை வந்த ரெயிலில் கொண்டுவந்த ரூ. 80 லட்சம் பணம் பறிமுதல்

**சென்னை, மார்ச் 14:**

கோவையிலிருந்து சென்னை வந்த ரெயிலில் உரிய ஆவணம் இல்லாமல் ரூ. 80 லட்சம் பணத்தை கொண்டுவந்த பயணியை போலீசார் கைது செய்து, பணத்தை பறிமுதல் செய்தனர்.

சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையில் ரெயில்வே பாதுகாப்புப்படை தேர்தல்சிறப்புக்குழுவினர் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ மதுசூதன் ரெட்டியின் மேற்பார்வையில் பிளாட்ஃபார்ம் எண்.11ல் வந்த ரயில் எண். 12680 (கோயம்புத்தூர் முதல் சென்னை சென்ட்ரல் வரை) இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் ரயில் பயணிகளை கண்காணித்து வந்தனர். அப்போது சந்தேகப்படும்படி வந்த சேலத்தைச் சேர்ந்த ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கேசவன் (வயது 47) என்ற பயணியை சோதனை செய்தனர். அப்போது அவர் எந்த சட்ட ஆவணங்களும் இல்லாமல், சேலத்திலிருந்து சென்னை சென்ட்ரலுக்கு இரண்டு பைகளில் ரூ.80 லட்சம் பணத்துடன் வந்ததை கண்டுபிடித்தனர். இதைத் தொடர்ந்து அவரை போலீசார் கைது செய்தனர். மேலும் அந்தப் பணத்தை பறிமுதல் செய்து, உரிய சட்ட நடவடிக்கைகளுக்காக வருமான வரி அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அந்த பயணி வெள்ளி வாங்குவதற்காக அவர் பணத்தை எடுத்துச் சென்றது விசாரணை தெரியவந்தது.

## ஆன்லைன் வர்த்தகத்தில் ரூ. 40 லட்சம் மோசடி: 2 பேர் கைது

**ஆவடி, மார்ச் 14:**

ஆவடி காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட படூர் பகுதியை சேர்ந்த சுஜாதாநாதன் என்பவர், அவருடைய வாட்அப்-க்கு வந்த ஆன் லைன் வர்த்தக விளம்பரத்தில் ஆன்லைன் டிரேடிங் பிளாட்பார்மில் முதலீடு செய்தால் இரட்டிப்பு லாபம் கிடைக்கும் என தெரிவித்து ஆசை வார்த்தை கூறிய நம்பி அவர்களது வங்கிக் கணக்கில் ரூ.40,32,559 பணம் செலுத்தி உள்ளார். பணம் திரும்ப வராமல் போனதால் தான் ஏமாற்றப்பட்டுள்ளதை உணர்ந்து தன்னை ஏமாற்றிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஆவடி சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன் அடிப்படையில் ஆவடி இணையவழி குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் சுபாஷினி தலைமையிலான போலீசார் தீவிர விசாரணை நடத்தி கோயம்பத்தூர் பகுதியை சேர்ந்த அஜய் சுபாஷ்சந்திரன், ரமேஷ் குமார் ஆகிய இருவரையும் கைது செய்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணை நடத்தியதில் அவர்கள் இருவரும் டிரஸ்ட் பெயரில் உள்ள கணக்குகளையும் மற்றும் கம்பெனி பெயரில் உள்ள வங்கி கணக்குகளை பெற்று ஆன்லைன் பணம் வர்த்தகம் செய்யும் மேற்கு வங்கம் மாநிலத்தில் உள்ள நபர்களிடம் ஒவ்வொரு வங்கி கணக்கிற்கும் 25% கமிஷன் தொகை பெற்று ஆன்லைன் பணம் வர்த்தகம் செய்யும் அயல் மாநில அடையாளம் தெரியாத நபர்களுக்கு பொதுமக்களின் வங்கி கணக்குகளை கமிஷன் தொகைக்காக விற்று, தொகைக்கு ஏற்ப கமிஷன் பணத்தை ரொக்கமாக பெற்றுக்கொண்டு பண மோசடி செய்து ஏமாற்றியது தெரியவந்தது. மேலும் கமிஷன் தொகைக்காக ஏஜென்ட் ஆக செயல்பட்டதாக 219 வழக்குகள் பதிவாகியுள்ளது தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட 2 பேரையும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# சட்டப்பேரவை தேர்தல் முன்னேற்பாடுகள்: தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் சென்னை டிஇஓ ஆலோசனை

**சென்னை, மார்ச் 14:**

சட்டப்பேரவைத் தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பாக சென்னை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் மாவட்ட தேர்தல் அலுவலர் (டிஇஓ) ஜெ.குமரகுருபரன் நேற்று ஆலோசனை நடத்தினார்.




சென்னையில் உள்ள 16 தொகுதிகளில் எதிர்வரும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் தேர்தல் நடத்தை விதிகளை அமல்படுத்தி கண்காணிக்க தேர்தல் இணைப்புப் பொறுப்பாளர்கள் (Nodal Officers) நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு, வீடியோ கண்காணிப்புக் குழு மற்றும் வீடியோ பார்வையிடும் குழு ஆகியவற்றின் மூலம் சென்னை மாவட்டம் முழுவதும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுக்களில் நாளொன்றுக்கு தலா 3 குழுக்கள் வீதம் சுழற்சி முறையில் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

3 நபர்கள் அடங்கிய வீடியோ கண்காணிப்புக் குழு தயார்நிலையில் இருக்கவும், இந்தக் குழுக்கள் ஒவ்வொரு நாளும் களப்பணியில் இருந்து, சட்ட விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன் மீது நடைமுறையில் உள்ள சட்டப்படி நடவடிக்கை எடுத்து, அதை உயர்நிலை அலுவலர்களுக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் செலவின கண்காணிப்புக்காக தேர்தல் கைப்பற்றுகை மேலாண்மை அமைப்பு (Election Seizure Management System) 20-க்கும் மேற்பட்ட வெவ்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் மூலம் செயல்பட உள்ளது குறித்து விளக்கப்பட்டது.

மேலும் சி-விஜில் (C-VIGIL) என்ற பொதுமக்கள் கண்காணிப்பு செயலி மூலம் பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு உடனடியாக தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் அறிவுறுத்தினார்.

## க்ரைம் கார்னர்

### திருமணம் செய்துகொள்வதாக கூறி நர்சை பலாத்காரம் செய்து பணம் மோசடி - பாதிரியார் கைது

**திருவனந்தபுரம், மார்ச் 14:**

கேரளம் மாநிலம் திருவனந்தபுரம் அஞ்சுதெங்கு பகுதியை சேர்ந்த வர் சாம் ஹார்ட் (வயது 42). இவர், திருச்சூர் மாவட்டம் இரிஞாலக்குடாவில் உள்ள தேவாலயத்தில் பாதிரியாராக பணியாற்றி வந்தார். இதேபோல் அதேபகுதியை சேர்ந்த பெண். வெளிநாட்டில் நர்சாக பணியாற்றி வந்தார். இவர் சமீபத்தில் சொந்த ஊருக்கு வந்திருந்தார்.

அப்போது மதபோதகர் சாம் ஹார்ட்டுக்கும், பெண்ணுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து சாம் ஹார்ட், பெண்ணை திருமணம் செய்து கொள்வதாக கூறி பலமுறை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். அத்துடன் பெண்ணிடம் இருந்து ரூ.16 லட்சம் பெற்றார். ஆனால் அவர் சொன்னபடி பெண்ணை திருமணம் செய்யவில்லை. பணத்தையும் திருப்பி கொடுக்கவில்லை.

இதனால் பாதிக்கப்பட்ட பெண், இதுகுறித்து இரிஞாலக்குடா போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி சாம் ஹார்ட்டை கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### தண்ணீர் பிடிப்பதில் தகராறு: பக்கத்து வீட்டுக்காரரை அடித்து கொன்ற இளைஞர்

**மும்பை, மார்ச் 14:**

மராட்டிய மாநிலம் டோம்பிவ்லி பகுதியை சேர்ந்தவர் அக்ஷய் ஜாதவ் (வயது 28). இவரது பக்கத்துவீட்டில் வசிப்பவர் உமேஷ் வாகே (வயது 34). இவர்களுக்கிடையே தெருவில் உள்ள குடிநீர் குழாயில் தண்ணீர் பிடிப்பதில் அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு தகராறு முற்றியது. இதில் ஆத்திரமடைந்த அக்ஷய் ஜாதவ் கம்பியால் உமேஷ் வாகேயின் தலையில் பலமாக தாக்கினார் இதில் ரத்தவெள்ளத்தில் சரிந்த உமேஷ் சம்பவ இடத்திலேய பரிதாபமாக உயிரிழந்தார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் அக்ஷய் ஜாதவை கைது செய்து விசாரனை நடத்தி வருகின்றனர்.

### மாணவி கடத்தி பாலியல் வன்கொடுமை வழக்கில் திருப்பம்: மன அழுத்தத்தில் பொய் புகார்

**சென்னை, மார்ச் 14:**

திருச்சியைச் சேர்ந்த 22 வயதுடைய பி.டெக். மாணவி ஒருவர் கடந்த மாதம் 14-ம் தேதி ப்ராஜெக்ட் செய்ய வேண்டி சென்னை வந்து, அடையாறு பகுதியில் உள்ள பெண்கள் விடுதியில் அறை எடுத்து தங்கினார். சென்னை வந்த சில நாட்களில் அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் மாணவி செல்போன் எண்ணை 'ஹெக்' செய்து அவரது புகைப்படங்களை பதிவிறக்கம் செய்ததாக கூறப்படுகிறது.

பின்னர் அந்த புகைப்படங்களை மார்பிங் செய்து ஆபாசப் படமாக மாணவியின் செல்போனுக்கு அனுப்பிய கும்பல் இந்த புகைப்படங்களை அனைவருக்கும் அனுப்பி வைத்துவிடுவோம் எனக்கூறி மிரட்டினராம். இந்நிலையில் கடந்த 9-ம் தேதி கோட்டூர்புரம் அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்ற அந்த மாணவி, வாய்மொழியாக புகார் தெரிவித்தார். அதில், மார்ச் 9 அன்று காரில் வந்த அடையாளம் தெரியாத 4 பேர் கும்பல் தன்னை வலுக்கட்டாயமாக காரில் கடத்தி முகத்தில் மயக்க பவுடரை பூசி, பின்னர் அடையாறில் இறக்கி விட்டதாகவும், அதன் பின்னர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் தெரிவித்தார். இந்நிலையில், இந்த வழக்கில் திடீர் திருப்பமாக புகார் அளித்த மாணவி போலீஸ் அதிகாரிகளிடம் சென்று, "படிப்பு விவகாரத்தில் கடுமையான மன அழுத்தத்தில் இருந்தேன்.

இதனால் என்னை 4 பேர் கும்பல் கடத்தியதாகவும், முகத்தில் மயக்க பவுடரை பூசியதாகவும் உண்மைக்கு மாறான தகவலுடன் புகார் அளித்துவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்' என தெரிவித்துள்ளார்.

இது போன்றதொரு சம்பவமே நடைபெறவில்லை என தெரிந்த பிறகே போலீஸார் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். மேலும், மாணவிக்கு மன அழுத்தத்துக்கான உளவியல் ஆலோசனை வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

## விளையாட்டு செய்திகள்

### கால்பந்து: டிபிஒய்சி கீழ்ப்பாக்கம் அணியை வீழ்த்தியது ஐசிஎஃப்!

**சென்னை, மார்ச் 14:**

சென்னை கால்பந்து சங்கம் சார்பில் சீனியர் டிவிஷன் லீக் 2025-26 போட்டி செனாய் நகரில் உள்ள பாவேந்தர் பாரதிதாசன் கால்பந்து மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஐசிஎஃப் - டிபிஒய்சி கீழ்ப்பாக்கம் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் ஐசிஎஃப் அணி 2-0 என்ற கால் கணக்கில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் 28-வது நிமிடத்தில் ஸ்ரீகுட்டனும், 64-வது நிமிடத்தில் நரேஷும் கோல் அடித்து அசத்தினர். சிறந்த வீரராக ஐசிஎஃப் அணியின் ஆல்பின் வால்டர் தேர்வானார்.

### சுவிஸ் ஓபன் பாட்மிண்டன் 2-வது சுற்றில் தருண் மனேப்பள்ளி

**பாசல், மார்ச் 14:**

சுவிட் சர்லாந்தின் பாசல் நகரில் சுவிஸ் ஓபன் பாட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் உலகத் தரவரிசையில் 42-வது இடத்தில் உள்ள இந்தியாவின் தருண் மனேப்பள்ளி, போட்டித் தரவரிசையில் 5-வது இடத்தில் உள்ள ஜப்பானின் கென்டா நிஷிமோடாவுடன் மோதினார்.

இதில் தருண் மனேப்பள்ளி 16-21, 21-16, 7-2 என்ற செட் கணக்கில் முன்னிலையில் இருந்த போது கென்டா நிஷிமோடா தோள்பட்டை காயம் காரணமாக விலகினார். இதனால் தருண் மனேப்பள்ளி 2-வது சுற்றுக்கு முன்னேறினார். 2-வது சுற்றில் தருண் மனேப்பள்ளி, மலேசியாவின் ஜஸ்டின் ஹோவுடன் மோதுகிறார். மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் மாளவிகா பன்சோத், உலகத் தரவரிசையில் 4-வது இடத்தில் உள்ள தாய்லாந்தின் போர்ன்பாவீ சோச்சுவாங்குடன் மோதினார். இதில் மாளவிகா பன்சோத் 11-21, 15-21 என்ற நேர் செட் கணக்கில் தோல்வி அடைந்தார்.

### இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் அரை இறுதியில் பாம்ப்ரி ஜோடி

**இந்தியன் வெல்ஸ், மார்ச் 14:**


அமெரிக்காவின் இந்தியன் வெல்ஸ் நகரில் இந்தியன் வெல்ஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் இரட்டையர் பிரிவு கால் இறுதி சுற்றில் இந்தியாவின் யுகி பாம்ப்ரி, சுவீடனின் ஆன்ட்ரே கோரன்சன் ஜோடி ஆஸ்திரியாவின் அலெக்சாண்டர் எர்லர், இத்தாலியின் ஆண்ட்ரியா வவாசோரி ஜோடியுடன் பலப்பரீட்சை நடத்தியது.

ஒரு மணி நேரம் 30 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பாம்ப்ரி, கோரன்சன் ஜோடி 6-3, 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன்னேறியது. ஆயிரம் புள்ளிகள் கொண்ட ஏடிபி மாஸ்டர்ஸ் தொடரில் யுகி பாம்ப்ரி அரை இறுதிக்கு முன்னேறுவது இதுவே முதன்முறையாகும்.

அரை இறுதி சுற்றில் பாம்ப்ரி, கோரன்சன் ஜோடி பிரான்சின் ஆர்தர் ரிண்டர்க்னெக், மொனாக் கோவின் வாலண்டைன் வச்செரோட் ஜோடியுடன் மோதுகிறது.

# சட்டமன்ற தேர்தலில் திமுகவுக்கு ஆதரவு: புகழேந்தி அறிவிப்பு

**சென்னை, மார்ச் 14:**



அதிமுகவில் சசிகலாவின் தீவிர ஆதரவாளராக பெங்களூரு புகழேந்தி இருந்தார். அவர் சிறைக்கு சென்ற பிறகு டிடிவி அணிக்கு சென்றார். அமமுக-வில் கர்நாடக மாநிலச் செயலாளராகவும் இருந்தார். பின்னர் டிடிவி தினகரனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அதிலிருந்து விலகி ஓபிஎஸ் அணியில் இணைந்தார்.

சமீபத்தில் ஓபிஎஸ் திமுகவில் இணைந்ததை விமர்சித்த புகழேந்தி "புரட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற புதிய அரசியல் கட்சியைத் தொடங்கினார். வரும் தேர்தலில் அவரது நிலைப்பாடு என்ன என்பது குறித்து எதிர்பார்க்கப்பட்ட நிலையில், முதல் அமைச்சர் மு.க ஸ்டாலினை புகழேந்தி சந்தித்துள்ளார்.

பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த புகழேந்தி கூறியதாவது: சட்டமன்ற தேர்தலில் திமுகவை ஆதரித்து பிராசரம் செய்வேன்.

எடப்பாடி தொகுதியில் அதிமுக தோற்கும். 2026 தேர்தலோடு அதிமுக, எடப்பாடி பழனிசாமி கதை முடிந்துவிடும்" என்றார்.

# 398 சமையல் எரிவாயு உருளை பதுக்கல்: தமிழ்நாட்டில் முதல்முறையாக மதுரையில் 2 பேர் குண்டர் சட்டத்தில் கைது!

**மதுரை, மார்ச் 14:**



மதுரையில் சமையல் எரிவாயு உருளை தட்டுப்பாட்டை காரணம் காட்டி, கள்ளச்சந்தையில் விற்பனை செய்வதற்காக 398 எரிவாயு உருளையை பதுக்கி வைத்திருந்த 2 பேர் தமிழ்நாட்டில் முதன்முறையாக குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்க கூட்டுப்படைகள் போர் தொடுத்து வருகின்றன. இதன் காரணமாக இந்தியாவில் எதிர்பாராத விதமாக மிகப்பெரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்தப் போர் காரணமாக உலக அளவில் எரிசக்தி விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக எரிவாயு இறக்குமதியில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் வணிக பயன்பாட்டுக்கான எரிவாயு உருளை விநியோகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் உணவகங்கள் இயங்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் வணிக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு உருளைகள் விநியோகம் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது கள்ளச்சந்தையில் தட்டுப்பாட்டை காரணம் காட்டி, பலர் ரூ.3,000 வரை விற்பனை செய்கின்றனர். வேறு வழியில்லாமல் பல உணவக நிர்வாகத்தினர் இந்த எரிவாயு உருளைகளை வாங்கி தொழிலை நடத்துகின்றனர். இதனால், உணவு வகைகளின் விலையை உணவக நிர்வாகங்கள் உயர்த்தியுள்ளன. இதேநிலை நீடிக்காது. ஒருசில நாள்களில் இந்த நிலை மாற வாய்ப்புள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், மதுரையில் சில பகுதிகளில் உணவுப்பொருட்கள் கடத்தல் மற்றும் மானிய விலை சமையல் எரிவாயு உருளை பதுக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது

இதையடுத்து குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினர் மதுரை கோவில்பாப்பாகுடி ஆத்தாளை பகுதியை சேர்ந்த பழனி என்பவரின் வீட்டின் அருகே காலியிடத்தில் சோதனை மேற்கொண்டதில் கள்ளச்சந்தையில் சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 100 மானிய விலை சமையல் எரிவாயு உருளை மற்றும் 109 வணிகப் பயன்பாட்டு எரிவாயு உருளை உள்பட மொத்தம் 209 உருளைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இதேபோன்று கோவில்பாப்பாகுடி ஆனந்தம் நகரை சேர்ந்த மதன்குமார் (27) என்பரின் வீட்டருகே சோதனை செய்தபோது சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 63 மானிய விலை சமையல் எரிவாயு உருளை மற்றும் 126 வணிகப் பயன்பாட்டு எரிவாயு உருளை உட்பட மொத்தம் 189 உருளைகளும் பறிமுதல் செய்யப்பட்டது. இரண்டு இடங்களிலும் 398 சமையல் எரிவாயு உருளைகள் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் 2 பேர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு இருவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இருவர் மீதும் மானிய விலை சமையல் எரிவாயு உருளை பதுக்கல் தொடர்பாக கள்ளச்சந்தை தடுப்புக் காவல் (குண்டர்) சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலேயே முதன் முறையாக மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார் நடவடிக்கை எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வணிகச் செய்திகள்

### கிருஷ்ணகிரியில் மாங்கூழ் ஏற்றுமதி பாதிப்பால் ரூ.2,000 கோடி இழப்பு!

**கிருஷ்ணகிரி, மார்ச் 14:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 35 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு அறுவடையாகும் தோத்தபுரி எனப்படும் பெங்களூரா, அல்போன்சா ரகத்தில் இருந்து மாங்கூழ் தயாரிக்கப்பட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 3 லட்சத்து 52 ஆயிரத்து 436 மெட்ரிக் டன் மா உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், 2.10 லட்சம் மெட்ரிக் டன் மாம்பழம் மாங்கூழ் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. இதற்காக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 23 மாங்கூழ் ஆலைகள் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் இரு ஆலைகள் உள்ளன.

இங்கு தயாரிக்கப்படும் மாங்கூழ் அமெரிக்கா, ஜெர்மனி, இத்தாலி, ரஷ்யா, சீனா மற்றும் வளைகுடா நாடுகளான துபாய், சவுதி அரேபியா, குவைத் உள்ளிட்ட நாடுகளுக்கு 3 லட்சம் டன்னும், உள்நாட்டில் 2 லட்சம் டன்னும் விற்பனை செய்யப்படுகிறது.

ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு ரூ.3,500 கோடி அந்நியச் செலாவணியும், உள்நாட்டு வர்த்தகம் மூலம் ரூ.15,000 கோடியும் கிடைக்கிறது. இந்நிலையில், ஈரான் மீதான அமெரிக்கா, இஸ்ரேல் போர் தாக்குதல் தீவிரமடைந்துள்ளதால் ஏற்றுமதி செய்யப்பட மாங்கூழ் தேக்கம் அடைந்து ரூ.2,000 கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

# ஊர்ந்து சென்று பதவியைப் பெற்றும் நன்றியில்லை; பெயரைச் சொல்லக்கூட விருப்பமில்லை! ஓபிஎஸ்

**சென்னை, மார்ச் 14:**

திமுகவில் இணைந்துள்ள முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், நேற்று தென்காசி மாவட்டத்தில் திமுகவுக்கு ஆதரவாக தனது பிரசாரத்தைத் தொடங்கியுள்ளார்.

கடையநல்லூர், சங்கரன்கோவில், வாசுதேவநல்லூரில் இன்றும் முதுகுளத்தூர், பரமக்குடி, திருவாடானை தொகுதிகளில் நாளையும் பிரசாரம் செய்கிறார்.

முன்னதாக தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் இன்று நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் பேசிய ஓபிஎஸ், தற்போதைய அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை கடுமையாக விமர்சித்துப் பேசினார்.

"எடப்பாடி பழனிசாமி ஏன் இவ்வளவு கத்துகிறார் என்று தெரியவில்லை. ஒரு கருத்தை பக்குவமாக, மக்கள் ஏற்றுக்கொள்ளும்விதத்தில் சொல்ல வேண்டும். கத்திப் பேசினால் மக்கள் கேட்பார்கள் என்றுநினைக்கிறார். அதுதவறு.

அந்த நபரின் பெயரைச் சொல்லக்கூட நான் விரும்பவில்லை. ஏனென்றால் ஊர்ந்து சென்று பதவியைப் பெற்று காலைத் தொட்டு, பதவி தந்தவருக்கே நன்றி இல்லை. ஒரு நன்றியில்லாத நபர் இன்று அரசியலில் இருக்கிறார் என்றால் அது அவராக மட்டுமே இருக்க முடியும்.

'தான் திறமையாக ஆட்சி செய்வேன், தன்னை முதலமைச்சராக்க வேண்டும்' என்று சில கைக்கூலிகளை வைத்துக்கொண்டு கட்சித் தலைமையிடம் சொல்லவைத்தார். ஆனால், மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பொதுச்செயலாளர் ஜெயலலிதா என்பதையும் மாற்றி பொதுச் செயலாளர் ஆனார். தன்னை பொதுச் செயலாளராக நியமித்துக்கொண்ட ஒரே நபர் அவராகத்தான் இருப்பார். அவர் வந்தபின்னர் 10 தேர்தலில் தோல்வியைத்தான் அடைந்தார். மக்கள் ஏற்றுக்கொள்ளமால்தான் அவர் தோல்வி அடைந்தார். அவர் கொடுக்கும் தேர்தல் அறிக்கைகள் எல்லாம் பொய். மக்கள் காதுகொடுத்து கேட்க மறுக்கிறார்கள். அவருக்கு பதவி கொடுத்தவருக்கு நன்றி சொல்லாவிட்டாலும் பரவாயில்லை, அவரை பழித்துப் பேசலாமா? துரோகம் இழைத்துவிட்டார். நன்றி மறந்தவர்களுக்கு தமிழக மக்கள் வாக்களிக்கமாட்டார்கள். வரும் தேர்தலிலும் அதுதான் நடக்கும்" என்றார்.

# வணிக பயன்பாடு சிலிண்டர் விநியோகம் 10 நாட்களில் சீரடையும்!

புதுடெல்லி, மார்ச் 14:



மேற்காசியாவில் கடந்த 12 நாட்களாக நடந்து வரும் கடுமையான மோதல் போக்கு தொடர்ச்சியாக பல்வேறு நாடுகளிலும் அத்தியாவசிய உபயோகத்திற்கான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இந்தியாவில் வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.60 மற்றும் வர்த்தக கியாஸ் சிலிண்டர் விலை ரூ.118 என அதிரடியாக உயர்ந்து மக்களை அதிர்ச்சியடைய வைத்தது.

சில இடங்களில் வணிக பயன்பாட்டுக்கான கியாஸ் சிலிண்டர் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்நிலையில், இந்தியாவில் வீட்டு உபயோகத்திற்கான கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு எதுவும் இல்லை என மத்திய பெட்ரோலிய துறை மந்திரி ஹர்தீப் சிங் பூரி 2 நாட்களுக்கு முன்பு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், நாம் பல்வேறு வழிகளில் மற்றும் வெவ்வேறு இடங்களில் இருந்து இந்தியாவுக்கான எரிபொருள் இறக்குமதி செய்வது தொடர்ந்து நடந்து வருகின்றது. இந்தியாவில் சி.என்.ஜி. மற்றும் பி..என்.ஜி. ஆகிய வீட்டு உபயோகத்திற்கான கியாஸ் சிலிண்டர் வினியோகம் முழுமையாக பாதுகாக்கப்பட்டு உள்ளது. அதனால், பயப்பட வேண்டிய தேவையில்லை என கூறினார். போர் சூழலிலும், ஆலைகளுக்கான 70 முதல் 80 சதவீத எரிபொருள் வினியோகம் இருக்கும் என அவர் கூறினார். எனினும், சிலிண்டர் பற்றாக்குறையால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெருமளவிலான ஓட்டல்கள் மற்றும் உணவு விடுதிகளை மூடக்கூடிய அபாய சூழல் காணப்படுகிறது. லட்சக்கணக்கானோர் வேலையிழப்பை சந்திக்க கூடும் என்ற குற்றச்சாட்டும் எழுந்தது.

இந்த நிலையில், இந்தியாவின் எரிபொருள் நிலை பற்றி மத்திய பெட்ரோலிய துறை மந்திரி ஹர்தீப் சிங் மக்களவையில் இன்று விளக்கம் அளித்து பேசினார். அவர் கூறும்போது, வீட்டு உபயோக எரிவாயு விநியோகத்துக்கு முன்னுரிமை தரப்படுகிறது. பெட்ரோல் டீசல், மண்ணெண்ணெய், விமான எரிபொருள் இருப்பில் எந்த குறையும் இல்லை என மத்திய மந்திரி ஹர்தீப் சிங் புரி விளக்கமளித்து உள்ளார்.

## பெங்களூரு ஓட்டல்களில் ரூ.100 கோடி அளவுக்கு வர்த்தகம் பாதிப்பு

பெங்களூரு, மார்ச் 14:

4-வது நாளாக நேற்றும் பெங்களூரு உள்பட மாநிலம் முழுவதும் கியாஸ் தட்டுப்பாடு நிலவியது. நேற்று ஒரே நாளில் 25 சதவீத ஓட்டல்கள் மூடப்பட்டதாக கூறப்படுகிறது. இதுவரை சுமார் 65 சதவீத ஓட்டல்கள் மூடப்பட்டு உள்ளன.

போதிய இட வசதி உள்ள ஓட்டல்கள் விறகு அடுப்புகளில் உணவுகளை தயார் செய்து விற்பனை செய்து வருகின்றன. அடுத்த சில நாட்களில் கியாஸ் வினியோகம் சீராகாவிட்டால் தற்போது இயங்கும் சில ஓட்டல்களும் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பெங்களூரு மட்டுமின்றி, மைசூரு, மங்களூரு, உப்பள்ளி, பெலகாவி, விஜயாப்புரா, சிக்கமகளூரு, மண்டியா, ஹாசன், துமகூரு, சித்ரதுர்கா, உடுப்பி உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் ஓட்டல்கள் மூடப்பட்டுள்ளன. ஓட்டல்கள், உணவகங்கள் மூடப்பட்டு வருவதால், வெளியூர்களில் இருந்து வந்து தங்கி தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவோர், மாணவர்கள் என லட்சக்கணக்கான மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இதுகுறித்து பெங்களூரு ஓட்டல் உரிமையாளர்கள் சங்க கவுரவ தலைவர் பி.சி.ராவ் கூறுகையில், “எங்களுக்கு சமையல் கியாஸ் சிலிண்டர் வினியோகத்தை முற்றிலும் நிறுத்திவிட்டனர். இருப்பினும் நாங்கள் இருப்பு உள்ள சிலிண்டர்களை வைத்து குறைந்த அளவு உணவுகளை தயாரித்து வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறோம்.

வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பது எங்களின் எண்ணம். கியாஸ் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல்களில் வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. 4 நாட்களில் ரூ.100 கோடி அளவுக்கு வர்த்தகம் பாதிக்கப்பட்டு உள்ளது. ஓட்டலை நம்பியுள்ள பல தொழிலாளர்களும் வேலை இழப்பை சந்தித்து வருகின்றனர். இந்த விவாகரத்தில் மத்திய, மாநில அரசுகள் விரைவாக தீர்வு காண வேண்டும்” என்று தெரிவித்தார்.

## “ரஷ்யாவிடம் நாம் எண்ணெய் வாங்க அமெரிக்க அனுமதி ஏன் தேவை?” - மக்களவையில் ராகுல் கேள்வி

புதுடெல்லி, மார்ச் 14:

“ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்க நமக்கு அமெரிக்காவின் அனுமதி ஏன் தேவை? நாம் எந்த நாட்டில் எரிபொருள் வாங்க வேண்டும் என்பதை மற்றொரு நாடு ஏன் முடிவு செய்ய வேண்டும்?” என மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பினார்.

ஈரான் போரால் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு குறித்து மக்களவையில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசும்போது, “ஈரான் போரால் எல்பிஜி சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். எரிவாயு தட்டுப்பாட்டால் உணவகங்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்க நமக்கு அமெரிக்காவின் அனுமதி ஏன் தேவை? நாம் எந்த நாட்டில் எரிபொருள் வாங்க வேண்டும் என்பதை மற்றொரு நாடு ஏன் முடிவு செய்ய வேண்டும்? இது குறித்த புதிரை நான் கண்டுபிடித்துவிட்டேன், அவர்கள் இதில் சமரசம் செய்துகொண்டுள்ளனர்” என்றார். மக்களவையில் ராகுல் காந்தி பேசும்போது மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரியைச் சுட்டிக்காட்டி, பாலியல் குற்றவாளி ஜெஃப்ரி எப்ஸ்டீனின் நண்பர் என்று புரி கூறியதாகவும், புரியின் மகள் கோடீஸ்வரர் ஜார்ஜ் சோரோஸிடமிருந்து பணம் பெற்றதாகக் கூறும் ஒரு காகித ஆவணத்தையும் காட்டினார்.

மக்களவையில் எப்ஸ்டீன் விவகாரத்தை முன்வைத்து ராகுல் காந்தி பேசியதற்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனையடுத்து, “விவாதப்பொருள் குறித்து மட்டுமே பேச வேண்டும், மற்ற விஷயங்கள் குறித்து பேச வேண்டாம்” என மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அறிவுறுத்தினார்.

## ஒரு தலைப்பட்சமாக மாறிக் கொண்டிருக்கும் இந்திய வெளியுறவுக் கொள்கை: ப.சிதம்பரம்

புதுடெல்லி, மார்ச் 14:



வளைகுடா நாடுகள் மீதான ஈரானின் தாக்குதலைக் கண்டித்து, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானத்தை இந்தியா முன்மொழிந்துள்ள நிலையில், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை எவ்வளவு ஒரு தலைப்பட்சமாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இன்னுமொரு சான்று என தெரிவித்துள்ள ப.சிதம்பரம், எது விவேகம்? எது ராஜதந்திரம்? எது சாய்மானம் இல்லாத வெளியுறவுக் கொள்கை? என கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் ‘எக்ஸ்’ பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை எவ்வளவு ஒரு தலைப்பட்சமாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதற்கு இன்னுமொரு சான்று.

ஐ.நா. சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் ஈரான் நாட்டைக் கண்டனம் செய்து கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா முன்மொழிந்தது.

ஆனால் ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடர்ந்து நடத்தும் போரையும் 1300 ஈரான் மக்கள் கொல்லப்பட்டதையும் 168 குழந்தைகள் மரணித்ததையும் கண்டித்து ஒரு வார்த்தை சொல்லவில்லை.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா மற்றும் 12 நாடுகளின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ரஷியாவும் சீனாவும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கவில்லை. எது விவேகம்? எது ராஜதந்திரம்? எது சாய்மானம் இல்லாத வெளியுறவுக் கொள்கை? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## நாடாளுமன்ற விதிகள் பொதுவானது: சபாநாயகர் ஓம் பிர்லா விளக்கம்

புதுடெல்லி, மார்ச் 14:



நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேச அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறி, சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் சார்பில் நோட்டீஸ் வழங்கப்பட்டது. இந்தத் தீர்மானம் தோல்வி அடைந்தது.

இதையடுத்து, மக்களவை நடவடிக்கைகளுக்கு ஓம் பிர்லா நேற்று தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசியதாவது: நாடாளுமன்ற விதிகள் பிரதமர் உட்பட அனைவருக்கும் பொதுவானவை. எனவேதான், என்னை சபாநாயகர் பதவியில் இருந்து நீக்கக் கோரி எதிர்க்கட்சிகள் தீர்மானம் கொண்டு வந்த நாள் முதல் நான் அவை நடவடிக்கைகளில் இருந்து விலகி இருந்தேன்.

பிரதமராக இருந்தால் கூட, அவையில் பேசுவதற்கு முன்பு சபாநாயகரிடம் அனுமதி பெற வேண்டும். அவையின் கண்ணியத்தை அனைத்துத் தரப்பினரும் காக்க வேண்டும். அவையை நடத்த பயன்படுத்தும் விதிகள் பாரம்பரியமாகப் பின்பற்றப்படுபவைதான். எனது கடமைகளை எப்போதும் நடுநிலையான, நேர்மையான முறையில் நிறைவேற்றுவேன் என்று உறுதி அளிக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## எல்பிஜி தட்டுப்பாடு: திருப்பதியில் லட்டு தயாரிப்பில் பாதிப்பா?

திருமலை, மார்ச் 14:



ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப் படைகள் நடத்தி வரும் தாக்குதல் 13-ஆவது நாளைக் கடந்திருக்கும் நிலையில், உலக அளவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளிலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் நிலை வந்துள்ளது. ஏற்கெனவே பெங்களூர், மும்பை உள்ளிட்ட இடங்களில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக உணவகங்கள் மூடப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு மட்டுமின்றி அன்றாடம் மக்கள் பயன்படுத்தும் பெட்ரோல், டீசல் கூட பற்றாக்குறை நிலவும் போக்கு ஏற்பட்டுள்ளது. அந்தவகையில், திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் லட்டு தயாரிப்பு மற்றும் அன்னதாணத்திற்கு எரிவாயு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக வந்த தகவலையடுத்து தேவஸ்தான அதிகாரி ஒருவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தேவஸ்தான அதிகாரி கூறுகையில்,திருமலையில் நாள்தோறும் சராசரியாக நான்கு லட்சம் லட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. அதே நேரத்தில், திருவிழா காலங்களில் இந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 10 லட்சமாக உயரும். திருமலையில் லட்டு தயாரிப்பு மற்றும் அன்னதானக் கூடத்துக்கு மொத்த சமையல் எரிவாயு தேவை நாளொன்றுக்கு 10 டன்களுக்கு மேல் தேவைப்படுகிறது.

அந்தவகையில் திருமலையில் சமையல் எரிவாயு விநியோகத்தில் எந்தவித பற்றாக்குறையும், இடையூறும் இதுவரை இல்லை. பக்தர்கள் வழக்கம்போல் எந்த கட்டுப்பாடுகளும் இல்லாமல் லட்டுகளை வாங்கிச் செல்கின்றனர். ஏழுமலையான் பிரசாதமாக வழங்கப்படும் சிறிய லட்டு முதல் பக்தர்கள் வாங்கிச் செல்லும் லட்டு, அன்ன பிரசாதங்கள் தடையின்றி தயாரிக்க உறுதி செய்வதற்காக, கோயில் நிர்வாகம் அடுத்த ஒரு வாரத்திற்கு போதுமான சமையல் எரிவாயுவைப் பராமரித்து வருவதாக அதிகாரி கூறினார்.

லட்டு விநியோகத்தில் முன்னுரிமை முதலில் திருமலைக்கு வழங்கப்பட்டு, பின்னர் தேவஸ்தான தகவல் மையங்கள் மற்றும் முக்கியமான கோயில்களுக்கு வழங்கப்படுகிறது. இதேபோல், திருப்பதி லட்டு தயாரிப்பு மற்றும் பிரதான அன்னதான மையத்திற்குக் குழாய் மூலம் எரிவாயு விநியோகத்தைப் பயன்படுத்துகிறது, அதே நேரத்தில் சிலிண்டர்கள் மற்ற அன்னதான அலகுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. நாளொன்றுக்குச் சராசரி யாகப் பிரதான அன்னதான மையத்தில் கிட்டத்தட்ட 75,000 பேருக்கு உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் சுமார் 2.25 லட்சம் உணவுகள் அனைத்து மையங்களிலும் வழங்கப்படுகின்றன.

## மேற்கு வங்க கலாசாரம் வித்தியாசமானது: கவர்னர் ஆர்.என்.ரவியிடம் சொன்ன மம்தா பானர்ஜி

கொல்கத்தா, மார்ச் 14:

தமிழ்நாட்டில் கடந்த 2021 முதல் கவர்னராக இருந்தவர் ஆர்.என். ரவி. அவர் தற்போது தமிழகத்தில் இருந்து மாற்றப்பட்டு, மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழகத்திற்கு கேரள ஆளுநராக இருக்கும் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகருக்கு தமிழ்நாடு கூடுதல் ஆளுநர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.மேற்கு வங்காள கவர்னராக ஆர்.என். ரவி நேற்று பதவியேற்றார். அவருக்கு கொல்கத்தா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பதவியேற்பு நிகழ்ச்சியில் மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜியும் கலந்து கொண்டார்.

அப்போது கவர்னர் ஆர்.என். ரவியிடம் பேசிய மம்தா பானர்ஜி, “மேற்கு வங்காளம் சிறப்பாக இருக்கும். மேற்கு வங்காள கலாசாரம் வித்தியாசமானது. வங்காளத்தை யாருக்கு பிடிக்குமோ அவர்களைத்தான் மேற்கு வங்காள மக்களுக்கு பிடிக்கும்” என்று கூறினார்.

தமிழக கவர்னராக ஆர்.என். ரவி இருந்த போது தமிழக அரசுடன் மோதல் போக்கை கடைபிடித்து வந்தார். இந்த நிலையில், தற்போது மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளதால் மம்தா பானர்ஜியுடன் மோதல் போக்கை கையாள்வாரா? இல்லை அனுசரணையாக செல்வாரா? என்ற கேள்வி அந்த மாநில அரசியல் வட்டாரத்தில் எழுந்துள்ளது. மேற்கு வங்காளத்தில் இன்னும் சில வாரங்களில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

## 22 பெண்களோடு திருமணம்... மனைவிகளை திருப்திபடுத்த திருட்டு: திகைக்க வைத்த பலே ஆசாமி



திருவனந்தபுரம், மார்ச் 14:

கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே ஆற்றிங்கல் பகுதியில் சில தினங்களுக்கு முன்பு சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த ஒரு மூதாட்டியின் கழுத்தில் கிடந்த 7 பவுன் தங்க சங்கிலியை மர்ம ஆசாமி பறித்துச் சென்றார். இதுகுறித்த புகாரின் பேரில் ஆற்றிங்கல் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

விசாரணையில், திருவனந்தபுரம் வட்டியூர்க்காவு பகுதியை சேர்ந்த பாகுலேயன் (வயது 56) என்பவர் நகை பறிப்பில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அவரை தேடி வந்தனர். போலீசார் தேடுவதை அறிந்த பாகுலேயன் தலைமறைவானார். இந்த நிலையில் நெய்யாற்றின்கரை பகுதியில் வைத்து அவரை மடக்கி பிடித்து போலீசார் கைது செய்தனர். பின்னர் போலீஸ் நிலையத்துக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தினர். அப்போது மனைவியை திருப்திபடுத்த நகை பறிப்பில் ஈடுபட்டது அம்பலமானது. ஒரு மனைவியா? என போலீசார் கேட்க அவர் அளித்த பதில் போலீசாரை திகைக்க வைத்தது. மாவட்டம்தோறும் மனைவிகள் இருப்பதாக கூறி தம்பட்டம் அடித்துள்ளார். அதாவது பாகுலேயன் கணவனை இழந்தவர்கள், விவாகரத்து செய்த பெண்களை குறிவைத்து அவர்களை ஏமாற்றி திருமணம் செய்து வந்துள்ளார். இவ்வாறு திருவனந்தபுரம் முதல் காசர்கோடு வரை மொத்தம் 22 பெண்களை ஏமாற்றி மணமுடித்துள்ளார்.

ஒவ்வொரு ஊருக்கு செல்லும் போதும் தனது பெயரை மாற்றி மாற்றி கூறி லீலைகளை அரங்கேற்றி வந்துள்ளார். அதன்படி இவருக்கு தாஸ், பாபு, என பல பெயர்கள் உள்ளன. மேலும் தனது மனைவிகளை திருப்திபடுத்தவும். அவர்களுக்கு விதவிதமாக நகைகளை அணிவித்து அழகு பார்க்கவும் திருட்டு மற்றும் வழிப்பறியில் ஈடுபட்டு வந்துள்ளார். பாகுலேயன் மீது கேரளாவில் 50-க்கும் மேற்பட்ட திருட்டு வழக்குகள் உள்ளன என்பன போன்ற தகவல்கள் போலீஸ் விசாரணை மூலம் அம்பலமானது.

# தமிழகம், புதுச்சேரி, கேரளம் உள்பட 5 மாநில தேர்தல் தேதி மார்ச் 16-இல் அறிவிப்பு?

புதுடெல்லி, மார்ச் 14:



தமிழகம், கேரளம் உள்ளிட்ட நான்கு மாநில சட்டப்பேரவை மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவைக்கு மார்ச் 15 அல்லது 16-ஆம் தேதி தோ்தல் தேதியை இந்திய தோ்தல் ஆணையம் அறிவிக்கும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.

கொல்கத்தாவில் பாஜகவின் ‘பரிவா்த்தன் யாத்திரை’யின் நிறைவுப் பொதுக்கூட்டம் மாா்ச் 14-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதில் பிரதமா் நரேந்திர மோடி பங்கேற்றுப் பேசுகிறாா்.

அதற்கு மறுநாள் அல்லது அதற்கு அடுத்த நாளில், அதாவது மாா்ச் 15 அல்லது 16-ஆம் தேதி மேற்கு வங்கம், தமிழகம், கேரளம், புதுச்சேரி, கோவா ஆகியவற்றின் சட்டப்பேரவைகளுக்கு தோ்தல் தேதியை இந்திய தோ்தல் ஆணையம் அறிவிக்க வாய்ப்புள்ளதாக தலைமைத் தோ்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன. அவை மேலும் கூறியதாவது:

மேற்கு வங்க சட்டப்பேரவையின் பதவிக் காலம் மே 7, தமிழகத்துக்கு மே 10, புதுச்சேரிக்கு ஜூன் 15, அஸ்ஸாமுக்கு மே 20, கேரளத்துக்கு மே 23 ஆகிய தேதிகளில் நிறைவடைகிறது. எனவே, இவற்றுக்கு வரும் மே மாதத்தில் தோ்தல் நடத்தப்பட வேண்டும்.

இந்நிலையில், மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக வாக்குப் பதிவு நடத்தும் சாத்தியம் குறித்து மாநில தலைமைத் தோ்தல் அதிகாரியிடம் தலைமைத் தோ்தல் ஆணையம் பல கட்ட ஆலோசனைகளை நடத்தியுள்ளது.

‘மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக வாக்குப் பதிவை நடத்தினால், தோ்தல் தொடா்பான வன்முறைகளை கட்டுப்படுத்த உதவும்; இந்த விஷயத்தில் இறுதி முடிவெடுக்கப்படும் முன்பு, இந்தக் காரணியும் கருத்தில் கொள்ளப்படும்’ என தோ்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஈரான் டிரோன் தாக்குதலில் இந்தியர் உயிரிழப்பு

**தெஹ்ரான், மார்ச் 14:**

டெஹ்ரான்: அமெரிக்காவின் 'சேஃப்சீ டிரான்ஸ்போர்ட்' என்ற நிறுவனத்துக்கு சொந்தமான 'சேஃப்சீ விஷ்ணு' என்ற எண்ணெய் கப்பல் நேற்று முன்தினம் இராக்கின் பஸ்ரா துறைமுகம் அருகில் சென்று கொண்டிருந்தது.

மார் ஷல் தீவுகள் கொடியுடன் சென்ற இந்தக் கப்பல் மீது ஈரான் ராணுவம் திடீர் தாக்குதல் நடத்தியது. இதில் அந்த எண்ணெய் கப்பல் தீப்பற்றியதில் இந்திய ஊழியர் ஒருவர் உயிரிழந்தார். கப்பலில் இருந்த எஞ்சிய 15 இந்திய ஊழியர்களும் மீட்கப்பட்டதாக பாக்தாத்தில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

பாரசீக வளைகுடாவில் இராக் கடல் எல்லைக்குட்பட்ட பகுதியில் மற்றொரு எண்ணெய் கப்பல் மீதும் ஈரான் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது. மால்டா கொடியுடன் வந்த இந்தக் கப்பல் கிரீஸ் நாட்டு தனியார் நிறுவனத்துக்கு சொந்தமானது.இவ்விரு தாக்குதல்களுக்கும் ஈரான் பொறுப்பேற்றுள்ளது. நீருக்கடியில் செல்லும் டிரோன் மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் கூறியுள்ளது.

## அமெரிக்காவுடன் இணைந்து ட்ரோன்களை தயாரிக்க உக்ரைன் திட்டம்: அதிபர் ஜெலன்ஸ்கி தகவல்



**கீவ், மார்ச் 14:**

அமெரிக்காவும் உக்ரைனும் இணைந்து ட்ரோன்களை தயாரிக்க திட்டமிட்டு உள்ளன என்று உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தனியார் ஊடகத்துக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு உக்ரைனை, ரஷ்யா ஆக்கிரமித்தது. அப்போது முதல் ஈரானின் ஷாஹெட் ட்ரோன்களை ரஷ்ய ராணுவம் போரில் பயன்படுத்தி வருகிறது.

ஒரே நேரத்தில் சுமார் 800-க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் உக்ரைன் மீது தாக்குதல் நடத்தின. இதனால் உக்ரைனில் பெரும் சேதங்கள் ஏற்பட்டன. ரஷ்யாவின் ட்ரோன் தாக்குதல்களை முறியடிக்க மிகக் குறைந்த விலையில் நாங்களே ட்ரோன்களை தயாரித்தோம். இதன்மூலம் ரஷ்ய ராணுவத்தின் ட்ரோன் தாக்குதல்களை வெற்றிகரமாக முறியடித்து வருகிறோம்.

தற்போது மத்திய கிழக்கில் போர் தீவிரமடைந்து உள்ளது. அமெரிக்க ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் ராணுவம் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது. ட்ரோன் தாக்குதல்களை முறியடிப்பதில் உக்ரைன் ராணுவம் நிபுணத்துவம் பெற்றிருக்கிறது. எனவே ஈரானின் ட்ரோன் தாக்குதல்களை முறியடிக்க உக்ரைன் ராணுவத்தின் உதவியை அமெரிக்கா நாடியிருக்கிறது.

எங்கள் நாட்டில் இருந்து 3 சிறப்பு குழுக்கள் மத்திய கிழக்கு பகுதிக்கு சென்று உள்ளன. இந்த குழுக்களில் தொழில் நுட்ப நிபுணர்கள், ராணுவ அதிகாரிகள், இன்ஜினீயர்கள் இடம் பெற்று உள்ளனர். அமெரிக்காவும் உக்ரைனும் இணைந்து ட்ரோன்களை தயாரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

இதுதொடர்பான பரிந்துரையை அமெரிக்க அதிபர் மாளிகையிடம் கடந்த ஆண்டு வழங்கினோம். அமெரிக்க அதிபர் மாளிகை ஒப்புதல் அளித்த பிறகு இரு நாடுகளும் இணைந்து ட்ரோன்களை தயாரிக்கும். ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு வாங்குவதை உலக நாடுகள் முழுமையாக தவிர்க்க வேண்டும். இதை கண்டிப்புடன் பின்பற்றினால் உக்ரைன் போர் விரைவில் முடிவுக்கு வரும்.

ரஷ்ய கச்சா எண்ணெய் மீதான பொருளாதார தடையை அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஒருபோதும் நீக்கக்கூடாது. ரஷ்யாவின் கச்சா எண்ணெய் விற்பனை அதிகரித்தால் அந்த நாடு மேலும் வலுவடையும். இதை தடுக்க அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஓரணியாக செயல்பட வேண்டும். ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதார தடைகளை மேலும் கடுமையாக்க வேண்டும். இவ்வாறு உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

# "ஈரான் தலைவர்களை கொல்வதை நான் பெருமையாகக் கருதுகிறேன்!" – டிரம்ப்

**வாஷிங்டன், மார்ச் 14:**

ஈரான் உடனான போரில் அமெரிக்கா வெற்றி பெறவில்லை எனச் செய்தி வெளியிடும் சில ஊடகங்கள் தவறான தகவல்களைப் பரப்புவதாக ட்ரம்ப் குற்றச்சாட்டு.



ஈரானின் பயங்கரவாத ஆட்சியை,இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், மற்றும் பிற வகைகளிலும் நாங்கள் முழுமையாக அழித்து வருகிறோம். ஈரானின் கடற்படை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டது; அவர்களின் விமானப்படை இனி இல்லை; ஏவுகணைகள், ஆளில்லா விமானங்கள் போன்ற அனைத்தும் அழிக்கப்பட்டு வருகின்றன; மேலும், அவர்களின் தலைவர்கள் பூமியின் முகப்பிலிருந்தேதுடைத்தெறியப்பட்டு விட்டனர்.

கடந்த 47 ஆண்டுகளாக உலகம் முழுவதும் அப்பாவி மக்களை அவர்கள் கொன்று குவித்தனர்;


இப்போது, அமெரிக்கவின் 47-வது ஜனாதிபதியாகிய நான், அவர்களை அழித்து வருகிறேன்.

அவ்வாறு செய்வது எத்தனை ஒரு பெரும் கௌரவம்!

இந்த சம்பவத்தில் நீங்கள் செலுத்திய கவனத்திற்கு நன்றி. என்று ட்ரம்ப் கூறினார்.

## ஹார்முஸ் ஜலசந்தியில் நூற்றுக்கணக்கில் கண்ணிவெடிகளை வீசியது ஈரான்!

**தெஹ்ரான், மார்ச் 14:**



ஹார்முஸ் ஜலசந்தி கடல் பகுதியில் நூற்றுக்கணக்கான கண்ணி வெடிகளை ஈரான் ராணுவம் வீசி உள்ளது.

அரபிக் கடலில் பெர்சியன் வளைகுடாவையும் ஓமன் வளைகுடாவையும் ஹார்முஸ் ஜலசந்தி இணைக்கிறது. இது 167 கி.மீ. நீளம், 50 கி.மீ. அகலம் கொண்டதாகும். இந்த ஜலசந்தியின் குறிப்பிட்ட சில பகுதிகளில் 33 கி.மீ. அகலம் மட்டுமே உள்ளது. அதிலும் கடல் ஆழமாக உள்ள 3 கி.மீ. அகலம் கொண்ட பகுதி வழியாகவே சரக்கு கப்பல் போக்குவரத்து நடைபெறுகிறது. இது ஈரான் கடல் எல்லையை ஒட்டி அமைந்திருக்கிறது.

தற்போது அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் ராணுவம் இடையிலான போர் தீவிரமடைந்து வரும் நிலையில் ஹார்முஸ் ஜலசந்தியில் சரக்கு கப்பல் போக்குவரத்தை ஈரான் ராணுவம் முழுமையாக முடக்கி உள்ளது. இதன் காரணமாக இந்தியா உட்பட உலகம் முழுவதும் எல்பிஜி, சிஎன்ஜி, கச்சா எண்ணெய்க்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

ஹார் முஸ் ஜலசந்தியில் சுதந்திரமான சரக்கு கப்பல் போக்குவரத்தை உறுதி செய்ய அமெரிக்கா மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடுகள் தீவிர முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதற்காக அப்பகுதியில் அமெரிக்க போர்க் கப்பல்கள் குவிக்கப்பட்டு உள்ளன. ஈரான் கடற்படையின் 60 கப்பல்கள், ஏராளமான படகுகளை அமெரிக்க ராணுவம் குண்டுகளை வீசி அழித்து உள்ளது.

இந்த சூழலில் ஹார்முஸ் ஜலசந்தியில் நூற்றுக்கணக்கான கண்ணிவெடிகளை ஈரான் ராணுவம் வீசியிருக்கிறது. கடலுக்கு அடியில் மூழ்கியிருக்கும் இந்த கண்ணிவெடிகளை ரிமோட் கண்ட்ரோல் மூலம் இயக்க முடியும். எதிரிகளின் போர்க்கப்பல்கள், சரக்கு கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியில் வரும்போது கண்ணி வெடிகளை வெடிக்கச் செய்து கப்பல்களை தகர்ப்போம் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

## அண்டை அரபு நாடுகள் மீதான தாக்குதல் தொடரும்: ஈரானின் புதிய உச்சத் தலைவர் மோஜ்தபா காமேனி அறிவிப்பு

**துபாய், மார்ச் 14:**

அண்டை நாடுகள் மீதான தாக்குதல் தொடரும் என்று ஈரானின் உச்சத் தலைவராக புதிதாக பொறுப்பேற்றுள்ள அயத்துல்லா மோஜ்தபா காமேனி அறிவித்துள்ளார். ஈரான் மீது அமெரிக்க, இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. பதிலுக்கு ஈரானும் வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க படைத் தளங்கள் மீது கடும் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில் அமெரிக்கா, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரான் உச்சத்தலைவரான அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்தார். இதையடுத்து ஈரானின் புதிய உச்சத் தலைவராக அயத்துல்லா அலி காமேனியின் மகன் மோஜ்தபா காமேனி (56) அண்மையில் தேர்வானார்.



இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அயத்துல்லா மோஜ்தபா காமேனி காயம் அடைந்ததாகக் கூறப்பட்டது. ஈரான் -அமெரிக்க, இஸ்ரேல் போரின் வேகம் அதிகரித்து வரும் நிலையில் நேற்று மோஜ்தபா காமேனி ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

தொலைக்காட்சிகளில்...

உச்ச தலைவராக பதவியேற்ற பின்னர் அவர் வெளியிட்டுள்ள முதல் அறிவிப்பாகும் இது. அவரது அறிவிப்பு ஈரானில் உள்ள தொலைக் காட்சிகளில் வாசிக்கப்பட்டது. அதில் அவர் கூறியிருப்பதாவது:

வளைகுடாவிலுள்ள அரபு அண்டை நாடுகள் மீதான தாக்குதல்களை ஈரான் நாடு தொடரும். அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான ஒரு தாக்குதலாக, ஹார்முஸ் ஜலசந்தியை தொடர்ந்து மூடிவைப்போம்.

அமெரிக்க, இஸ்ரேல் தாக்குதலில் ஒரே நேரத்தில் 165 பள்ளி மாணவிகளை இழந்தோம். இந்த தாக்குதல் உட்பட எங்களைத் தாக்கியவர்களுக்கு நாங்கள் பதிலடி கொடுப்போம். எங்கள் நாட்டின் மீதான தாக்குதலுக்கு நாங்கள் பழிவாங்குவோம். இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார். மோஜ்தபா காமேனி.

## டொனால்டு டிரம்பின் அணுகுமுறை குறித்து நியூயார்க் டைம்ஸ் ஆசிரியர் குழு எச்சரிக்கை!

**நியூயார்க், மார்ச் 14:**

உலகம் ஒரு புதிய மற்றும் மிகவும் ஆபத்தான அணு ஆயுத யுகத்திற்குள் (DANGEROUS NEW NUCLEAR AGE) நுழைந்து கொண்டிருப்பதாகவும், இந்தச் சூழலை எதிர்கொள்ளும் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப்பின் அணுகுமுறை மிகவும் கவலைக்குரியதாக இருப்பதாகவும் 'நியூயார்க் டைம்ஸ்' இதழின் ஆசிரியர் குழு எச்சரித்துள்ளது. கட்டுப்பாடற்ற அணு ஆயுதப் போட்டி பனிப்போர் காலத்திற்குப் பிறகு, அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்ட சர்வதேச ஒப்பந் தங்கள் ஒவ்வொன்றாகச் சிதைந்து வரும் நிலையில், உலகம் தற்போது "கட்டுப்பாடுகளற்ற ஒரு யுகத்தை" (UNBOUND ERA) நோக்கி நகர்ந்து வருவதாக ஆசிரியர் குழு சுட்டிக்காட்டியுள்ளது. ஈரான் மீதானத் தாக்குதல்கள் மற்றும் ரஷ்யா-சீனா உடனா னப் பதற்றங்களுக்கு மத்தியில், அணு ஆயு தங்களின் பயன்பாடு குறித்த அச்சம் மீண்டும் உலக நாடுகளிடையே மேலோங்கியுள்ளது. டிரம்ப்பின் "அதிர்ச்சியூட்டும்" அணுகுமுறை இந்த நெருக்கடியான காலக்கட்டத்தில் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் கையாளும் விதம் குறித்து ஆசிரியர் குழு தனது கட்டு ரையில் கடும் கவலைகளைப் பதிவு செய்துள்ளது. "இந்த புதிய யுகத்தை எதிர்கொள்ளும் டிரம்ப்பின் அணுகுமுறை அவரது வார்த்தைகளிலும், அவர் கையா ளும் முறைகளிலும் (MECHANICS) ஒரே நேரத்தில் அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது" என்று அந்த இதழ் சாடியுள்ளது. அணு ஆயுதங்களை ஒரு மிரட்டல் கருவியாகப் பயன்படுத்துவதும், ராஜதந்திரப் பேச்சுகளுக்குப் பதிலாக ராணுவ வலிமை யைப் பறைசாற்றும் விதமான கருத்துகளை வெளியிடுவதும் நிலைமையை மேலும் மோசமாக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, அணு ஆயுதக் கட்டுப்பாட்டு விவகாரங்களில் டிரம்ப் காட்டும் அலட்சியம் மற்றும் பொறுப்பற்றப் பேச்சு கள் உலக நாடுகளை ஒரு பாதுகாப்பற்றச் சூழலுக்குத் தள்ளுவதாக ஆசிரியர் குழு விமர்சித்துள்ளது. உலகப் பாதுகாப்பிற்கு விடுக்கப்பட்டுள்ள சவால் ஒரு காலத்தில் அணு ஆயுதப் பரவலைத் தடுக்க அமெரிக்கா தலைமையேற்று நடத்தியப் போராட்டங்கள், தற்போது டிரம்ப்பின் நிர்வாகத்தால் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளன. அணு ஆயுதக் கட்டமைப்பை நவீனப்படுத்துதல் என்ற பெயரில் பல பில்லியன் டாலர்களைச் செலவிடு வதும், மற்ற நாடுகளுடனானப் பேச்சு வார்த்தைகளைப் புறக்கணிப்பதும் நீண்ட கால அடிப்படையில் உலகை ஒரு பேரழிவுப் போருக்கு இட்டுச் செல்லும் என நியூயார்க் டைம்ஸ் எச்சரித்துள்ளது.

## இஸ்ரேலின் ரேடார் கட்டமைப்பு சிதைவு ஹிஸ்புல்லாவுடன் இணைந்து ஈரான் 41 ஆவது அலை தாக்குதல்

**டெஹ்ரான், மார்ச் 14:**

இஸ்ரேலின் ரேடார் பாதுகாப்பு கட்டமைப்பு களைச் செயலிழக்கச் செய்துள்ள ஈரான் ராணு வம் மற்றும் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை (IRGC), லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு டன் இணைந்து 'ட்ரூ பிராமிஸ்-4' (OPERATION TRUE PROMISE 4) தாக்குதல் நடவடிக்கையின் 40- ஆவது அலை தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் அத்துமீறி தாக்குதல் நடத்தியதற்கு பதிலடி தாக்குதலை ஈரான் கொடுத்து வருகிறது. போர் மூன்றாவது வாரத்துக்குள் நுழையும் நிலையில் இஸ்ரேலும் அமெரிக்காவும் எதிர்பார்க்காத வகையில் மிகக்கடுமையான பதில் தாக்குதலை கொடுத்து வருகிறது என போர் தொடர்பான சர்வ தேச அரசியல் ஆய்வாளர்கள் கூறி வருகின்றனர். ரேடார் முடக்கம் ஈரான் தாக்குதல்கள் இஸ்ரேலின் பாதுகாப்பு அரணாகக் கருதப்படும் ரேடார் வலைப்பின்னலின் முக்கியப் பகுதிகள் ஈரானால் அழிக்கப்பட்டுள்ளன. இது குறித்துப் பேசிய ஈரான் ராணுவ செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் அக்ரா மினியா, "இஸ்ரேலின் ரேடார் அமைப்புகள் அழிக்கப்பட்டுள்ளதால் , மிக முக்கியமான இலக்கு களைத் தாக்குவது முன்பை விட இப்போது எளி தாகியுள்ளது. எங்களின் டிரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிக துல்லியமாக மாறி வருகின்றன," என்று தெரிவித்துள்ளார். புரட்சிகர காவல்படை (IRGC) மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பினர் ஒருங்கிணைந்து நடத்திய இந்த 40 ஆவது அலை தாக்குதல், சுமார் 5 மணிநேரம் இடைவிடாமல் நீடித்தது. கத்ர், எமாத், கைபர் ஷெக்கன் மற்றும் ஃபத்தாஹ் ஆகிய அதிநவீன ஏவுகணைகளுடன், ஹிஸ்புல்லா அமைப்பின் நூற்றுக்கணக்கான டிரோன்களும் இந்தத் தாக்குதலில் பயன்படுத்தப்பட்டன. குறிவைக்கப்பட்ட முக்கிய இடங்கள் இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் அருகே உள்ள பால்மாச்சிம் ஏவுகணை சோதனை மற்றும் செயற்கைக்கோள் தளத்தின் கட்டுப்பாட்டு கோபு ரம் மற்றும் ஓடுதளங்கள் சேதமடைந்துள்ளன. அமெரிக்க போர் விமானங்கள் நிறுத்தப்படும் இஸ்ரேல் விமானப்படையின் முக்கிய பயிற்சித் தளமான ஓவ்தா ஈரான் டிரோன்களால் தாக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலின் உள்நாட்டுப் பாது காப்பின் இதயமாகக் கருதப்படும் சின் பெட் தலைமையகம் மீது நேரடித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இப்போரில் முதன்முறை யாக ஏய்லாட் நகரை ஈரானின் ஏவுகணைகள் தாக்கியுள்ளன.

## ஈரானில் 24 மணி நேரத்தில் 200+ இலக்குகளை தாக்கியதாக இஸ்ரேல் தகவல்

**ஜெருசலேம், மார்ச் 14:**

கடந்த 24 மணி நேரத்தில், ஈரான் அரசின் 200-க்கும் மேற்பட்ட உள்கட்டமைப்புகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலிய விமானப் படை தெரிவித்துள்ளது.



இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து ஈரானுக்கு எதிராக கடந்த பிப்.28-ம் தேதி தாக்குதல்களைத் தொடங்கின. இதையடுத்து, ஈரான் பதில் தாக்குதல்களைத் தொடங்கியது. கடந்த 14 நாட்களாக இரு தரப்பும் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், இஸ்ரேலிய விமானப் படை வெளியிட்ட தகவல்: கடந்த 24 மணி நேரத்தில் ஈரானின் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளில் உள்ள 200-க்கும் மேற்பட்ட இலக்குகளை இஸ்ரேலிய விமானப் படை தாக்கி உள்ளது. புலனாய்வு இயக்குநரகத்தின் வழிகாட்டுதலின் கீழ், டஜன் கணக்கான விமானப்படை போர் விமானங்கள் ஈரானின் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளில் விரிவான தாகுதல்களை நடத்தி முடித்துள்ளன.

பாலிஸ்டிக் ஏவுகணைகள், பாதுகாப்பு அமைப்புகள், ஆயுத உற்பத்தித் தளங்கள் உட்பட ஈரானிய ஆட்சியின் 200க்கும் மேற்பட்ட இலக்குகளில் ஏராளமான குண்டுகள் வீசப்பட்டன.

தெஹ்ரான், ஷிராஸ், அஹ்வாஸில் உள்ள ஈரானிய உள்கட்டமைப்புகளுக்கு எதிராக தொடர் அலைகளைப் போல தாக்குதல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. தெற்கு ஈரானின் ஷிராஸில் பாலிஸ்டிக் ஏவுகணைகளை தயாரித்து சேமிக்க ஈரானிய ஆட்சியால் பயன்படுத்தப்பட்ட ஒரு தளம் தாக்கப்பட்டது.

அதேபோல், தெஹ்ரானில் உள்ள வான் பாதுகாப்பு அமைப்பின் தளங்கள் தாக்கப்பட்டன. பல்வேறு ஆயுதங்கள், வான் பாதுகாப்பு அமைப்புகள், பாலிஸ்டிக் ஏவுகணைகள் ஆகியவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட பல தளங்கள் தாக்கப்பட்டன.

மேலும், மேற்கு ஈரானின் அஹ்வாஸில் உள்ள ஈரான் ஆட்சி அமைப்புகளின் பல்வேறு தலைமையகங்கள் தாக்கப்பட்டன. ஈரான் ஆட்சியின் முக்கிய கட்டமைப்புகள் மற்றும் அதன் அடிப்படைகளுக்கு ஆழமான சேதத்தை ஏற்படுத்தும் ஒரு பகுதியாக இந்த தாக்குதல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

இதேபோல், லெபனானின் பெய்ரூட், பெக்கா உள்ளிட்ட பல பகுதிகளில் உள்ள பயங்கரவாத அமைப்பான ஹிஸ்புல்லா அமைப்பின் உள்கட்டமைப்புகளுக்கு எதிராக டஜன் கணக்கான அலை அலையான தாக்குதல்கள் நடத்தப்பட்டன. சுமார் 10 ஆயுதக் கிடங்குகளை குறிவைத்து இஸ்ரேலிய விமானப் படை தொடர் தாக்குதல்களை நடத்தி முடித்துள்ளது என்று இஸ்ரேலிய விமானப் படை தெரிவித்துள்ளது.



# இளைஞர்களே தாய்த்தமிழைக் காக்க உழைப்பை மட்டும் கொடுங்கள் போதும்; உயிரை அல்ல! - முதலமைச்சர்

# காவல் துறையின் மெத்தனம் ஏற்புடையது அல்ல: ஐகோர்ட் கண்டனம்



# கட்சிப் பெயரை அறிவித்தார் சசிகலா!

# வணிக பயன்பாடு சிலிண்டர் விநியோகம் 10 நாட்களில் சீரடையும்!

# தமிழகம், புதுச்சேரி, கேரளம் உள்பட 5 மாநில தேர்தல் தேதி மார்ச் 16-இல் அறிவிப்பு?


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

14.03.2026 சனிக்கிழமை

இலவச இ-பேப்பர்